Vol.7, Issue 3 | Annual Subscription ₹ 480
Rotary News, August 2024, Chennai

ஆகஸ்ட் 2024

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

Rotary District 3212





THE MAGIC OF ROTARY

kauvery hospital Tirunelveli

# ROTARY KARMAVEERAR KAMARAJAR HEART CARE BUS




Rotary International District 3212 shares the vision of 'Karmaveerar Bharat Ratna K.Kamarajar' in up-lifting the quality of life in rural Tamilnadu. Rotary Heart Care bus takes the privilege to serve the under-privileged in villages and towns to take Heart Check-ups and save their lives by availing due medical treatment for heart problems.


Heart care bus is a Clinic on wheels. It goes to multiple locations throughout the Rotary International District 3212.

## HEART CARE BUS FEATURES

Digitalized BMI Vital Screening




Electro Cardiogram (ECG)



Echo Cardiogram




Defibrillator



Physician Consultation



Telemedicine Consultation



LEKHA ads/ Aug 24/ Rotary-1



**GG- 2341081**

**International Partners: Rotary Club of LAS VEGAS WON District 5300**

Primary Contact :
Rtn.A.S.P.Arumugaa Selvan

International Partner
PDG.Rtn.Chehab El Awar



Clubs to Contact for Heart Care Camp **Rtn. T. SUDALAIVEL** - +91 97509 55445 Rotary club of Virudhunagar Idhayam

ADVT.

# உள்ளே





42
மரங்கள் மூலம் புவிக்கு நன்றி



12
காந்திநகரில் குழந்தைகள் பண்ணைப்பள்ளி



52
இந்தூர் தெரு உணவின் ஆனந்தம்



20
எத்தியோப்பியாவில் கழுதை நூலகங்கள்



68
உடல், ஆன்மா மற்றும் பூமிக்கான தோட்டம்



28
மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிலையான வாழ்வாதாரத் திட்டம்


## ரோட்டரி நியூஸ்
### புதிய தோற்றத்தைப் பெறுகிறது

உங்கள் ஆகஸ்ட் இதழ் வடிவமைப்பில் மாற்றங்கள் சிலவற்றுடன் வருகிறது. சில தளவமைப்புகள் பக்கங்களை பிரகாசமாக்க மாற்றப்பட்டுள்ளன.

*rotarynewsmagazine@gmail.com* என்ற முகவரியில் உங்கள் கருத்துக்களை பகிரவும்.

Rotary

A publication of Rotary Global Media Network

## ரோட்டரியின் மாயாஜாலம்




*ஜூலை மாத அட்டையில் RI தலைவர் ஸ்டெஃப்னியின் வண்ணமயமான புகைப் படத்தைப் பார்க்க நன்றாக இருந்தது. அவரது செய்தி - ரோட்டரியின் மாயாஜாலம் - உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியர்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றக்கூடிய ஒரு தொலைநோக்கு அறிக்கை. காலநிலை மாற்றத்தின் தீங்கான விளைவுகள் மற்றும் RC டெல்லி பிரீமியர் எவ்வாறு பாலை வனங்களில் நிலையான விவசாயத்தை மேற் கொண்டது என்பதை எடிட்டரின் குறிப்பு நன்றாக விளக்குகிறது.*

*பிலிப் முலப்போன் MT,*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*இந்தியர்கள் ரோட்டரியை தீவிரமாக எடுத்துக்கொள்கிறார்கள் என்றும் அதை ஒரு மரியாதைக்குரிய அமைப்பாக காண்கிறார்கள் என்றும் RI தலைவர் ஸ்டெஃப்னி கூறிய கருத்துக்கள் கவர்ச்சிகரமானவை. எவ்வாறாயினும், தேர்தல்களின் சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் இந்திய ரோட்டரியின் நல்லெண்ணத்தை பாதிக்கின்றன. அவரும் PRIP கார்டன் மெக்கினிலி இருவரும் தவிர்க்கப்படக்கூடிய இந்த தகராறுகள் குறித்து கவலை தெரிவித்தனர்.*

*ரோட்டரியின் CSR திட்டங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், இந்தக் கூட்டணியின் மூலம் பல அற்புதமான விஷயங்கள் நடக்கின்றன என்பதையும் அவரிடமிருந்து கேட்பது மகிழ்ச்சி அளிக்கிறது.*

*நெறிமுறைகள் மற்றும் நேர்மையை விலையாகக் கொடுத்து விருதுகளுக்கு ஆசைப்பட வேண்டாம் என்ற RI இயக்குநர் ராஜு சுப்ரமணியனின் அறிவுரை சரியான நேரத்தில் வந்துள்ளது,*

*நெக்கண்டி அந்திரி வேதி*
*RC ஹைதராபாத் மெகா சிட்டி — D 3150*

*ஒரு பொதுவான நோக்கத்திற்காக ஒன்றுபட்டு நமது இலக்குகளில் கவனம் செலுத்தும்போது ரோட்டேரியர்கள் மிகவும் பயனுள்ளவர்களாக இருப்பார்கள். ரோட்டரியின் செயல்திட்டத்தின் மூலம் நம் சங்கத்தின் பலம் மற்றும் பலவீனத்தை மதிப்பிடலாம். மாறிவரும் உலகில், ஒருவருக்கொருவர் நலனுக்காக நம்மை அர்ப்பணித்து ஒரு சிறந்த பார்வையை நோக்கி நாம் அணிவகுத்துச் செல்ல வேண்டும்.*

*தலைவர் ஸ்டெஃப்னி சொல்வது போல், ‘‘ஒவ்வொரு திட்டமும் முடிக்கப்பட்டு, ஒவ்வொரு டாலரும் நன்கொடையாக வழங்கப்பட்டு மற்றும் ஒவ்வொரு புதிய உறுப்பினரும் சேர்க்கப் பட்டு, ஒவ்வொரு சங்கமும் மாயாஜாலத்தை உருவாக்க வேண்டும்.’’ நாம் அனைவரும் ரோட்டரியின் மாயாஜாலத்தை ஏற்றுக்கொண்டு, அவருடைய கனவை நனவாக்குவோம்.*

*V R T துரைராஜா*
*RC திருச்சிராப்பள்ளி — D 3000*

ப்ரீத்தி மெஹ்ராவின் ‘‘நவநாகரிக ஆடைகளால் கழிவுகளே அதிகரிக்கும் என்ற கட்டுரை இன்றைய குழந்தைகள் மற்றும் அவர்களின் ஆர்வமுள்ள பெற்றோர்களின் கண்களைத் திறக்கும்.

எனது மூத்த உறவினரிடமிருந்து ஆடைகள் கிடைத்தது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. அவர் பள்ளியில் எனக்கு ஒரு வருடம் மூத்தவராகவும் இருந்தார், எனவே அவர் பயன்படுத்திய பாடப்புத்தகங்களையும் நான் பெற்றேன். கல்வியாண்டு முடிந்தவுடன், புத்தகங்கள் வாங்க முடியாத ஒரு மாணவனுக்கு என் புத்தகங்கள் சென்றடையும்.

ஒவ்வொரு ஆண்டும் புதிய புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடை, காலணிகள் ஆகியவற்றை வலியுறுத்தும் இன்றைய பள்ளிகளுடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். சுற்றுச்சூழலுக்கு உகந்த சில நல்ல பழைய நடைமுறைகளுக்கு நாம் திரும்ப வேண்டிய நேரம் இது.

K ரவீந்திரகுமார்
RC கரூர் — D 3000

### புவி வெப்பமடைதல் குறித்த சரியான நேரத்தில் தலையங்கம்

ஜூலை மாத தலையங்கம், மனித பேராசை, சுயநலம் மற்றும் சுற்றுச்சூழலைப் பற்றிய சிந்தனையின்மை ஆகியவற்றின் பேரழிவு விளைவுகளை எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவையும் உலகின் பிற பகுதிகளையும் சூறையாடிய வெப்ப அலையானது கூட்டு நடவடிக்கையின் அவசரத் தேவையை அப்பட்டமாக நினைவூட்டுகிறது.

ரோட்டரியின் கவனம் செலுத்தும் பகுதியில் ஏழாவது பகுதியாக சுற்றுச்சூழல் பாதுகாப்பைச் சேர்த்தது, நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ரோட்டரியின் உறுதிப்பாட்டின் உருவகமாகும்.

உமிழ்வைத் தடுப்பதிலும், பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதிலும் காலநிலை நடவடிக்கையின் அவசியத்

தையும் ரோட்டரி நியூஸ் எடுத்துக் காட்டுகிறது.

காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கம் மற்றும் அதன் விளைவுகளைத் தணிக்க ரோட்டேரி யர்கள் ஆற்றக்கூடிய முக்கியப் பங்கை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில் சரியான நேரத்தில் முன்முயற்சி எடுத்ததற்காக பத்திரிகையை நான் பாராட்டு கிறேன். இந்த தலையங்கம் புவி வெப்பமடைதலை குறைப்பதில் மற்றும் நிலைத் தன்மையில் கவனம் செலுத்தும் திட்டங்களை உருவாக்க ரோட்டரி சங்கங்களை ஊக்குவிக்கும்.

சுபிர் ஷாம்ஸ்
RC ஷெர்தலை — D 3211

வெப்ப அலைகள் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த ஜூலை தலையங்கம் படிக்க சுவாரஸ்யமாக இருந்தது. மேலும், ராஜஸ்தானின் பாலைவனப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைப் பாதுகாக்க தடுப்பு அணைகள் கட்டுவது போன்ற RC டெல்லி பிரீமியர் செய்த பணிகள், என்னை ஒரு ரோட்டேரியன் என்பதில் பெருமையடைய செய்தது. நான்காவது ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல்ஸ் இந்திய விவசாயிகளுக்காக அர்ப்பணிக்கப் பட்டது நம் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான தருணம்.

V ராமன்
RC மயிலாடுதுறை — D 2981

காலநிலை மாற்றம் மற்றும் பூமியில் அதன் தீங்கான விளைவுகள் பற்றிய ஜூலை தலையங்கம் உண்மையிலேயே மனதைத் தொடுகிறது.

S ராகவேந்திரன்
RC ஆத்தூர் — D 2982

பருவநிலை மாற்றம் குறித்த தலையங்கம் படிக்கத் தகுதியானது மற்றும் விவசாயிகளுக்கான நான்காவது திட்ட மானியம் இந்தியாவுக்கு கிடைத்துள்ளது என்பது நம் அனைவரையும் பெருமைப்பட செய்கிறது. சிங்கப்பூரில் நடைபெற்ற RI மாநாட்டின் படங்கள், ரோட்டரியின் மாயாஜாலத்தை வாசகர்களுக்குத் தெளிவாகக் காட்டியுள்ளது.

S N சண்முகம்
RC பண்ருட்டி — D 2981

கிரண் ஜெஹ்ராவின் “விவசாயிகளின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் ரோட்டரி” என்ற கட்டுரை ரோட்டரி சங்கங்களுக்கு நடைமுறையான மற்றும் செயல்படக்கூடிய திட்ட மாதிரியை பரிந்துரைக்கிறது. சிறு விவசாயிகளுக்கு டிராக்டரை இலவசமாக வாடகைக்கு விடுவது மன உறுதியை அதிகரிக்கும்.

M பழனியப்பன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

குறைந்தபட்ச வருகை (ஜூலை இதழ்) என்ற தலைப்பில் RC தானேவைச் சேர்ந்த மூத்த ரோட்டேரியர் நானுபாய் மேத்தா எழுதிய கடிதத்தைப் பற்றிய என்னுடைய கருத்து இங்கே: நான் 2004 முதல் ரோட்டரியில் இருக்கிறேன். உறுப்பினர் வளர்ச்சி, புதிய சங்கங்களைத் தொடங்குதல், திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் TRF-க்கு வழங்குதல் ஆகியவற்றின் இலக்குகளை அடைவதில் ரோட்டரி சங்கங்கள் எப்போதும் அழுத்தத்தில் உள்ளன. மேலும், மாவட்ட ஆளுநர்கள் அனைவரும் இலக்கு சார்ந்தவர் களாக இருக்கின்றனர்.

இப்போது, கிட்டத்தட்ட அனைத்து DG-க்களும் சங்க உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டிய தில்லை, மாறாக ரோட்டரி உணர்வு உள்ளவர்களை சேர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். வழக்கமான கூட்டங்களில் குறைந்தபட்ச வருகையை உறுதி செய்வது சங்கத் தலைவர்களின் கடமையாகும். ஆனால் ரோட்டரியின் உணர்வை எவ்வாறு வளர்ப்பது? புதிய உறுப்பினர்களுக்கான நோக்குநிலை திட்டத்தில் கலந்துகொள்வதே ஒரே வழி. உறுப்பினர் வளர்ச்சியில் வெறும் எண்ணிக்கையை அடைவதை விட தரமான ரோட்டேரியர்களை உறுதிப்படுத்த கொள்கை முடிவு தேவை.

S மோகன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

ஜூலை **1, 2024** முதல், எங்கள் மின்பதிப்பு சந்தா ரூ.420-யிலிருந்து ரூ.**320** என திருத்தப்பட்டுள்ளது.

**அட்டையில்:** குழந்தைகளுக்கான விவசாய அமர்வுகளை சித்தரிக்கும் ஒரு விளக்கப்படம், RC காந்திநகர், RID 3055-ன் முன்முயற்சி.
**வடிவமைப்பு:** S கிருஷ்ணப்ரதீஷ்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

RI தலைவரிடமிருந்து...




# சவாலில் இருந்து வாய்ப்பு வரை

ரோட்டரியின் மாயாஜாலம் மூலம் உலகை நாம் உண்மையிலேயே மாற்ற வேண்டுமானால், நமது சங்கத்தில் ஒன்றிணைந்த உணர்வை வளர்க்க வேண்டும்.

சில நேரங்களில், சூழ்நிலைகள் சங்கங்களை மாற்றங்களைச் செய்ய கட்டாயப்படுத்துகின்றன. ஆனால் செயலில் ஈடுபடுபவர்களாகிய நாம், ஒவ்வொரு தடைக்கும் பின்னால் ஒரு வாய்ப்பு இருப்பதை அறிவோம்.

மசாசூசெட்ஸில் உள்ள RC ஹோலியோக் கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பிறகு அதிகரித்து வரும் செலவுகள் காரணமாக அதன் சந்திப்பு இடத்திலிருந்து மாற கட்டாயப் படுத்தப்பட்டது, ஆனால் உறுப்பினர்கள் இந்த பின்னடைவை பலமாக மாற்றினர். சங்கம், எந்த கட்டணமும் இல்லாத ஒரு சமூக நூலக அறையில் சந்திக்கத் தொடங்கியது மற்றும் அருகிலுள்ள உணவகத்திலிருந்து மதிய உணவைப் பெற்றது. மதிய உணவு ஒரு நபருக்கு $10 செலவாகும், ஆனால் அது ஒவ்வொருவரின் விருப்பம், எனவே கூட்டத்தில் கலந்துகொள்ள யாரும் பணம் செலவழிக்க வேண்டியதில்லை. சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நியாயமாக செயல்படுவதற்கு என்ன ஒரு சிறந்த வழி.

இந்த மாற்றத்தைச் செய்ததில் இருந்து, ஹோலியோக் சங்கம் 13 உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. அதன் உறுப்பினர் வளர்ச்சியின் ஒரு பகுதி சங்கத்தின் உள்ளடக்கிய உணர்வின் காரணமாக இருக்கலாம் என்று நான் சந்தேகிக்கிறேன். இதுவே ஒன்றிணைந்த உணர்வின் முதல் படியாகும்.

சங்க அனுபவத்திலிருந்து உறுப்பினர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று நீங்கள் கேட்டால், உங்கள் சங்கம் அந்த எதிர்பார்ப்பு களைப் பூர்த்தி செய்யவில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். மாற்று சங்க மாதிரிகள் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதால், உற்சாகமான வழிகளில் உங்கள் சங்கத்தை மறுவடிவமைப்பதற்கான வாய்ப்பாக இதை நினைத்துப் பாருங்கள்.

அனைத்து உறுப்பினர்களும் தாங்கள் இருக்க வேண்டிய இடத்தில் இருப்பதாக உணரும்போது சங்கங்கள் தவிர்க்க முடியாததாகி விடும். என்னைப் பொறுத்தவரை, ரோட்டரியின் மாயாஜாலத்தை பற்றவைக்கும் தீப்பொறி என்பது ஒன்றிணைந்த உணர்வு தான்.

சங்க உறுப்பினர்களிடமிருந்தும் நீங்கள் சேவை செய்யும் சமூகத்திடமிருந்தும் நீங்கள் கருத்துக்களைப் பெறும்போது, அந்த கருத்துக் களைத் தொடருமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். செயல் திட்டம் வெற்றிக்கான பாதையைக் கண்டறிய உங்களுக்கு உதவும், மேலும் உங்கள் வழியை நீங்கள் ஒன்றிணைந்த உணர்வோடு ஒளிரச் செய்தால், அந்த பாதை உங்கள் சங்கம், உங்கள் சமூகம் மற்றும் உலகிற்கு பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்.

**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

புகைப்படம்: கிறிஸ்டின் ஆம்பிரஸ்டர்



# துயரத்தின் மொழியும் நம்பிக்கையும்

பெரும்பாலான நேரங்களில், குறிப்பாக நள்ளிரவில் கூட 20–30 செய்திகள் இன்பாக்ஸை ஸ்பேம் செய்யும் போது, வாட்ஸ்அப் ஒரு தொல்லையாக இருக்கிறது. ஆனாலும் சமீபத்தில் எனது நண்பர் ஒருவர் அனுப்பிவைத்த தகவல் என் மனதில் ஆழமாகப் பதிந்தது. விலைமதிப்பற்ற பாடத்தை எடுத்துச் சொல்லும் விஷயத்தை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அனுபவமும் உற்சாகமும் நிறைந்த அந்த ஜெர்மன் எழுத்தாளர் ஃபிராங் காஃப்கா, திருமணமும் செய்து கொள்ளவில்லை. அவருக்கு குழந்தைகளும் இல்லை. ஒரு முறை பெர்லினில் உள்ள பூங்கா ஒன்றில் ஒரு சிறுமியைச் சந்தித்தார். தமக்கு மிகவும் பிடித்தமான பொம்மையை இழந்துவிட்டதற்காக அந்த சிறுமி அழுது கொண்டிருந்தாள். அதைத் தேடுவதற்கு அவளுக்கு அவர் உதவினார். ஆனால், கிடைக்கவில்லை. உடனே அவர், அச்சிறுமியிடம் நாளை மீண்டும் வந்து தேடலாம் என்று யோசனை கூறினார். இரண்டாம் நாளும் பொம்மை கிடைக்காத நிலையில், அவர், அந்த சிறுமியிடம் பொம்மை கொடுத்ததாக ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அந்த கடித்ததில், ''அழவேண்டாம் நான் உலகத்தைக் காணச் செல்கிறேன். திரும்பி வந்ததும் எனது சாகசங்கள் பற்றி உனக்கு கடிதம் எழுதுகிறேன்'' என்று பொம்மை உறுதியளிப்பது போல் இருந்தது.

இப்படி ஒரு கதை இனிமையாகத் தொடங்கியது. அவர்களின் அடுத்தடுத்த சந்திப்புகளின்போது காஃப்கா, அற்புதமான சாகசங்களை விவரிக்கும் பொம்மையின் கடிதங்களை சிறுமிக்கு படித்துக் காண்பிப்பார். மேலும் அந்த கதைகள் மிக அற்புதமாக இருப்பதைக் கண்டு சிறுமியும் மகிழ்ச்சி அடைந்தாள்.

ஒருநாள் காஃப்கா ஒரு பொம்மையை வாங்கி அந்தச் சிறுமியிடம் கொடுத்தார். அவளுடைய பொம்மை பெர்லினுக்குத் திரும்பிவிட்டது என்று கூறினார். ஆனால், ''இது நான் வைத்திருந்த பொம்மை போல் இல்லை'' என்று அந்த சிறுமி கூறினாள். அப்போது காஃப்கா, அந்த சிறுமியிடம் மற்றொரு கடிதத்தைக் கொடுத்தார். அதில், ''பயணங்கள் என்னை மாற்றிவிட்டது'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து அச்சிறுமி புதிய பொம்மையை மார்போடு அணைத்துக் கொண்டு வீட்டுக்கு எடுத்துச் சென்றாள்.

ஓராண்டுக்குப் பிறகு காஃப்கா இறந்தார். அதற்கு சில ஆண்டுகளுக்குப் பிறகு பெண்ணாக வளர்ந்துவிட்ட அந்த சிறுமி, பொம்மைக்குள் ஒரு கடிதம் இருப்பதை அறிந்தார். காஃப்கா கையெழுத்திட்டிருந்த அந்த கடிதத்தில் மனதைக் கவரும் ஒரு குறிப்பு இருந்தது. ''நீங்கள் விரும்பும் எந்த பொருளையும் ஏதாவது ஒரு காலகட்டத்தில் இழக்க நேரிடும். ஆனால், அன்பு மட்டும் வேறு உருவத்தில் வெளிப்படும்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கதையும், இந்த மாதத்தில் எழுதப்பட்ட தலையங்கமும் நீண்டகால நோய்கள், துயரமான விபத்துகள் அல்லது திடீர் மாரடைப்பு போன்ற காரணங்களால் அன்பானவர்களை இழந்த ரோட்டேரியன்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. ஒன்று அல்லது அதற்கு மேலானவர்களை இழந்ததன் மூலம் கோவிட் தொற்று நமது இதயத்தை துளைத்துவிட்டது. சில நேரங்களில் மக்கள் நீண்டதூர துயரத்தை கடந்து செல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் பொது முடக்கத்தின் போது இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வது என்பது சாத்தியமற்றதாக இருந்தது.

2020-ம் ஆண்டில் ஆப்பிரிக்காவில் சிறுநீரக நோயால் தந்தை இறந்தபோது அமெரிக்காவில் இருந்த நைஜீரிய எழுத்தாளர் சிமமண்டா அதிச்சி, தனது நீண்டதூர துயரத்தை கவிதையாக எழுதியிருந்தார். ''தொற்றுப் பரவலால் உலகெங்கிலும் விமானப் போக்குவரத்து இல்லை. தந்தைக்கும் மகளுக்கும் உள்ள உறவு என்ன என்பது அனைவருக்கும் தெரியும். எனது தந்தையின் இறுதிச்சடங்கில் நான் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது'' என நெஞ்சை உலுக்கும் வகையில், மிகுந்த மனவலியுடன் அவர் எழுதிய கவிதை நியூயார்க் சஞ்சிகையில் வெளியானது. அவரின் கவிதையிலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்டுகிறேன். ''துயரம் என்பது கொடூரமான கல்வி. துக்கம் என்பது எவ்வளவு கொடூரமானது, அதை ஏன் நம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பதையும், மேலோட்டமாக இரங்கல் தெரிவிப்பவர்கள் யார் என்பதையும் நாம் உணர முடியும். மொழிகள் மூலமான துயரம் என்ன? மொழி தெரியாமல் நாம் துயரத்தை எப்படி புரிந்துகொண்டோம் என்பதையும் தெரிந்துகொள்ள முடியும்.

நம்மில் சிறந்தவர்களுக்குக்கூட மிக முக்கியமான நேரத்தில் வார்த்தைகள் வெளிவராது. ஆனால், காஃப்கா, அந்த சிறுமிக்கு எழுதியபோது அதற்கான வார்த்தைகளை கண்டுபிடித்து எழுதியுள்ளார். ஆனால், இறுதியில் அவர் கூறிய வார்த்தைகள் ''அன்பு மற்றொரு வழியில் வெளிப்படும்'' என்பதுதான். அது வேறு எல்லாவற்றையும்விட நமக்கு அதீத நம்பிக்கையையும், ஆறுதலையும் அளிக்கிறது.

ரஷீதா பகத்

Do you know someone who is advancing women in Rotary?

NOMINATIONS DUE 31 AUGUST

*for the*


# SYLVIA WHITLOCK LEADERSHIP AWARD



Dr. Sylvia Whitlock is a Rotary pioneer, an educator, a humanitarian, and a longtime advocate for women in Rotary.

**Any Rotarian or Rotaractor can nominate one member for consideration from 1 to 31 August.**
https://bit.ly/SWL-Award

Rotary



# RI இயக்குனர் செய்தி

## தொடர்ந்து மாயாஜாலத்தை உருவாக்குவோம்

புதிய ரோட்டரி ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்கும் போது, பல சாத்தியக்கூறுகள் நம் கண் முன் விரிகிறது. நம் சமூகங்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் நிறைந்த இந்த அற்புதமான பயணத்தின் தொடக்கத்தை ஜூலை குறிக்கிறது. இந்தப் புதிய அத்தியாயத்தைத் தொடங்கும்போது, ரோட்டரியின் உணர்வையும், நம் அனைவரையும் ஒன்றிணைக்கும் சேவை ஆற்றலையும் கொண்டாடுவோம். புதிய ரோட்டரி ஆண்டான 2024–25-க்கு உங்களை வரவேற்கிறேன்.

நம் சமூகங்களுக்குச் சேவை செய்யவும், புதிய ஒத்துழைப்புகளை உருவாக்கவும், நம் சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருடன் வேடிக்கை மற்றும் கூட்டுறவுகளை அனுபவிக்கவும் புதிய செயல்பாடுகளை நாம் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ரோட்டரியர்கள் தங்கள் சங்கங்களிலும் சமூகங்களிலும் தங்கள் மாயாஜாலத்தை நிகழ்த்த புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் போது, ஒரு பிரபலமான பாடலின் வரிகள் என் நினைவிற்கு வருகின்றன:

யாரோ, எங்காவது விரைவில் மாற்றம் செய்வார்கள் என்று நாம் நாளுக்கு நாள் பாசாங்கு செய்ய முடியாது. நாம் அனைவரும் கடவுளின் பெரிய குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம், உண்மை, உங்களுக்குத் தெரியும், அன்பு மட்டுமே நமக்குத் தேவை. நாம் தான் உலகம். நாம் தான் அதன் குழந்தைகள். நாம் தான் ஒரு பிரகாசமான நாளையை உருவாக்குகிறோம், எனவே கொடுக்க ஆரம்பிக்கலாம். நாம் செய்யும் ஒரு தேர்வு இருக்கிறது. அதனால் நாம் நம் உயிரைக் காப்பாற்றுவோம். நீங்களும் நானும் ஒரு நல்ல நாளை உருவாக்குவோம் என்பது தான் உண்மை. (மைக்கல் ஜாக்ஸன் மற்றும் லயனல் ரிச்சி எழுதிய We are the world ஆங்கில பாடல்).

இந்த ஆண்டு நம்முடைய கருப்பொருளான, தி மேஜிக் ஆஃப் ரோட்டரி என்பது ஒரு நினைவூட்டல் மற்றும் சவாலாகும். ரோட்டேரியர்கள் உலகம் முழுவதும் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மாயாஜாலத்தை உருவாக்கி வருகின்றனர். போலியோவை ஒழிப்பது முதல் உலகெங்கிலும் உள்ள சமூகங்களில் எண்ணற்ற உயிர்களைத் தொடுவது வரை, கணிசமான மக்களின் பெரிய பிரச்சினைகளை பாதிக்கும் வகையில் மாயாஜாலத்தை உருவாக்கும் திறனை வளர்ப்பதே இப்போது சவாலாக உள்ளது.

நாம் முன்னோக்கிச் செல்ல, ரோட்டரி பற்றிய உங்கள் புரிதலை ஆழப்படுத்துங்கள். நம் அன்பான அமைப்பின் வளமான வரலாறு மற்றும் கலாச்சாரத்தை பற்றி அறிந்துக் கொள்ளுங்கள். ரோட்டரி இன்டர்நேஷனல், உங்கள் மாவட்டம் மற்றும் சங்கம் ஆகியவற்றின் வரலாறு மற்றும் நாம் செய்யும் விலைமதிப்பற்ற பணிகள் குறித்து உங்கள் சங்கங்களுக்குக் கற்பிக்கவும். செயலில் ஈடுபடுவதன் மூலம் நமது உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதில் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். புதிய நபர்களைச் சேர்க்கும் போது, வெறும் உறுப்பினர்களாக மட்டும் இல்லாமல், அர்ப்பணிப்புள்ள ரோட்டரியர்களாக மாறக்கூடியவர்களைத் தேடுவோம்.

நம் சமூகங்களுடன் இணைந்து, நாம் சிறப்பாகச் செய்வதைச் செய்யுங்கள்-சேவை! சேவை செய்யும் போது, நம்மின் அனைத்து நல்ல வேலைகளையும் பகிர்ந்து கொள்வோம், ஏனெனில் பொது உருவம் என்பது நமது நோக்கத்தில் பங்களிக்கக்கூடிய ஒத்த எண்ணம் கொண்ட நபர்களை பணியமர்த்துவதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். இந்த ரோட்டரி ஆண்டை சேவை, கூட்டுறவு மற்றும் நேர்மறையான மாற்றத்தின் பயணமாக மாற்றுவோம்.

நமது சமூகங்களில் நம்பிக்கையை நாம் தொடர்ந்து உருவாக்க வேண்டியிருக்கும் அதே வேளையில், நம் சங்கங்களிலும் பின்தங்கியவர்களின் வாழ்க்கையிலும் மாயாஜாலத்தை உருவாக்குவதற்கான நேரமும் இது. இந்த ரோட்டரி ஆண்டு உங்களுக்கு ஒரு சிறந்த ஆண்டாக அமையட்டும்.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

# கனடாவின் நாட்டுப்புறத் தலைநகரம்



சிங்கப்பூரிலிருந்த நட்பு இல்லம் முழுவதும் “யாஹூஹூஹூ!” என்ற கத்தல்கள் எதிரொலித்தன. உறுப்பினர்கள் கால்கரி மாநாட்டு அரங்கில் கௌபாய்த் தொப்பிகளுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள், கனடாவின் மேற்குப் பகுதிக்கான தங்கள் பயணத்தைப் பதிவு செய்துகொள்ள வரிசையில் நின்றார்கள்.

கோடை ரோடியோக் கொண்டாட்டத்துக்குப் புகழ் பெற்ற நாட்டுப்புற அழகைக் கொண்ட நகரமான கால்கரி-யில் ஜூன் 21 முதல் 25 வரை நடைபெறும் RI மாநாட்டில் அதே கௌபாய் மகிழ்ச்சிக் கத்தல்கள் கண்டிப்பாக எதிரொலிக்கும். கால்நடைத் தொழில்துறை வரலாற்றால் “பசு நகரம்” என்று செல்லமாக அழைக்கப்படும் கால்கரிக்கும் நாட்டுப்புற இசைத் தாக்கங்களைக் கொண்ட சமீபத்திய இசைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ள பியான்சே-க்கும்கூட ஓர் இணைப்பு உண்டு. “டெக்ஸாஸ் ஹோல்ட் தெம்” என்ற பாடலைப் பியான்சேவுடன் இணைந்து எழுதிய ஒருவர் கால்கரியில் வளர்ந்தவர், அதைக் கனடாவின் நாட்டுப்புறத் தலைநகரம் என்று அழைக்கிறவர்.

இங்குள்ள தேசிய இசை மையம் கண்டிப்பாகப் பார்க்கவேண்டியது, கனடிய நாட்டுப்புற இசைப் புகழ்க் கூடம் ஒன்றைக் கொண்டது. பல விதமான காட்சிப்பொருட்களைக் கொண்ட இந்த இசை அருங்காட்சியகத்தில் நாட்டுப்புற இசை நட்சத்திரம் ஷானியா டுவெய்ன் பற்றிய காட்சி அரங்கத்தையும் ரோலிங் ஸ்டோன்ஸால் பயன்படுத்தப் பட்ட நடமாடும் பதிவுக் கூடத்தையும் காணலாம்.

கால்கரி ஸ்டாம்பேட் மைதானத்தில் நடைபெறும் இந்த மாநாட்டின் நேரம் மிகச் சரியானது. மாநாட்டுக்குப் பிறகு, நீங்கள் வட அமெரிக்காவின் இன்னொரு பகுதியில் விடுமுறையைக் கொண்டாடலாம், பிறகு, ஜூலை 4–13ல் இங்கு திரும்பி ரோடியோ-வைப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, இங்கிருந்து ரயில் மூலம் ராக்கி மலைகளுக்குச் செல்லலாம், பான்ஃப் தேசியப் பூங்காவின் அழகான இயற்கைக் காட்சி களை ரசிக்கலாம். 1 ஜூலை அன்று, உள்நாட்டுக் காட்சி அரங்கம், தெருத் திருவிழா, வாண வேடிக்கைக் காட்சி களுடன் கனடா நாளைக் கொண்டாடக் கால்கரி உங்களை அழைக்கிறது.

அநேகமாக நீங்கள் கௌபாய்த் தொப்பி அல்லது காலணிகளுடன்தான் இந்த நகரத்திலிருந்து கிளம்புவீர்கள்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org

| உலக ரோட்டரி எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | 36,526 | ரோட்டரியினர் | 1,144,423 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | 8,673 | ரோட்டராக்டர்கள் | 114,625 |
| இன்டராக்ட் சங்கங்கள் | 14,781 | இன்டராக்டர்கள் | 340,455 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | 13,502 | | |

*As on July 16, 2024*

**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. **ஆசிரியர்: ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

T N ராஜு சுப்ரமணியன் RID 3141
RI இயக்குனர் மற்றும்
RNT தலைவர்

அனிருதா ராய்சௌத்ரி RID 3291
RI இயக்குனர்

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF அறங்காவலர்

ராஜேந்திர K சாபூ RID 3080

கல்யாண் பானர்ஜி RID 3060

சேகர் மேத்தா RID 3291

அசோக் மஹாஜன் RID 3141

P T பிரபாகர் RID 3234

Dr மனோஜ் D தேசாய் RID 3060

C பாஸ்கர் RID 3000

கமல் சங்வி RID 3250

Dr மகேஷ் கோட்பாகி RID 3131

A S வெங்கடேஷ் RID 3234

குலாம் A வஹன்வதி RID 3141

**RI Directors-elect**

முருகானந்தம் M RID 3000

நாகேஷ் K P RID 3191

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2024–25)

மகாதேவ பிரசாத் N S RID 3192
தலைவர், ஆளுநர் குழு

அகில் மிஸ்ரா RID 3261
செயலாளர், ஆளுநர் குழு

ராஜா கோவிந்தசாமி R RID 3000
பொருளாளர், ஆளுநர் குழு

ராக்கி குப்தா RID 3056
ஆலோசகர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

## TRF தலைவரிடமிருந்து...

# உறுப்பினர்களே மாயாஜாலம்



நம்முடைய பல ரோட்டரி மரபுகளை நான் விரும்புகிறேன், குறிப்பாக நமது சின்னம்: சக்கரம். நான் எனது ரோட்டரி முள் அணியும்போது, புதிய சங்கங்களின் லோகோவைப் ரசிக்கும்போது அல்லது ஒரு தன்னார்வலரின் டி-ஷர்ட்டில் அச்சின்னத்தைக் காணும்போது, அந்த சக்கரம் பிரதிபலிக்கும் சாத்தியக் கூறுகளால் நான் ஈர்க்கப் படுகிறேன்.

ரோட்டரியின் ஆரம்பத்தில், நமது முன்னோர்கள் அதை ஒரு கியர் என்று கற்பனை செய்தனர், ஒரு திடமான இயந்திரத்தின் பகுதியாக பல பெரிய விஷயங்களை அது செய்கிறது. அந்த கியர் அதையும் செய்கிறது, மேலும் பலவற்றையும் செய்கிறது. என்னைப் பொறுத்தவரை, இது உலகில் நல்லதைச் செய்வதற்கான நமது பயணத்தின் சுழற்சிகளையும் இயக்கத்தையும் குறிக்கிறது.

பல்வகை சங்கங்களில் நாம் உறுப்பினர்களை ஈடுபடுத்தும் போது, தி மேஜிக் ஆஃப் ரோட்டரி நடக்கிறது. உறுப்பினர்கள் - புதியவர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் - ஒருவருக் கொருவர் மற்றும் அவர்களின் சமூகங்களுக்கு தங்கள் அர்ப்பணிப்பை ஆழப்படுத்து கிறார்கள். மேலும் அந்த உள்ளூர் ஈடுபாடு கவனத்தையும் அதிக உறுப்பினர்களையும் ஈர்க்கிறது.

படிப்படியாக, புதிய உறுப்பினர்கள் தங்கள் சங்கம் உலகில் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த அமைப்பின் ஒரு பகுதியாக உணர்கிறார்கள். அவர்கள் அறக்கட்டளையைப் பற்றி அறிந்து, அதை ஆதரிக்கிறார்கள், ஒருவேளை மானியத்திற்கு கூட அவர்கள் விண்ணப்பிக்கலாம். போலியோவை ஒழிக்கும் இயக்கத்தின் ஒரு பகுதியாக அவர்கள் தங்களைப் பார்க்கிறார்கள்.

நம் உறுப்பினர்களின் அனுபவம் ஆழமடைவதால், ரோட்டரிக்கான அவர்களின் அர்ப்பணிப்பு அனைத்து மட்டங்களிலும் அதிகரிக்கிறது. நம் தாக்கத்தை பொதுமக்கள் பார்க்க, ரோட்டரி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறுகிறது. புதிய உறுப்பினர்கள் இணைவார்கள், புதிய சங்கங்கள் உருவாகும், சுழற்சி தொடரும். சக்கரத்தின் ஒவ்வொரு சுழற்சியிலும், நாம் ரோட்டரி மற்றும் நம் அறக்கட்டளையை வளர்க்கிறோம்.

சங்கங்களுக்கும் நம் அறக் கட்டளைக்கும் இடையே உள்ள இந்த மாயாஜால தொடர்பை உறுதிப்படுத்த எண்ணற்ற வழிகள் உள்ளன. உதாரணமாக, 100% பால் ஹாரிஸ் ஃபெலோ சங்கங்கள், இதில் ஒவ்வொரு உறுப்பினரும் பால் ஹாரிஸ் ஃபெலோவாக இருப்பார்கள், எவ்வாறு அறக்கட்டளையுடன் சங்கங்கள் ஈடுபாடுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டுகிறது. சில சங்கங்கள் இதை ஒரு சவாலாக கருதுகிறது, RC கிரசண்ட் (கிரீன்ஸ் போரோ), நார்த் கரோலினா போன்ற சில சங்கங்கள், அதன் 125 உறுப்பினர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் பால் ஹாரிஸ் கூட்டாளிகள், பயனாளிகள் மற்றும் சஸ்டைனிங் உறுப்பினர்கள்.

ஆனால் நீங்கள் ஒரு வித்தியா சத்தை உருவாக்க அத்தகைய அசாதாரண சங்கத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

நான் மார்க்கின் மேஜிக்கல் மார்கர்ஸ் என்று அழைக்கும் இந்த மாத இலக்கை நினைவில் கொள்ளுமாறு அனைத்து ரோட்டரி உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன்: ஆகஸ்ட் 31-ம் தேதிக்குள் உங்களால் இயன்றதை வருடாந்திர நிதிக்கு பங்களிக்க வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் உறுதியேற்கவும். *rotary.org/give*-ல் மறப்பதற்கு முன், இப்போதே செய்யுங்கள்.

உங்கள் உதவியுடன், ரோட்டரி யின் அந்த மாபெரும் சக்கரத்தையும் அதன் அறக்கட்டளையையும் சரியான திசையில் அதனால் சுழல வைக்க முடியும்.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்



# காந்திநகரில்
# குழந்தைகள் பண்ணைப்பள்ளி

ரஷீதா பகத்



"குழந்தைகள் பண்ணைப் பள்ளி" என்ற தலைப்பில் காந்திநகர் ரோட்டரி சங்கம் (RID 3055) ஏற்பாடு செய்திருந்த வேடிக்கைகள் நிறைந்த விவசாய முன்முயற்சி அமர்வில் 30 பள்ளிக் குழந்தைகள் கலந்து கொண்டனர். இயற்கை மற்றும் விவசாயிகளின் கடின உழைப்பால் நமக்கு கிடைக்கும் உணவுடன் தொடர்புடைய இந்த அமர்வு உற்சாகமான நாளாக அமைந்திருந்தது.

7 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு உகந்த வகையில் இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது. "இயற்கையான, நிலையான விவசாயம் மற்றும் சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய வளமான விவசாய அனுபவத்தை பெறும் வாய்ப்பை குழந்தைகளுக்கு தரும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு எங்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது" என்கிறார் சங்கத்தின் செயலர் அமித் கோஹல்.

ஆனால், இந்த பயிற்சியின் பின்னணியில் மூளையாகச் செயல்பட்டவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் நிதின் பதாரியாதான். உள்ளூரில் உள்ள படித்த விவசாயிகளுடன் தொடர்புகொண்டு, அவர்களின் நிலத்தை பயன்படுத்தி குழந்தைகளுக்கு விவசாய அனுபவத்தை கற்றுக்கொடுக்க காரணமாக இருந்தவர். "தற்போது முக்கியமான விவசாயத் தொழிலிலிருந்து பலரும் விலகி நிற்கும் நிலையில், விவசாயம் என்றால் என்ன?, வயல்கள், பயிரிடுதல், ஊட்டச்சத்து நிறைந்த விளைபொருள்கள், விவசாயத்தில் உள்ளூர் கால்நடைகளின் பங்கு, பழங்கால விவசாய உபகரணங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான விவசாயத்திற்கான கூட்டுமுயற்சி ஆகியவை பற்றி குழந்தைகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது".

இந்த உயரிய நோக்கத்திற்காக சங்கம் ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளாக உழைத்துவந்துள்ளது என்கிறார் பதாரியா. காந்திநகரைச் சுற்றியுள்ள 60,000-த்துக்கும் மேலான குழந்தைகள் இந்த வேடிக்கையான, பொழுது போக்கான, கற்றல் அனுபவத்தை தரும் திட்டத்தில் பங்கேற்றனர் என்கிறார் இத்திட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட நிதின் பதாரியா.

குழந்தைகளுக்கான இந்த முன்முயற்சியை விளக்கிய அவர், இதற்காக காந்திநகரில் உள்ள விவசாயப் பண்ணையைத் தேர்ந்தெடுத்ததாக கூறினார். இங்கு குழந்தைகள் கொய்யா, மாம்பழம், ஆப்பிள் போன்ற பழமரங்கள் மற்றும் கொத்தமல்லி, புதினா, மூலிகைச் செடிகள் உள்ளிட்டவற்றை வளர்ப்பதன் கற்றல் அனுபவத்தை பெறமுடியும். மேலும் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான தோட்டத்துக்கு காயற்கறிகள் மற்றும் பழங்கள் சிற்றுண்டியின்போது வழங்கப்படும். காலையில் குழந்தைகள் வந்ததும் அவர்களுக்கு முளைவிட்ட கொண்டகடலை, பாசிபருப்பு இவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி வழங்கப்படுகிறது. அனைத்து குழந்தைகளும் இதைச் சாப்பிடுவது கட்டாயமாகும். அவர்களும் விரும்பி சாப்பிடுவார்கள்.

"அங்கிருக்கும் மேடையில் குழந்தைகள் விளையாடுவதற்கும், அவர்கள் விரும்பும் பொருளைக் கட்டுவதற்கும் தேவையான களிமண் மற்றும் மணல் உள்ளது. அவர்களால் வீட்டில் செய்ய முடியாததை அங்கு செய்யமுடியும். களிமண் மற்றும் மணலிலும் தங்கள் கைகளையும் உடைகளையும் அழுக்காக்கிக் கொண்டு விளையாடுவார்கள். இதை அவர்கள் விரும்பி ரசிக்கிறார்கள்" என்று சிரித்துக் கொண்டே அவர் கூறினார்.

சுமார் ஒருமணி நேரம் இந்த குழு நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்ட பிறகு, குழந்தைகள், பண்ணையில் உள்ள சிறிய குளத்தில் தங்கள் கைகளையும் ஆடைகளையும் சுத்தம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அப்போது அவர்கள் அங்குள்ள குழாய் மூலம் தண்ணீரை ஒருவர் மீது ஒருவர் பீய்ச்சி அடித்து விளையாடுவது பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும்.

அடுத்து குழந்தைகளுக்கு மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லும் பணி வழங்கப்படும். அதன் பிறகு, விவசாய நிபுணர் அல்லது அனுபவம் உள்ள விவசாயிகள் மூலம் வயலுக்கு பாசனம் செய்வது, பயிர் செய்யும் முறைகள், நிலையான விவசாயத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் சுற்றுச்சூழலின் முக்கியத்துவங்கள் விளக்கப்படும்.

பின்னர் நாங்கள் அவர்களுக்கு வாழைப்பழம்

வழங்குவோம். அதன் பிறகு அவர்கள் மதிய உணவுக்காக தாங்கள் கொண்டுவந்த உணவை சாப்பிடுவார்கள். வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வராதவர் களுக்கு விவசாயப் பண்ணையில் என்ன உணவு தயாரிக்கப் பட்டுள்ளதோ அதை வழங்குவோம். வெள்ளரிக்காய், மாம்பழம், தக்காளி போன்ற காய்கறிகள் மற்றும் பழங்களால் செய்யப்பட்ட "சாலட்" அவர்களுக்கு வழங்கப்படும். இவற்றில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்து இருப்பதால் இதை சாப்பிடுவதும் கட்டாயம் என்கிறார் பதாரியா.

அன்றைய நாளின் முடிவில் குழந்தைகள் பரிசுப் பொருள்களுடன் வீடு திரும்பு வார்கள். அவர்களுக்கு விதைகள், நாற்றுகள், காய்கறி மற்றும் பழச் செடிகள் வீட்டிலேயே வளர்ப்பதற்காக வழங்கப்படும். இதன் மூலம் குழந்தைகள் பசுமை நடவடிக்கைகளில் ஈடுபட வாய்ப்பு கிடைக்கிறது. புதியனவற்றை கற்றுக்கொள்ள முடிகிறது.

மாதத்திற்கு இரண்டு முறை ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் "பண்ணைப் பள்ளி" அமர்வில் 30 குழந்தைகள் பங்கேற்பார்கள். இவர்களுடன் எங்கள் சங்க உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என்று கோஹல் கூறினார். திட்டத்தின் தலைவர் பதாரியா, இதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராக இருப்பதால், அனைத்து அமர்வுகளிலும் கலந்துகொள்கிறார். இத்திட்டத்தில் கலந்து கொள்ளும் குழந்தைகளுக்கு பெயரளவுக்கு ரூ.50 முதல் ரூ.100 வரை கட்டணம் வசூலிக்கிறோம். இலவசமாக பெயரைப் பதிவு செய்யலாம் என்றால் பள்ளி நிர்வாகத் தினரோ அல்லது குழந்தைகளின் பெற்றோர்களோ போதிய ஆர்வம் காட்டமாட்டார்கள். வசூலிக்கப் படும் தொகை, இந்த முன் முயற்சிக்காக நிலத்தை வழங்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்கிறார் அவர்.

இந்த ஆண்டு இந்த திட்டம் "குழந்தைகளுக்காண பண்ணைப் பள்ளி" திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளாக இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாங்கள் நடத்தி வருகிறோம். இதற்கு முன் இத்திட்டம் "சோட்டாகிசான்" என்று அழைக்கப்பட்டது. காந்திநகர் ரோட்டரி சங்கம் சார்பில் நடத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 50,000 குழந்தைகளுக்கு மேல் இதில் பங்கேற்றுள்ளனர் என்கிறார் பதாரியா. "குழந்தைகளுக்கு விவசாயத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறவும், பூமியில் வேர்களுடன் விவசாயம் எப்படி பின்னிப் பிணைந்துள்ளது

" குழந்தைகளால் வீட்டில் செய்ய முடியாததை இந்த பண்ணையில் செய்யமுடியும். களிமண் மற்றும் மணலிலும் தங்கள் கைகளையும் உடைகளையும் அழுக்காக்கிக் கொண்டு விளையாடுவார்கள்.

**நிதின் படாரியா**
RC காந்திநகர் முன்னாள் தலைவர்











என்பதை குழந்தைகள் தெரிந்து கொள்ள வைப்பதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும்'' என்று அவர் மேலும் கூறினார்.

''இத்திட்டத்தின் மூலம் மண் மற்றும் சுற்றுச்சூழலுடன் நேர்மறையான தொடர்பு இருப்பதை குழந்தைகள் மனதில் ஏற்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இதன் மூலம் குழந்தைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பெறவும், விவசாய நடைமுறைகளை ஆழமாகத் தெரிந்துகொள்ளவும் முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இயற்கையான முறையில் விளைவிக்கப்பட்ட சத்தான விளைபொருள்கள் மூலம் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை அவர்களிடம் ஏற்படுத்துகிறோம்''.

''இளைஞர்கள் வகுப்பறை களைத்தாண்டி சிலவற்றை கற்றுக் கொள்ளவும் இயற்கையை ரசிக்கவும் இது ஒரு வாய்ப்பாகும். அதே நேரத்தில் குழந்தைகள் நவீன விவசாய நடைமுறைகளை நேரடி அனுபவம் மூலம் தெரிந்து கொள்ளவும், மக்களுக்கு உணவளிக்க விவசாயிகள் எப்படி கடுமையாக உழைக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளவும் இது உதவுகிறது'' என்றார் பதாரியா.

பண்ணை விவசாயத்தில் விதை விதைத்தல், பயிர்செய்தல்,

> “இதன் மூலம் குழந்தைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பெறவும், விவசாய நடைமுறைகளை ஆழமாகத் தெரிந்துகொள்ளவும் முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.










அறுவடை, பல்வேறு மரங்கள், செடிகளை அடையாளம் காண்பது, மூலிகைச் செடிகளின் பயன்கள், நவீன வேளாண் கருவிகளைப் பயன்படுத்துதல், கால்நடை மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை அனுபவம் வாய்ந்த விவசாயிகள் மூலம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைப்பதால் படிப்படியாக பல்வேறு பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் இதில் ஆர்வம் காட்டி வருகின்றன என்கிறார் கோஹல். எல்லாவற்றுக்கும் மேலாக விவசாயத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே உள்ள ஆழமான உறவை அவர்கள் தெரிந்துகொள்ள உதவுகிறது. “நிலையான விவசாயத்திற்கு தாய்பூமி நமக்கு கொடுத்துள்ளதை எப்படி பொறுப்புடன் பயன்படுத்துவது என்பதையும் நாம் தெரிந்துகொள்ள முடியும்’’ என்றார்.

கோஹல் மற்றும் பதாரியா இருவரும் பொறியாளர்கள்.



பதாரியாவின் குடும்பத்தினர் இன்றளவும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ''என்னைப் போன்ற ரோட்டேரியன்களுக்கு இந்த திட்டம், எங்கள் குடும்பத்தை வார இறுதியில் இயற்கைக்கு நெருக்கமான விவசாயத்தில் ஈடுபட வாய்ப்பளிக்கிறது'' என்று சங்கத்தின் செயலர் கூறினார்.

இந்த திட்டத்தில் பங்கேற்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் உள்ளூர் விவசாயகளுடன் நேரடித் தொடர்பு கொள்ள இது வாய்ப்பளிக்கிறது. குழந்தைகளை கொண்டுவிட வரும் பெற்றோர்கள், விவசாயிகளுடன் நேரடித் தொடர்பு கொள்வதுடன், அவர்களிடமிருந்தே விளைபொருள்களை வாங்கிச் செல்கின்றனர். இயற்கை முறையில் விளையும் பொருள்களை வாங்குவதில் நுகர்வோர் ஆர்வம் காட்டி வருவதால், விவசாயிகள் இப்போது பண்ணைகளில் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதை நிறுத்தி விட்டனர். இந்த பரிவர்த்தனையில் இடைத்தரகர்கள் தவிர்க்கப்படுவதால் விவசாயிகள் கடின உழைப்புக்கான பலன் பெறுகிறார்கள்.■

> “ குழந்தைகளை கொண்டுவிட வரும் பெற்றோர்கள், விவசாயிகளுடன் நேரடித் தொடர்புகொள்வதுடன், அவர்களிடமிருந்தே விளைபொருள்களை வாங்கிச் செல்கின்றனர்.

# XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE AND KLE ANNOUNCE

# 6 YEARS

PRE-MED TO

## DOCTOR OF MEDICINE / DOCTOR OF VETERINARY MEDICINE

## PROGRAMME





**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherlands

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

# TO ATTEND WEBINAR

## REGISTER NOW

## XUSOM.COM/INDIA/

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherlands

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

Session starts in September 2024

To apply, Visit:
**application.xusom.com**
email: infoindia@xusom.com


**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

ADVT.

# எத்தியோப்பியாவில்
# கழுதை நூலகங்கள்

ஜெய்ஸ்ரீ





**வலது:** குழந்தைகள் புத்தகங்களைத் நூலகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கிறார்கள்.

**இடது:** எத்தியோப்பியாவில் உள்ள ஒரு கிராமத்தில் கழுதைகள் பூட்டிய நடமாடும் நூலகம்.

எத்தியோப்பியாவின் ஹவாசா நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில், வழக்கத்திற்கு மாறான ஆனால் மனதை நெகிழ செய்யும் காட்சி ஒன்று கண்ணைக் கவருகிறது: கழுதைகள் பூட்டப் பட்ட ஒரு சிறிய கேரவன் வணிகச் சுமைகளால் அல்லாமல், புத்தகங்களைக் கொண்டுள்ளது. இது தான் நடமாடும் கழுதை நூலகம், இது புறநகர்களில் உள்ள குழந்தைகளிடையே வாசிப்பு மற்றும் கல்வியின் மீதான ஆர்வத்தை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு புத்திசாலித்தனமான முயற்சியாகும்.

யோஹன்னஸ் கெப்ரெஜோர்கிஸ் என்பவரால் நிறுவப்பட்ட எத்தியோப்பியா ரீட்ஸ் (Ethiopia Reads) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் நடத்தப்படும் இந்தத் திட்டத்தை ரோட்டரி கிளப் ஆஃப் அடிஸ் அபாபா சென்ட்ரல் மெல்லா, RID 9212, மற்றும் NC ஹிக்கரி, RID 7660, USA ஆகியவை ஆதரிக்கின்றன. கழுதை நூலகத்தின் பின்னணியில் அவர் மூளையாக இருந்தார் என்று தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் யெமிஸ்ராச் வொர்கு கூறுகிறார். “புத்தகங்கள் அல்லது கல்வி கிடைக்காத குழந்தைகளை, குறிப்பாக எத்தியோப்பியாவின் தெற்கு பகுதியில் மக்கள் அடர்த்தியாக உள்ள பகுதியில் உள்ள குழந்தைகளை, சென்றடைய நடமாடும் நூலகத்தை அவர் வடிவமைத்தார். இப்பகுதிகளில் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு புத்தகங்களை அறிமுகப்படுத்தி, அறிவு மற்றும் கண்டுபிடிப்பு உலகில் அவர்களை ஈர்ப்பது யோசனையாக இருந்தது. மாற்றத்தால் உற்சாகமடைந்த சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிகளில் சேர்த்ததில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.”

எத்தியோப்பியா ரீட்ஸ் அடிஸ் அபாபா மற்றும் ஹவாசா சிட்டி உட்பட நாடு முழுவதும் 70 குழந்தைகள் நூலகங்களை அமைத்துள்ளது, மேலும் பல்வேறு உள்ளூர் மொழிகளில் குழந்தைகளுக்கான கதை புத்தகங்களை அச்சிட்டு விநியோகம் செய்கிறது. எத்தியோப்பியாவின் தொலைதூரப் பகுதிகளில் உள்ள குழந்தைகளைச் சென்றடைய “குதிரையில் இயங்கும் கல்வியறிவு” திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. புத்தகங்கள் குதிரை வண்டிகளில் கொண்டு செல்லப்படுகின்றன, அவை சில நாட்களுக்கு பல்வேறு குக் கிராமங்களில் நிறுத்தப்படுகின்றன, அங்கே கல்வியாளர்கள் கிராமவாசி களுக்கு வாசிப்பின் மகிழ்ச்சியை அறிமுகப்படுத்துகிறார்கள்.

கடந்த ரோட்டரி ஆண்டில் இரு ரோட்டரி சங்கங்களும் இணைந்து சில கிராமங்களில் நடமாடும் கழுதை நூலகத் திட்டத்திற்கு நிதியுதவி அளித்தன. “வண்டியுடன் செல்லும் நபரின் ஊதியம் மற்றும் அவர்களின் உணவு போன்ற இயக்கச் செலவுகளை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். அமெரிக்க சங்கம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நூலகத்திற்காக பல வெளிநாட்டு புத்தகங்களையும் நன்கொடையாக வழங்கியுள்ளது” என்கிறார் எத்தியோப்பியன் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் எப்ரெம் பெர்ஹானு.

இந்தப் புத்தகங்கள் ஆப்பிரிக்க மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன; “இங்கே பல்வேறு பிராந்தியங்களில் 18 மொழிகள்




பேசப்படுகின்றன'' என்கிறார் எத்தியோப்பிய ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான யெமிஸ்ராச்.

நடமாடும் நூலகம் இரண்டு கழுதைகளால் இழுக்கப்படும் பிரகாசமான வண்ண மர வண்டியைக் கொண்டுள்ளது. வண்டியின் பக்கங்கள், கீழே மடிக்கும்போது, புத்தகங்களின் அலமாரிகளை வெளிக்காட்டுகிறது. இந்த நூலகம் ஒவ்வொரு வாரமும் இரண்டு நாட்களுக்கு எத்தியோப்பிய நகரங்களின் எல்லையில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் நிறுத்தப் படுகிறது. குழந்தைகள் வசதியாக உட்கார்ந்து புத்தகங்களை படிக்க வண்டியில் ஸ்டூல்களும் உள்ளன. பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அவர்களுக்கு சத்தமாக வாசிக்கிறார்கள், அவர்களை ரோல்-ப்ளேக்களில் ஈடுபடுத்து கிறார்கள், மேலும் விளையாட்டுகள் மூலம் கணிதத்தை கற்பிக்கிறார்கள். இந்த நூலகத்தில் வெளிநாட்டு புத்தகங்கள் மற்றும் உள்ளூரில் இருந்து பெறப்பட்ட பல நூல்களும் உள்ளன. ஆரம்ப வகுப்புகளில் தாய்மொழியில் படிப்பது ஊக்குவிக்கப்படுகிறது.



இந்த கழுதை நூலகங்கள் நம்பிக்கையின் கலங்கரை விளக்கங்களாக இருக்கின்றன. கல்வி வளங்களுக்கான அணுகல் குறைவாக உள்ள இடங்களில் வாசிப்பு மற்றும் கற்றல் மீதான அன்பை வளர்க்கிறது.

ஹவாசாவைச் சுற்றியுள்ள புறநகர் மற்றும் கிராமப்புறங்களில் ஐந்து கழுதை நூலகங்கள் இயங்கி, சுமார் 3,000 குழந்தைகளுக்கு சேவை செய்கின்றன. யெமிஸ்ராச் இன்னும் பல பிராந்தியங்களுக்கு சேவைகளை அதிகரிக்க விரும்புகிறார் மற்றும் இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களின் ஆதரவை எதிர்பார்க்கிறார். ■



BRANDURE

# THE DAWN OF NEW HOPE IN ADDICTION TREATMENT

Samarpan, a world-class Residential De-addiction Center for Drugs & Alcohol, set up by the Abheraj Baldota Foundation, near Mulshi, Pune, Maharashtra, addresses the urgent need for a world-class facility where people can beat their addiction and embrace their life.

Clinical Evidence based Program | Personalised Treatment | Adherence to Ethical Practices | Qualified Experienced Team of Professionals
100% Confidentiality

samarpan
BACK TO LIFE
www.samarpan.in

Baldota Bhavan, Maharshi Karve Road, Churchgate, Mumbai, Maharashtra – 400 020.
T: 1800-2100-220, E: info@samarpan.in

ADVT.

# பெண்களுக்கு வாழ்வாதாரம் தரும்
# பிங்க் ஆட்டோக்கள்

கிரண் ஜெஹரா



100 பிங்க் நிற ஆட்டோ ரிக்ஷாக்கள் நிறுத்தப்பட்டிருக்க சென்னை கன்வென்ஷன் சென்டர் வண்ணமயமாக காட்சியளித்தது. மேலும் 100 பெண்கள், பிங்க் நிற காலர்கள் மற்றும் ரோட்டரி வீல் எம்ப்ராய்டரியுடனான காக்கி ஓவர் கோட் அணிந்து, உற்சாகமாக அந்த வாகனங்களை வீட்டிற்கு ஓட்டிச் செல்ல தயாராக இருந்தனர். ப்ராஜெக்ட் பிங்க் ஆட்டோ என்பது RID 3233 (RID 3232-லிருந்து பிரிக்கப்பட்டது) அதன் பட்டய கவர்னர் மஹாவீர் போத்ரா பதவியேற்றதை கௌரவிக்கும் ஒரு முயற்சியாகும். PRIP கல்யாண் பானர்ஜி புதிய ஆளுநருக்கு காலர் அணிவித்து கௌரவித்தார் மற்றும் பெண் களிடம் வாகனங்களை ஒப்படைத்தார். RID 3232-ல் 2020-ல் தொடங்கப்பட்ட திட்டம், குறைந்த சலுகை பெற்ற பெண்களுக்கு நிதி சுதந்திரத்துடன் அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.

பெண் பயனாளிகளில் ஒருவருடன் வந்த வைஷ்ணவி என்ற திருநங்கை முந்தைய திட்டத்திலிருந்து வெற்றிகரமாக வாழ்வாதாரத்தை சம்பாதிப்பவர். “நாங்கள் ரோட்டரிக்கு உடைந்து நொறுங்கி வந்தோம், அது எங்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்களை வழங்கியது, எங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் உதவியது. பிங்க் ஆட்டோ முயற்சியின் தலைவர் சாந்தி செல்வத்தை நான் சந்தித்த போது, அவரும் அவரது குழுவினரும் என்னை மரியாதை யுடனும் கண்ணியத்துடனும் நடத்தினர். என்னை இந்த நிலைமைக்கு கொண்டு வந்த ரோட்டேரியர்களுக்கு நன்றி, என்றார்.

இந்த நிகழ்வில், சென்னை ராமச்சந்திரா மருத்துவமனைக்கு இரண்டு வேன்கள் நன்கொடையாக வழங்கப்பட்டது - ஒன்று கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனைக்காகவும், மற்றொன்று சென்னையைச் சுற்றியுள்ள கிராமப்புற மருத்துவ முகாம்களுக்கு நடமாடும் மருத்துவமனையாகவும் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் 1,500-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டதைக் கண்டு மகிழ்ச்சியடைந்த பானர்ஜி, இந்த மாவட்டத்தில் (3232) செய்யப்படும் ரோட்டரி சேவைகள் குறிப்பிடத்தக்கவை மற்றும் இந்தியாவில் நான் பார்த்த சிறந்த சேவைகளில் ஒன்றாகும்” என்றார். போத்ராவின் தலைமைப் பயணத்திற்கு தனது வாழ்த்துக் களைத் தெரிவித்த அவர், சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கத்துடன் ஒத்துழைப்பைத் தொடங்குமாறு அவரிடம் வலியுறுத்தினார். PDG முத்து பழனியப்பன், 2014ல் கின்னஸ் உலக சாதனை படைத்த ரோட்டரி மை ஃபிளாக் மை இந்தியா பிரச்சாரம் மற்றும் COWIN போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களில் போத்ராவின் தலைமைத்துவத்தை எடுத்துரைத்தார். COWIN திட்டத்தில், கோவிட் முடக்கத்தின் போது, RID 3232-ன் 96 சங்கங் களுடன் இணைந்து 3.6 கோடி ரூபாய் மதிப்புள்ள 36,000 மளிகைப் பொருள் தொகுதிகளை விநியோகிக்க போத்ரா ஏற்பாடு செய்தார். வைர வியாபாரி மற்றும் RC மெட்ராஸ் T.நகரின் உறுப்பினரான போத்ரா, தனது குடும்பத்தினருக்கும் ரோட்டரிக்கும் நன்றி தெரிவித்து, “என் குடும்பம் மற்றும் நண்பர்கள் இல்லாமல் நான் ஒன்றுமில்லை. மற்றும் ஒன்றாக நாம் RID 3233-ஐ பெரிய உயரத்திற்கு கொண்டு செல்ல முடியும்” என்றார்.

RC மெட்ராஸ் மவுண்டின் ராம் மூர்த்தி நடராஜன், TRFக்கு தனது பங்களிப்பாக 2.1 கோடி ரூபாய்க்கான காசோலையை PRIP பானர்ஜியிடம் கொடுத்து AKS உறுப்பினரானார்.

AKS உறுப்பினர் அம்பலவாணன் M அமைதிக் கம்பம் ஒன்றை DG போத்ராவிடம் வழங்கினார். “உலகளவில் சுமார் 2 லட்சம் அமைதிக் கம்பங்கள் உள்ளன. ரோட்டரி ஊக்குவிக்கும் நல்லெண்ணம் மற்றும் அமைதியை நினைவூட்டும் வகையில் இந்த கம்பம் தர்மபுரியில் நிறுவப்படும்” என அம்பலவாணன் விளக்கினார்.

புகைப்படங்கள்: கிரண் ஜெஹரா





**மேலிருந்து:** PRIP கல்யாண் பானர்ஜி பயனாளிகளுடன்; PRIP பானர்ஜி மற்றும் DG மகாவீர் போத்ராவுடன் (இடமிருந்து) PDGs C R ராஜு, ராஜா சீனிவாசன், S முத்துபழனியப்பன், ரவி ராமன், பாபு பேரம் மற்றும் DG போத்ராவின் மனைவி சாந்த். வலதுபுறம் PDG I S A K நாசர் உள்ளார்; ராமமூர்த்தி நடராஜன் PRIP பானர்ஜியிடம் காசோலை வழங்குகிறார் (இடமிருந்து): PDGs முத்து பழனியப்பன் மற்றும் ரவி ராமன், சாந்த் மற்றும் DG போத்ரா, PDG நாசர், நிகழ்ச்சி தலைவர் வினோத் நாயர், DGN ஸ்ரீராம் துவ்வுரி மற்றும் மாவட்டச் செயலாளர் S ராம்குமார் ஆகியோரும் உள்ளனர்.





# நன்கொடை உற்சாகத்தில் RID 3250

ஜெய்ஸ்ரீ

எங்கள் மாவட்டத்தில் உள்ள 56 ரோட்டரி சங்கங்களின் 1,150 ரோட்டேரியர்களின் TRF-க்கான முதல் பங்களிப்பு இதுவாகும்'' என்று RC பாட்னா சாம்ராட், RID 3250-ன் முன்னாள் தலைவர் சுஷில் போடார் இந்த சாதனையை எவ்வாறு செய்தனர் என்பதை பற்றி விவரிக்கிறார்.


DG பிபின் சாச்சன் அவரது நிறுவல் நிகழ்வின் போது, மாவட்டத்தை 100% வழங்கும் மாவட்டமாக மாற்ற விருப்பம் தெரிவித்தார்; DRFC ராஜன் கந்தோத்ரா அனைத்து ரோட்டேரியர்களையும் அறக்கட்டளைக்கு குறைந்தபட்சம் $25 பங்களிக்குமாறு ஊக்குவித்தார்.

ஜூலை 1-ம் தேதி புதிய தலைவர்கள் 25 டாலர்களை TRF-க்கு அனுப்பி இந்த ஓட்டத்தை தொடங்கி, தங்கள் அணிகளைப் பின்பற்றத் தூண்டினர். ஜூலை 26-க்குள், மாவட்ட ரோட்டரியன்கள் TRF வருடாந்திர நிதிக்கு $85,000 பங்களிப்பை வழங்கினர்.

RC பாட்னா சாம்ராட் நிறுவல் நிகழ்வை தொகுத்து வழங்கியது, PRID அசோக் மகாஜன் தலைமையில், PRID கமல் சங்வி நிறுவல் அதிகாரியாக பணியாற்றினார். இந்த நிகழ்ச்சியின் நினைவாக, ஐந்து பெண்களுக்கு மின்சார ஆட்டோரிக்ஷாக்களை வாங்குவதற்கு சங்கம் உதவியது. பெண்கள் வங்கிக் கடன் மூலம் தலா ஒன்றரை லட்சம் ரூபாய் மதிப்பிலான வாகனங்களைப் பெற்றனர். "எங்கள் சங்கம் ஐந்து வாகனங்களுக்கு மூலதனமாக ரூ.2.5 லட்சம் வழங்கியது. பெண்கள் தங்கள் வருவாயில் இருந்து கடனின் மீதியை தவணைகளில் திருப்பிச் செலுத்துவார்கள், மேலும் சங்கம் அதைக் கண்காணிக்கும்'' என்கிறார் சங்கத் தலைவர் தேவ்ராஜ் பல்லப்.

DG சாச்சன் ஐந்து மாவட்ட திட்டங்களையும் அறிவித்தார் - குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி அளித்தல்; 1,000 கண்புரை அறுவை சிகிச்சைகள் மற்றும் 500 பேருக்கு கண்ணாடிகள்; செயற்கை மூட்டுகள்; மற்றும் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு இலவச புற்றுநோய் சிகிச்சை. ஆண்டு முழுவதும் பெண்களுக்கு பல்வேறு தொழில் பயிற்சி திட்டங்கள் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் 54 ரோட்டேரியர்கள் மொத்தமாக ரூ.27 லட்சத்தை "ரோட்டரி கிராண்ட்"க்கு வழங்கினர், இது உலகளாவிய மானியத் திட்டங்களைச் செய்வதற்கு நிதி பலம் இல்லாத சிறிய சங்கங்களுக்கு ஆதரவளிப்பதற்காக சாச்சனால் அறிமுகப்படுத்தப் பட்டது. மாவட்டத் திட்டங்களில் சிறிய சங்கங்கள் பங்கேற்க உதவுவதற்கு ரோட்டேரியர்கள் குறைந்தபட்சம் 50,000 ரூபாய் மானியத்திற்கு பங்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். தாராள மனப்பான்மை கொண்ட ரோட்டேரியர்கள் ஒரு சிறப்பு நிகழ்வில் மாவட்ட புரவலர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள்.■



**இடமிருந்து:** *ஷில்பி மற்றும் DG பிபின் சாச்சன், PRID அசோக் மகாஜன், IPDG S P பகாரியா மற்றும் அவரது மனைவி ரஞ்சனா.*

# BLOOD BANK EQUIPMENT



## Precision

### that ensures you don't have to use a microscope to view the happiness



- 4.3" Colour HMI with touch screen
- 200000 data storage capacity
- Configurable maintenance reminder
- 7 days circular chart recorder
- Caster wheels for ease of mobility
- Self-diagnostic system with error messages
- Email, SMS and call alert up to 15 users
- Connectivity to central monitoring software
- Multilevel password protected HMI
- High speed ethernet connectivity
- Multi-level password protected HMI
- Micro controller based programs
- Frost free refrigeration system
- Micro controller based programs

- Blood Collection Monitor
- Blood Donor Couch
- Blood bag tube sealer
- Cryofreeze (-80.0°C )
- Plasma Freezer (-40.0°C )
- Laboratory Centrifuge
- Cryoprecipitate bath
- Plasma Thawing bath
- Platelet Incubator and agitator
- Blood Bank Scale
- Centrifuge Equaliser
- Walk in Blood Bank Refrigerator
- Laboratory refrigerators
- Plasma expressor
- Laminar air flow



Refrigerated Centrifuge



Lab refrigerator



Blood Bank Refrigerator



Platelet incubator



Ultra Plasma freezer

**Labtop Instruments Pvt. Ltd.**

ISO 13485 : 2012

Labtop House, Plot No. 59, Waliv Phata, Sativali Road, Vasai (E),
Dist - Palghar - 401208, Maharashtra, India. Tel.:+918446053761 to 70 (10 lines)
Email: info@labtopinstruments.com
Web: www.labtopinstruments.com

LABTOP®
Quality Lab Equipment

ADVT.

# மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிலையான வாழ்வாதாரத் திட்டம்

ரஷீதா பகத்



*அகமதுநகரில் ரோட்டரி ஸ்வயம்பூர்ணா பால் பண்ணையில் RC அகமதுநகர் மிட்டவுன் தலைவர் மதுரா ஜவாரே, TRF அறங்காவலர் பரத் பாண்டியா, DG சுரேஷ் சாபு ஆகியோர்.*

அகமத்நகர் மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் (RID 3132) தலைவர் மதுரா ஜவாரே, வியட்நாம் படைவீரர்களின் மறுவாழ்வுக்காக நிறைவேற்றப்பட்ட தனித்துவமான திட்டம் பற்றி மராத்திய எழுத்தாளர் அனில் அவ்சாட் எழுதிய ‘‘அமெரிக்கா’’ என்ற புத்தகத்தை படித்தபோது, அதில் இருந்த கருத்துக்கள் அவரது ஆழ்மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மன உறுதிக்காக போர் வீரர்கள் எப்படி குதிரைகளுக்கு அருகில் வைக்கப்பட்டனர் என்பதை அது விவரிக்கிறது. விலங்குகளின் உண்மையான, நேர்மையான மற்றும் பாசாங்குத்தனம் இல்லாத அன்பு அவர்களுக்கு மனநலத்தை அளிக்கிறது.

இந்த தகவல், மனநலம் பாதிக்கப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களுக்காக அகமதுநகர் அருகே உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் ‘‘ரோட்டரி ஸ்வயம்பூர்ணா பண்ணை’’யை இந்த சங்கம் அமைப்பதற்கான பின்னணியாக அமைந்திருந்தது. $48,000 மதிப்பிலான உலகளாவிய திட்டத்தில் மியாமி ஏர்போர்ட் ரோட்டரி சங்கம் (RID 6990) கூட்டாளராக இருந்தது.



அகமதுநகரிலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ‘‘மாவ்லி சேவா பிரதிஷ்டான்’’ என்ற இந்த தொண்டு நிறுவனம், குடும்பத்தினரால் கைவிடப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்ட, மனநலம் குன்றிய பெண்களுக்கு புகலிடம் கொடுத்து அவர்களுக்கு சிகிச்சையும் அளித்து வருகிறது. ‘‘இந்த மையத்தில் அவர்களுக்கு இடம் கொடுத்து உணவு வழங்கி அன்பாக பராமரித்து வருகிறார்கள். தம்பதிகளான Dr ராஜேந்திரா மற்றும் Dr சுசேதா தமானே இருவரும். 500-க்கும் மேற்பட்ட பெண்களையும் அவர்களின் 50 குழந்தைகளையும் மிகுந்த அக்கறையுடனும் பாசத் துடனும் கவனித்து வருகிறார்கள் என்கிறார் மதுரா.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் செய்த அற்புதமான பணிகள் பற்றி அவர் அறிந்துகொண்டார். அதன் பிறகு அவரது சங்கம், அங்குள்ளவர்களுக்கு பல வழிகளில் உதவ முன்வந்தது. மனதை உருக்கும் சில கதைகளையும், நம்பிக்கையூட்டும் கதைகளையும் ரோட்டரி நியூஸ் குழுவிடம் மதுரா பகிர்ந்துகொண்டார். கோவாவைச் சேர்ந்த அனுஜாவின் கதையை அவர் பகிர்ந்து கொண்டார். பெற்றோர்களின் வயதான காலத்தில் பிறந்தவர் அனுஜா. அதாவது அவளுடைய உடன்பிறப்புகளுக்கும் அவருக்கும் இடையே 15 வயது வித்தியாசம் இருந்தது. அவள் பருவமடைந்த நேரத்தில் அவளது பெற்றோர் இறந்துவிட்டனர். வீட்டில் இருந்த மூத்தவர்கள் அவளை கவனித்துப் பராமரிக்க மறுத்துவிட்டனர். அவள் அங்கும் இங்கும் வேலை செய்து ஒரு வழியாக சட்டக்கல்வி பயின்றார். கோவாவில் பிரபல வழக்குரைஞரிடம் பயிற்சியைத் தொடங்கினார்.

ஆனால், அவளது நிலையைத் தெரிந்து கொண்ட அந்த வயதான ஆண் வழக்குரைஞர், அந்த பெண்ணை ஏமாற்றி கர்ப்பமாக்கி விட்டார். இந்த விவகாரம் உள்ளூர் சமூகத்தினருக்குத் தெரிய வந்ததும், அந்த இடத்தை விட்டு



மௌலி சேவா பிரதிஷ்டானில் சிகிச்சை பெறும் மனநலம் பாதிக்கப்பட்ட பெண்.

வெளியேறுமாறு கூறினர். மிகுந்த சித்ரவதைக்கும் மன அழுத்தத்துக்கும் ஆளான அந்த பெண் மனரீதியாக பாதிக்கப்பட்டார். மனநிலை சரியில்லாமல் சுற்றித்திரிந்த அந்த பெண்ணை ஒருவர், தனது செலவில் அகமதுநகருக்கு அழைத்து வந்து மாவ்லி தொண்டு நிறுவனத்தில் சேர்த்துவிட்டார். அங்கு அவளுக்கு தங்குவதற்கு இடமும், உணவும், தகுந்த பராமரிப்பும் கிடைத்தது.

பூஜா மற்றும் சுமனின் நிலையும் அப்படித்தான் இருந்தது. பூஜா, குழந்தைகளுக்கான ஒரு அனாதை இல்லத்தில் வளர்க்கப்பட்டாள். பின்னர் 18 வயதை எட்டிய நிலையில் அங்கிருந்து வெளியேற நேரிட்டது. ஆனால், எந்த ஒரு வேலையோ அல்லது புகலிடமோ கிடைக்காத நிலையில் சாலையில் சுற்றித்திரிந்தார். சில ஆண்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட அவள், மனநோயாளியாக இருந்த நிலையில் மாவ்லி தொண்டு நிறுவனத்துக்கு



பால் பண்ணையில் பசுக்கள்.



வந்துசேர்ந்தாள்.

சுமன் அருகிலுள்ள கிராமத்தில் வசித்து வந்தாள். கல்விபயில தினமும் கிராமத்தில் உள்ள தாலுகா பள்ளிக்கு நடந்து செல்வாள். ஒருவழியாக பத்தாவது வகுப்பை அடைந்தாள். ஒருநாள் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இளைஞர்கள் சிலரால் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளானார். அவள் மீது குற்றம் சுமத்திய குடும்பத்தினர், அவள் பள்ளிக்குச் செல்வதை நிறுத்தி விட்டனர். இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவள், கர்ப்பமானது தெரியவந்தது. 15 வயதான அவளை வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறிவிட்டனர். “இளம் வயதிலேயே தாய்மையை அடைந்த அந்த சிறுமி மனநலம் பாதிக்கப்பட்டார். ஆனால், அதிருஷ்டவசமாக அவள் சாலையில் சென்றுகொண்டிருந்தபோது, நல்ல மனிதர் ஒருவர் அவளை மாவ்லி தொண்டு நிறுவனத்தில் சேர்த்தார்” என்கிறார் மதுரா.



இந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் செய்துவரும் மனிதாபிமான பணிகள் பல அமைப்புகளாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஹாங்காங் ரோட்டரி சங்கம், “ரோட்டரி மனிதாபிமான விருதை” இந்த நிறுவனத்துக்கு வழங்கி கௌரவித்து ள்ளது. “100 உறுப்பினர்களைக் கொண்ட எங்கள் சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் பலர், அவ்வப்போது இந்த தொண்டு நிறுவனத்துக்கு நன்கொடை வழங்கி வருகிறார்கள். நாங்களும் அவர்களுடன் இணைந்து சில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். 2020–21 ஆம் ஆண்டில் இங்கு வசிக்கும் குழந்தைகளுக்காக நாங்கள் 40 படுக்கைகளை நன்கொடையாக வழங்கினோம்.”

அடுத்து அமெரிக்காவில் உள்ள RID 6690-ன் கூட்டாளராக சங்கம் செயல்பட்டு “ஹெல்தி டைனி ஃபீட்” என்னும் திட்டத்தை நிறைவேற்றியது. இத்திட்டத்தின் கீழ் இங்குள்ள குழந்தைகளுக்கு ஷுக்கள் வழங்கப்பட்டன. படிப்படியாக, காலப்போக்கில் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த அனுஜா, பூஜா, சுமன் மற்றும் குழந்தைகள் எங்களின் வாழ்க்கையில் ஒருபகுதியாக மாறிவிட்டனர். மேலும், “இந்த நன்கொடை சார்ந்த அமைப்பு சுயசார்பாக செயல்படவும், தன்னிறைவு பெற்றதாகவும் விளங்க ஏதாவது செய்ய வேண்டும் என்பது எங்களின் நீண்டநாள் ஆசையாகும்” என்கிறார் மதுரா.

பெண்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுக்கவும், தன்னார்வ தொண்டு நிறுவனத்துக்கு ஒரு நிலையான வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் திட்டத்தை செயல்படுத்த முடிந்தால் அது அனைவருக்கும் வெற்றிகரமாக அமையும் என்று மதுரா நினைத்தார். “இந்த பெண்களால் ஆடு, மாடு வளர்ப்பு மற்றும் சில வகையான விவசாய வேலைகளைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பது எங்களுக்கு முன்பே தெரியும். “ஒரு முறை யாரோ இந்த தொண்டு நிறுவனத்துக்கு மூன்று பசுக்களை நன்கொடையாக அளித்தனர். இந்த பெண்கள் மாடுகளை நன்றாக கவனித்துக் கொள்வதுடன் மட்டுமல்லாமல், அவர்கள் நெருங்கிய நண்பர்கள் போல அதனுடன் பேசுவதையும் குறைகளை பகிர்ந்து கொள்வதையும் நாங்கள் கண்டோம்”. அப்போதுதான் எனக்கு, நான் முன்பு படித்த “வியட்நாம் போர் வீரர்கள்” கதை நினைவுக்கு வந்தது.

இதேபோன்ற நிலையை இங்கு உருவாக்கினால் குதிரைக்கு பதிலாக பசுக்களை பயன்படுத்தினால் அது தொண்டு நிறுவனத்தில் உள்ள பெண்களுக்கு உளவியல் சிகிச்சையாக அமையும். அதே நேரத்தில் நிறுவனத்திற்கு நிதிசார்ந்த தன்னம்பிக்கையை உருவாக்கலாம் என்று சங்கத்தின் தலைவர் நினைத்தார். “இதையடுத்துதான் மாவ்லி சேவா பிரதிஷ்டானில் நல்ல தரமான பசுக்களைக் கொண்டு பால் பண்ணை அமைக்கலாம்





என்ற எண்ணம் வேரூன்றியது''. இந்த யோசனை, மாவ்லி தொண்டு நிறுவனத்தின் நிறுவனர்கள் மற்றும் அங்குள்ள நபர்களிடம் விவாதிக்கப்பட்டது. முன்பு தானமாக வழங்கப்பட்ட மூன்று பசுக்களுடன் பெண்கள் அன்பாக பழகியதையும், பின்னர் மூன்று பசுக்களில் ஒன்று கருவுற்றதையும், தங்கள் வீட்டு கர்ப்பிணிப் பெண்களைப்போல அதனிடம் அக்கறை செலுத்தியதையும் உறுப்பினர்கள் அறிந்து கொண்டனர்.

ஆனால், 15 நல்ல தரமான கறவை மாடுகளை வாங்குவதற்கும், மாடுகளுக்குக்கான தீவன வளர்ப்பு, மண்புழு உர பிரிவு ஏற்படுத்துதல் மற்றும் மாட்டுச் சாணத்திலிருந்து எரிவாயு தயாரித்தல் உள்ளிட்ட வசதிகளை நிறுவுவதற்கு பெருமளவு பணம் தேவைப்பட்டது. அப்போது DG-ஆக இருந்த ஸ்வாதி ஹெர்கல், அமெரிக்காவில் உள்ள RID 6990-ன் DRFC மனோகர் மகஜன் (இவரது மருமகன் அகமது நகரில் வசிக்கிறார்) இத்திட்டத்திற்கு ஊக்கமளித்து வழிகாட்டினர். மேலும் அமெரிக்க சங்கத்திலிருந்து 48,000 டாலர் உலகளாவிய நிதி பெறவும் உதவினர். பீட் ரோட்டரி சங்கம், பீட் மிட்டவுன் ரோட்டரி சங்கம் அகமது நகர் ஆகியவையும் இதில் சேர்ந்து கொண்டதால் திட்டம் வலுவானது.

உலகளாவிய நிதியுதவி கிடைத்தவுடன், நாசிக் அருகிலுள்ள கோத்ரெஜ் மையத்திடமிருந்து 15 கறவை பசுமாடுகள் வாங்கப்பட்டன. அவை ஒவ்வொன்றும் தினமும் 35 முதல் 40 லிட்டர் பால் கொடுக்கும் திறன் படைத்தவை. இதைத் தொடர்ந்து சென்சார் கண்காணிப்பு, பால் வழங்கும் நிலையம், சாண எரிவாயு தயாரிக்கும் ஆலை, மண்புழு வளர்ப்பு பிரிவுகள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. மாவ்லி பிரதிஷ்டானுக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலத்தில் பெண்கள் மூலம் தீவனம் வளர்க்க முடிவு செய்யப் பட்டது. மண்புழு உரம் கரிம உரமாக பயன்படுத்தப்பட்டது. சேகரிக்கப்படும் பால், மாவ்லியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள பிராந்திய பால் சேகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப் பட்டது. சாண எரிவாயு சமையலுக்கு பயன்படுத்தப்பட்டதால் LPG சிலிண்டர் செலவு குறைவானது. "இந்த திட்டத்தை நாங்கள் எங்களால் முடிந்தவரை சுயமாக நிலைநிறுத்த முயற்சித்தோம்'' என்று மதுரா புன்னகையுடன் கூறினார்.

இந்த திட்டத்தை சமீபத்தில் TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா தொடங்கிவைத்தார். நன்கு

*மௌலி சேவா பிரதிஷ்டானில் நிறுவனர்கள் சுசேதா, ராஜேந்திர தமானே ஆகியோருடன் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்.*





*சங்கத் தலைவர் மதுரா, சங்கத்தின் அனைத்துலக சேவை இயக்குநர் க்ஷித்திஜ் ஜாவரே மற்றும் RC அகமதுநகர் முன்னாள் தலைவர் மாதவ் தேஷ்முக் (இடது), ரோட்டரி பால் பண்ணையில்.*

திட்டமிட்டு திறமையாக ஒரு திட்டத்தை ஒட்டுமொத்தமாக தன்னிறைவுத் திட்டமாகச் செயல் படுத்தியற்காக சங்க உறுப்பினர் களை அவர் பாராட்டினார். IPDG ஸ்வாதி ஹெர்கலும், உறுதியாக நின்று தங்கள் கனவுகளைச் செயல்படுத்தியற்காக சங்கத்தின் உறுப்பினர்களுக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

சமீபத்தில், RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் இந்த திட்டத்தை பார்வையிட்டு, தமனே தம்பதியினர் மற்றும் ரோட்டரியன்களின் நல்ல பணிகளைப் பாராட்டினார். “பெண்களின் கதைகள் என்னை கண்ணீரில் ஆழ்த்தியுள்ளன’’ என்று அவர் கூறினார்.

“இந்த திட்டத்துக்கு வழிகாட்டி யாக, பின்னணியாக இருந்து செயல் பட்டவர் RI தலைவர் கோர்டன் மெக்கினலிதான் என்பதை சொல்லிக் கொள்வதில் பெருமைப்படு கிறேன். ஏனெனில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநலம் குன்றியவர்களின் நலனில் அக்கறை செலுத்துங்கள் என்று தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தவர் அவர்தான்’’ என்றார் மதுரா. PDG பிரமோத் பரீக், அவரது சங்கத்தின் சர்வதேச பிரிவின் இயக்குநர் க்ஷித்திஜ் ஜவாரே, PDG ருக்மேஷ் ஜகோடியா, DRFC சுகாஸ் வைத்யா மற்றும் பயிற்சியாளர் விஜய் இங்கலே ஆகியோருக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மாவ்லியை சிறப்பாக நடத்தி வரும் தம்பதிகளுக்குத்தான் நான் கடைசியாக நன்றி தெரிவிக்க வேண்டும். “பல நேரங்களில் சாலையில் பெண்கள் அலைந்து திரிவதை பார்க்கும்போது நாங்கள் அவர்களைத்தான் அழைக்கிறோம். அடுத்த அரை மணி நேரத்தில் ஒரு வேன் வருகிறது. தங்களுக்கு ஏற்பட்ட மோசமான அனுபவத்தால் யாரையும் நெருங்கவிடாத அந்த பெண்களுடன் வேனில் வரும் ஊழியர்கள், பேச்சுநடத்தி, கனிவுடன் அவர்களை மாவ்லி தொண்டு நிறுவனத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கு அவர்களை சுத்தம் செய்து, புதிய உடைகள், உணவு அளித்து அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறார்கள். எதிர்காலத்திலும் நாங்கள் அவர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவோம் என்று நம்புகிறோம்’’ என்றார் மதுரா ஜவாரே. ■



*சேவா பிரதிஷ்டானில் அகர்பத்தி செய்யும் பெண்கள்.*

# மாற்றத்தை பொருத்தமானதாக ஏற்றுக்கொள்ளுங்கள்

V முத்துகுமரன்




*DG N S சரவணன், பாரதி ஆகியோரை அவரது சங்கம் RC சென்னை மித்ரா உறுப்பினர்கள் மற்றும் RID 3234-ன் பிற ரோட்டேரியன்கள் கௌரவிக்கின்றனர்.*

“ரோட்டேரியன்கள் மாறிவரும் காலசூழல்களுக்கு ஏற்ப தங்களையும் மாற்றிக்கொண்டு நிலையான வளர்ச்சிக்கு உதவ வேண்டும்” என்று சென்னையில் புதிய மாவட்டமான 3234 DG-ஆக N S சரவணன் பதவியேற்பு விழாவில் பேசிய TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 1-ம் தேதி உலகெங்கிலும் உள்ள 525 RI மாவட்டங்கள் மற்றும் 37,000 ரோட்டரி சங்கங்களின் தலைமையில் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றம் வரும். இந்த புதிய மாவட்டத்திற்கான புதிய இலக்கு மற்றும் அளவுகோல்களை நிர்ணயிக்கும் மிகப்பெரிய பொறுப்பு பட்டய ஆளுநருக்கு உள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

உறுப்பினர் சேர்க்கை, ஈடுபாடு, பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கம் ஆகிய கொள்கைகள் மற்றும் மகளிர் மேம்பாட்டுக்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் சங்கத்தை துடிப்பாகச் செயல்பட வைப்பதில் புதிய ஆளுநர் கவனம் செலுத்த வேண்டும் என்று பாண்ட்யா வலியுறுத்தினார். மாவட்ட அணியில் 30 சதவீதம் பெண்கள் இடம்பெற்றுள்ளதை குறிப்பிட்ட பாண்ட்யா, சரவணன், அர்ப்பணிப்பு உணர்வு, திறமை மற்றும் துணிச்சலுடன் செயல்பட்டு மாவட்டத்தை சரியான திசையில் வழிநடத்திச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கடுமையாக உழைத்து புதிய சாதனைகளை படைக்கவேண்டும். அதற்கு தெளிவான மனமும், கறைபடியாத கரங்களும் தேவை என்றார். பணம் கொடுத்தால் மட்டும் போதாது, ரோட்டரி நடவடிக்கைகளில் பங்கேற்று திறமையாகச் செயல்பட வேண்டும் என்று அறிவுரை கூறினார்.

ஒவ்வொரு சங்கமும் குறைந்தது ஒரு பயனுள்ள, தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டத்தை கையில் எடுத்துச் செயல்படுத்த வேண்டும். அறக்கட்டளைக்கு ரோட்டேரியன்கள் தாராளமாக நன்கொடை அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

TRF தலைவர் என்ற முறையில் பாரி ரஸ்ஸின், மும்பையில் உள்ள SRCC மருத்துவமனைக்குச் சென்று குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்படுவதை நேரில் பார்த்தார். “குழந்தைகளின் பெற்றோரின் கண்களில் கவலையும் அதேசமயம் நம்பிக்கையும் இருந்ததை நாங்கள் அப்போது பார்த்தோம். அந்த மருத்துவமனையில் கடந்த 7 ஆண்டுகளில் 4,500 குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை நடந்துள்ளது. அவற்றில் 4,200 குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சைக்கு TRF மூலமான சர்வதேச நிதியுதவி கிடைத்தது” என்று பாண்ட்யா கூறினார்.

மாவட்டத்தின் வழிகாட்டி மற்றும் ஆலோசகருமான PRID A S வெங்கடேஷ், புதிய மாவட்ட ஆளுநருக்கு சில அறிவுரைகளைக்

கூறினார். உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை கொடுங்கள். உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப யாரேனும் செயல்படாவிட்டால் கோபத்தின் உச்சிக்கு சென்று விடாதீர்கள். ஏனென்றால் நமது அமைப்பு ஒரு தன்னார்வலர்கள் கொண்ட சேவை அமைப்புதான்'' என்று குறிப்பிட்டார்.

### 100 பயோ-கழிப்பறைகள்

மாவட்ட WASH குழுவின் தலைமையில் RID 3234 உட்பட்ட சங்கங்கள் சார்பில், நெரிசல்கள் மிக்க போக்குவரத்து சிக்னல் சந்திப்புகளில் ஒருநாளைக்கு 10 மணிநேரத்துக்கு மேலாக உழைக்கும் போக்குவரத்து காவலர்களின் வசதிக்காக ரூ.2.3 கோடி செலவில் 100 பயோ-கழிப்பறைகள் நிறுவப்படும். இந்த முன்னோடி திட்டத்தை தொடங்கிவைத்த உதவி போக்குவரத்து கமிஷனர் R சுதாகர், சாலைவிபத்துக்களை தடுக்கும் திட்டங்களிலும் சென்னை மாநகர போக்குவரத்து போலீஸாருடன், ரோட்டரி இணைந்து செயல்பட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கடந்த 2000-ம் ஆண்டு ஜூலை மாதம் ரோட்டரியில் சேர்ந்ததை நினைவு கூர்ந்த சரவணன், அதற்காக ரோட்டரி சங்க முன்னாள் தலைவரும், தமது வர்த்தக வாடிக்கையாளருமான ராமதாஸ் ஐயருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். அவர் PDG J ஸ்ரீதரின் நெருங்கிய நண்பராகவும் இருந்தார். J B காம்தார் மாவட்ட ஆளுநராக இருந்த போதுதான் எப்படி படிப் படியாக உயர்நிலைக்கு வருவது என்பதைக் கற்றுக்கொண்டார்.

பெண்களிடம் கர்ப்பப்பைவாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்று நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், இந்த நோயை கண்டறிவதற்கான முகாம்களை நடத்துவதிலும் தாம் கவனம் செலுத்தி வருவதாக DG தெரிவித்தார். ஒவ்வொரு ரோட்டேரியனும் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய சரவணன், 20 சதவீத ரோட்டேரியன்கள் தான் TRF-க்கு நிதிப் பங்களிப்புச் செய்வதாக குறிப்பிட்டார். TRF-க்கு ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 100 டாலர் நிதியளிக்கும் வகையில் மேஜிக் 30 என்னும் முன்முயற்சியை தொடங்கியுள்ளோம். அதாவது ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒரு நாளைக்கு ரூ.30 வீதம் நன்கொடை அளிப்பதன் மூலம் இது சாத்தியமாகும். இதேபோல மேஜிக் 100 திட்டத்தின் கீழ் போலியோ நிதிக்காக ரூ.100 இன் மடங்குகளில் சேமிக்க மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் இன்டராக்ட் பள்ளிகளில் உண்டியல்கள் வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கூட்டுறவு மற்றும் சேவை மூலம் ரோட்டரியில் இருப்பதை உறுப்பினர்கள் கொண்டாட வேண்டும் என்று சரவணன் அழைப்பு விடுத்தார். இந்த நிகழ்வில் அவருக்கு ''அவென்யூஸ் ஆஃப் சர்வீஸ்'' விருது RI-ல் வழங்கப்பட்டது. PDGs ஸ்ரீதர், காம்தார், DGE வினோத்சரோகி மற்றும் DGN சுரேஷ் ஜெயின் ஆகியோர் DG-யை வாழ்த்திப் பேசினர். மாவட்ட ஆலோசகர் அபிராமி ராமநாதன் TRF-க்கு கூடுதலாக $150,000 வழங்க உறுதியளித்தார். இதுவரை அவர் $570,000-க்கு மேல் நன்கொடை கொடுத்துள்ளார். அடுத்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் எனது மொத்த பங்களிப்பு $1 million-ஆக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

DG மற்றும் அவரது மனைவி பாரதி இருவரும் பெருநன்கொடையாளர்களாக 2- ம் நிலையில் உள்ளனர். ''RID 3234 மாவட்டத்தில் 102 சங்கங்கள் உள்ளன. இவற்றில் 3,700 உறுப்பினர்கள் உள்ளனர். எனது பதவிக்காலத்தில் இருக்கும் சங்கங்களில் குறைந்தது 500 புதிய உறுப்பினர்களை சேர்க்க உறுதிபூண்டுள்ளேன்'' என்று ரோட்டரி செய்திக்குழுவிடம் சரவணன் தெரிவித்தார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்




*DG சரவணன் மற்றும் பாரதி (இடமிருந்து) அறங்காவலர் பரத் பாண்டியா, PDG J ஸ்ரீதர், PRID A S வெங்கடேஷ், PDGs அபிராமி ராமநாதன், I S A K நாசர், கிருஷ்ணன் V சாரி, C R ராஜு, J B காம்தார், DGE வினோத் சரோகி மற்றும் PDG S கிருஷ்ணசாமி ஆகியோருடன்.*




**இடமிருந்து:** PDG *ரேகா ஷெட்டியின் கணவர் ஜெய் ஷெட்டி, பிரேம்சேகர் (சங்கத் தலைவர்: 2023–24),* PRIP K R *ரவீந்திரன், ரேகா மற்றும் ஜெய் ஷெட்டியின் மகன்கள் ஆதில் மற்றும் அர்ஜுன் ஷெட்டி,* PDG *ரேகா ஷெட்டி நினைவு விருதைப் பெற்ற சரண்யா பெரியசாமி மற்றும்* K *உமாமகேஸ்வரி.*

# PDG ரேகா ஷெட்டி நினைவாக ஒரு விருது விழா

**ரஷீதா பகத்**

ரோட்டரி உறுப்பினரும், RID 3232-ன் முன்னாள் மாவட்ட ஆளுநருமான ரேகா ஷெட்டியின் முதலாம் ஆண்டு நினைவுதினம் சென்னை டெம்பிள் சிட்டி ரோட்டரி சங்கத்தின் சார்பில் ஒரு பொருத்தமான விருது விழா மூலம் நினைவுகூறப்பட்டது. மிகவும் கண்ணியமான முறையில், சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் இரண்டு இளம் பெண் சாதனையாளர்களுக்கு PDG ரேகா ஷெட்டி நினைவு விருது வழங்கப்பட்டது. முதல் தனியார் நிறுவனமான ''அக்னிகுல் காஸ்மாஸ்'', ராக்கெட்டை விண்ணில் வெற்றிகரமாக செலுத்த முக்கிய காரணமாக இருந்த K உமாமகேஸ்வரி மற்றும் சரண்யா பெரியசாமி ஆகிய இருவரே அந்த விருதைப் பெற்ற சாதனையாளர்கள்.

இந்த ரோட்டரி சங்கத்தின் பின்னணி மற்றும் இந்த விருதைப் பற்றிய விவரங்களை வழங்கிய சங்கத்தின் முன்னாள் தலைவரும் விருது வழங்கும் குழுவின் தலைவருமான சந்து நாயர் கூறுகையில், ''தங்கள் துறையில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் பெண்களை அடையாளம் கண்டு அவர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது. இதன் மூலம் இளம் பெண்களை ஊக்குவிப்பதே எங்கள் நோக்கம்'' என்று கூறினார். ''தற்செயலாக, 1989 ஆம் ஆண்டு பட்டயப்படுத்தப்பட்ட இந்த சங்கம் வட அமெரிக்கா மற்றும் கனடாவிற்கு வெளியே ஒரு பெண் தலைவரை (ரேகா ஷெட்டி) கொண்டது. மேலும் பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்ட உலகின் முதல்சங்கமாகும். அப்போதிலிருந்து இந்த சங்கம் பல பெண் தலைவர்களைக் கொண்டுள்ளது. தற்போது 50:50 என்ற விகிதத்தில் ஆண்-பெண் உறுப்பினர்களைத் தொடர்ந்து பராமரித்து வருகிறது'' என்று அவர் மேலும் கூறினார்.

டெம்பிள் சிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவர் பிரேம்சேகர், மூத்த வழக்குரைஞரும், சட்ட நிபுணரும், எழுத்தாளரும் பலருக்கு வழிகாட்டியாகவும் இருந்த அரவிந்த் P தத்தருக்கு கௌரவ விருது வழங்கப்படுவதாக அறிவித்தார்.

இரண்டு விருதுகளையும் PRIP K R ரவீந்திரன் வழங்கினார். மறைந்த PDG ரேகா ஷெட்டி யுடனான தமது நீண்டகால தொடர்பையும், நட்பையும் நினைவுகூர்ந்த ரவீந்திரன், ''ரேகா ஒரு முழுமையான மனிதர்'' என்று புகழாரம் சூட்டினார். ''ரேகா மிகவும் சிறப்பு வாய்ந்தவர். அவர், தாம் செல்லும் இடங்களில் எல்லாம் மகிழ்ச்சியை கொண்டுவந்தவர். எப்போதும் சிரித்த முகத்துடன் இருந்த அவர், மற்றவர்கள் முகத்திலும் மகிழ்ச்சியை கொண்டுவந்தவர்''.

அவரை நான் அறியா விட்டாலும், நானும் அவரும் ஒரே காலகட்டத்தில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தோம். நான் லயோ கல்லூரியிலும் அவர் ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியிலும் படித்தோம். எனது மனைவி வானதியும் அங்கு படித்தவர். அவருக்கு அசாத்திய கல்வி அறிவு இருந்தது. பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்றவர். வர்த்த நிர்வாகத்தில் (Business Administration) முனைவர் பட்டமும் பெற்றவர். எல்லாவற்றையும்விட ஒரு தொழிலை எப்படி சிறப்பாக நடத்துவது என்பது தொடர்பான நுணுக்கங்களை நன்கு அறிந்தவர்''.

கொழும்புவுக்கு வந்து தனது நிறுவன ஊழியர்களிடம் உரையாற்றுமாறு ரேகாவுக்கு அழைப்பு விடுத்ததாக ரவீந்திரன் குறிப்பிட்டார். ரேகா எழுதிய பல புத்தகங்கள் எனது புத்தக அலமாரியை அலங்கரிக்கிறது, என்றார்.

ரவீந்திரன் மேலும் கூறுகையில், ''ரேகா போட்டி மனப்பான்மை கொண்டவர் என்றாலும் எல்லோர் மீதும் அக்கறை கொண்டவர். குழந்தைத்தனமானவர் என்றாலும் அனைவருக்கும் உதவும் எண்ணம் கொண்டவர். ரேகா திடீரென இறப்பதற்கு முன்னதாக, எனது நிறுவனத்தின் 93 வயதான தலைவர் மற்றும் தில்மா டீ நிறுவனத்தின் தலைவருக்கு ஒரு சிறந்த நரம்பியல் நிபுணர் மற்றும் பிஸியோதெரபிஸ்டிடம் மருத்துவச் சிகிச்சை தேவைப்பட்டபோது அவரிடம் உதவிகேட்டேன். மருத்துவ நிபுணர்கள் இலங்கைக்கு வந்து அவரை பார்ப்பார்களா என்றும் கேட்டேன். பின்னர் இந்த விஷயத்தை நான் மறந்துவிட்டேன். ஆனால், இரண்டு நாட்கள் சென்றபின் ரேகாவே என்னிடம் தொடர்பு கொண்டு அப்பல்லோ மருத்துவ மனையின் நரம்பியல் பிரிவு மற்றும் பிஸியோதெரபி பிரிவின் தலைமை மருத்துவர்கள் வருவார்கள் என்று சொன்னார். எந்தவித சிரமமும் இல்லாமல் அவர், இதற்கு ஏற்பாடு செய்தார்''.

''கட்டணம் முதலியவை பற்றி அவர் ஏதும் பேசவில்லை. மருத்துவ நிபுணர்கள் விமானத்தில் சென்றுவர ஏற்பாடு செய்து அதற்கான கட்டணத்தையும் அவரே செலுத்தினார். வந்திருந்த மருத்துவ நிபுணர்களில் ஒருவர் ரேகாவை 'ஆன்டி' என்று பாச த்துடன் குறிப்பிட்டார். ஒருமுறை நான் ரேகாவை, RI தலைவரின் பிரதிநிதியாக ஆப்பிரிக்காவுக்கு அனுப்பிவைத்தேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு அங்குள்ள மூத்த தலைவர் ஒருவர் ரேகாவின் நலன் குறித்து என்னிடம் விசாரித்தார்'' என்றார் ரவீந்திரன்.

''நாங்கள் இருவரும் நண்பர் களாக இருந்த போதிலும் எங்களுக்குள் கருத்து வேறு பாடுகள் இல்லாமல் இல்லை. நான் RI இயக்குநர் பதவிக்குப் போட்டியிட்டபோது அவரும் அந்த பதவிக்குப் போட்டியிட்டார். நான் வெற்றிபெற்றேன். நான் அவரைவிட சிறந்தவன் என்பதால் அல்ல, நான் அதிர்ஷ்டசாலி. மேலும் அவர் பெண்ணாக இருந்ததும், நான் ஆணாக இருந்ததும் சாதகமாக இருந்தது.



*அரவிந்த் P தத்தர், பிரேமா, பிரேம்சேகர், PRIP ரவீந்திரன், ஷோபனா, IPDG ரவி ராமன், முன்னாள் கிரிக்கெட் வீரர் சுதா ஷா, DGN சுரேஷ் ஜெயின், ஜெய் ஷெட்டி ஆகியோருடன் விருது பெற்ற நித்ருவ் ராஜகோபால், M R பாலமுருகன், உமாமகேஸ்வரி மற்றும் சரண்யா.*




*நித்ருவின் தாயார் சாய் ஸ்வப்னா, சங்க உறுப்பினர் டாக்டர் பிரித்திகா சாரி, பிரேம்சேகர் மற்றும் DGN ஜெயின் விருது பெற்ற நித்ருவ் ராஜகோபாலனுடன்.*

அந்த காலக்கட்டத்தில் ரோட்டரி இயக்குநர் பதவியில் போட்டியிட்டு வெல்வது பெண் களுக்கு கடினமாக இருந்தது. ஆனாலும் நாங்கள் நண்பர்களாகத் தொடர்ந்தோம். தனது பெரும் பாலான நேரத்தை ரோட்டரிக்கே செலவிட்டவர். அவரைப் போன்ற அர்ப்பணிப்புள்ள ஒருவருக்கு கணவர் ஜெய் ஆதரவாகவும் ஈகோ இல்லாதவராகவும் இருந்ததற்கு அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். இந்த ஆண்டு அவர்களுக்கு 50-வது திருமண ஆண்டுவிழாவாக இருந்திருக்க வேண்டும் என்றும் ரவீந்திரன் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய RID 3232-ன் DG ரவி ராமன், ரேகாவுக்கு நினைவு அஞ்சலி செலுத்தியதுடன், அவருடன் இருந்த நட்புறவை நினைவுகூர்ந்தார். ‘‘சமீபத்தில் நான் சில பிரச்னைகளை எதிர்கொண்ட போது எனக்கு ஆதரவாக இருந்தார். பிரச்னைகளை சந்தித்து எப்படி முன்னேற வேண்டும் என்று கூறினார்’’. விருது வழங்குவதற்கான சிறந்த நபர்களைத் தேர்ந்தெடுத்து கௌரவித்ததற்காக சங்கத்தை அவர் பாராட்டினார்.

சங்கத்தின் தலைவர் பிரேம்சேகர் பேசுகையில், சங்கத்தின் பாரம் பரியத்தின்படி, பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டுள்ளனர் என்றார். சென்னை பெசன்ட் நகர் சுற்றுப்புறத்தையும் கடற்கரையையும் பாதுகாக்க 40 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வரும் 96 வயதுசமூக ஆர்வலர் காமாட்சி சுப்பிரமணியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

தகுதியான இளைஞருக்கான விருது, டேபிள் டென்னிஸ் விளையாட்டில் 17-வதுக்கு உட்பட்டோர் பிரிவில் தற்போது முதலிடத்தை பிடித்திருக்கும் M R பாலமுருகனுக்கு வழங்கப் பட்டது.

சங்கத்தின் உறுப்பினர் டாக்டர் பிரிதிகா சாரி ஏற்படுத்திய தைரியம் மற்றும் மன உறுதி கொண்டவர்களுக்கான விருது பாராலிம்பிக் நீச்சல் சாம்பியன் நித்ருவ் ராஜகோபாலுக்கு வழங்கப் பட்டது. தடைகளைக் கடந்து தேசிய அளவில் பாராலிம்பிக் நீச்சல் சாம்பியனாக விளங்கிய தற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது. நித்ருவ், நான்கு வயதிலேயே கவனக்குறைவு கோளாறால் பாதிக்கப்பட்டவர்.

படங்கள்: ரஷீதா பகத்

GeM Government eMarketplace

NSIC

LAWAS® LUBE - SPECIALITIES

LAWAS LUBE - SPECIALITIES

Lubricant Specialist & Lube Additives

An ISO **9001:2015** Certified Co.
An ISO **14001:2015** Certified Co.
A **CRISIL** Rated company

**Please visit us at:**

**Stall No. 1** **Hall No. A**

**PRECITECH 2.0**

Precision Engineering Machine Tools Technology Show

**07 08 09 10**

**OCTOBER 2024**

**Pune International Exhibition & Convention Center, Moshi, Pune**

**SPECIALIST IN:**

**Metalworking Fluids & Rust Preventives**

Rtn. Ratan Kharol C.E.O.
Mob. - 8108600531

## Manufacturer of:

**AUTOMOTIVE LUBES: Engine oils, Gear oils, Transmission oils & Greases. INDL LUBES: Hydraulic oils, Compressor oils, Thermic Fluids, Quenching oils, Metalworking-Neat cutting, Gun drill oil, Water soluble, Synthetic, Semi-synthetic, Honing, Broaching, Rust preventive oils, EDM, Metal forming, Deep-Drawing, Electro Stamping, Transformer oils, Indl. & Breaker/chisel grease, High temperature Greases. We are also specialise in making tailor-made products.**

QUALITY | RATES | SERVICE



**www.lawaslube.com**

Distributors / Dealers Enquires Solicited

**Sales Office:**
S-37, National Paradise, Plot No. 290/1, Takka, Mumbai-Pune Highway, Panvel- 410206 **Tel: 022-27482764 Fax: 022-27482762.**
**Mob: 9324249531 / 9967380575**

**Factory:**
Plot No. 2,4,5, Neelkanth Industrial Estate, S.No. 86, Village Dhamani, Tal. Khalapur, Dist. Raigad- 410202
**Mob: 7303088148 / 9324555136**

**LAWAS LUBE - SPECIALITIES**

Email: lawassales@gmail.com / lawaslawas@gmail.com

ADVT.



# கார்பனை சீர்செய்தல்

கிரண் ஜெஹரா

சம்ஸ்கர் பள்ளியின் இண்டராக்ட் சங்கத்தை சேர்ந்த மாணவர்கள் நடத்திய தெரு நாடகத்தை பார்த்த போது தான் நரசிம்மா முதன் முதலில் ''கார்பன் தடம்'' என்ற வார்த்தையைக் கேட்டார். RC ஹைதராபாத் லெஜண்ட்ஸ், RID 3150-ன் முன்முயற்சியின் ஒரு பகுதியான இந்த நாடகம், பாரம்பரிய நிலக்கரி இஸ்திரி பெட்டிகளை விட LPG இஸ்திரி பெட்டிகளின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

ஹைதராபாத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் தற்காலிக கூடாரத்தில் வசித்து வருகிறார் நரசிம்மா. இவர் பகலில் குடியிருப்போருக்கு துணிகளை இஸ்திரி செய்கிறார், இரவில் காவலாளியாக பணியாற்றுகிறார். பல ஆண்டுகளாக, அவர் பாரம்பரிய நிலக்கரி இஸ்திரி பெட்டியைப் பயன்படுத்தினார், அது வெப்பமடைய ஒன்றரை மணி நேரம் ஆகும். இதனால் அவர் இடைவேளையின்றி பெரிய தொகுதிகளில் ஆடைகளை இஸ்திரி செய்ய வேண்டியிருந்தது, இது மதிய உணவை தாமதமாக உண்பதற்கும் இரவு உணவைத் தவிர்க்கவும் வழிவகுத்தது. ''நான் ஒவ்வொரு மாதமும் நிலக்கரியை வாங்க 4,000 ரூபாய் செலவு செய்தேன், சம்பாதித்த பணம் வாய்க்கும் வயிற்றிக்கும் சரியாக இருந்தது'' என்று அவர் கூறுகிறார்.

தெரு நாடகத்தில் விளக்கப்பட்டது என்னவெனில், ''கார்பன் தடம் என்பது மின்சாரத்தை அதிகமாகப் பயன்படுத்துதல், கார்கள் மற்றும் பிற வாகனங்களை ஓட்டுதல், அல்லது நிலக்கரியை எரிப்பது போன்றவற்றால் ஏற்படும் மாசுகளின் அளவு. ஹைதராபாத்தில் உள்ள 5,000 இஸ்திரி தொழிலாளர்கள் மாதந்தோறும் 300 மெட்ரிக் டன் நிலக்கரியை எரித்து, கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும்

*கீழே: DG சரத் சௌத்ரி (நடுவில்), திட்டத் தலைவர் மோகன வம்சி (வலது), RC ஸ்மார்ட் ஹைதராபாத்தைச் சேர்ந்த சித்ரா சந்திரசேகர், மற்றும் RID 3234 RC மெட்ராஸின் முன்னாள் தலைவர்கள் S ரவி மற்றும் N K கோபிநாத் (இடது), பயனாளிகளுக்கு எரிவாயு சலவைப் பெட்டிகள் வழங்குகின்றனர்.*





*சாம்பமூர்த்தி சிவசுப்பிரமணியம், தலைவர், RC பெங்களூர் பிரிகேட்ஸ், அக்ஷய் மல்லப்பா மற்றும் அஸ்வனி கிங்கர், ஒரு பெண்ணுக்கு எரிவாயு சலவைப் பெட்டியைக் கொடுக்கிறார்கள்.*

உடல்நலப் பிரச்சினைகளுக்கு வழிவகுத்தனர். நிலக்கரியை சூடாக்க எடுக்கும் நேரம் மற்றும் நான் உள்ளிழுக்கும் புகை பற்றி நாடகம் என்னை சிந்திக்க வைத்தது'' என்று நரசிம்மா நினைவு கூர்ந்தார்.

RC ஹைதராபாத் லெஜெண்ட்ஸ், 4,500 ரூபாய் மதிப்புள்ள LPG இஸ்தரி பெட்டிகளை 2,500 ரூபாய்க்கு வழங்கு வதைக் கேள்விப்பட்ட போது, அவர் மாற முடிவு செய்தார். சங்கத்தின் முன்னாள் தலைவர் மோகன வம்சி தலைமையில், ஐதராபாத்தில் உள்ள இஸ்திரி தொழிலாளர்களுக்கு 200 LPG இஸ்தரி பெட்டிகள் விநியோகிக்கப் பட்டன, RID 3232 (சென்னை) 60 இஸ்தரி பெட்டிகளை ஸ்பான்சர் செய்தது. RCக்கள் ஹைதராபாத் குளோபல் விஸார்ட்ஸ் மற்றும் ஸ்மார்ட் ஹைதராபாத் பயனாளிகளை அடையாளம் காணவும் திட்டத் திற்கான நன்கொடையாளர்களை கண்டறியவும் உதவியது.

LPG இஸ்தரி பெட்டி மிக வேகமாக வெப்பமடைகிறது, இது எனக்கு நேரத்தை மிச்சப்படுத்து கிறது என்கிறார் நரசிம்மா. இது அவரை முன்கூட்டியே வேலையைத் தொடங்கவும், நிறைய வாடிக்கையாளர்களுக்குச் சேவை செய்யவும் அனுமதிக்கிறது, மேலும் அவரது தினசரி உற்பத்தியை 20 ஆடைகளிலிருந்து 50-ஆக உயர்த்து கிறது. ''இந்த கூடுதல் உற்பத்தி யின் விளைவாக ஒரு நாளைக்கு ரூ.200–250, மாதத்திற்கு மொத்தம் ரூ.5,000 கிடைக்கிறது'' என்று புன்னகைக்கிறார். LPG-க்கு மாறியது ''நிலக்கரி புகை சுவாசிப்பதை நீக்கியது, உடல்நல அபாயங்களைக் குறைத்தது, மேலும் சரியான நேரத்தில் உணவைச் சாப்பிடவும், நான் விரும்பும் போது ஓய்வு எடுக்கவும் என்னை அனுமதிக்கிறது. பாரம்பரிய இஸ்தரி பெட்டிடன் ஒப்பிடும்போது இது இலகுவாகவும் உள்ளது.

''சுற்றுச்சூழல் நன்மையைத் தவிர, LPG-யின் செலவுத்திறன் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. LPG உடன் ஒரு துணிக்கான எரிபொருள் விலை 1.35 ரூபாயில் இருந்து 55 பைசாவாகக் குறைந்தது, பயனாளிகளின் மாதாந்திர எரிபொருள் செலவு 1,650 ரூபாயாகக் குறைக்கப்பட்டு, அவர்களுக்கு மாதம் 2,350 ரூபாய் சேமிப்பை வழங்கியது. 200 தொழிலாளர்களின் வருமானத்தை நாங்கள் கணக்கிட்டு, அவர்களின் மாத வருமானம் 27 சதவீதம் உயர்ந்துள்ளதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தோம்,'' என்கிறார் வம்சி.

நரசிம்மாவின் வாடிக்கை யாளர்களும் முன்னேற்றத்தைக் கவனித்தனர். LPG இஸ்தரி பெட்டியில் வெப்பநிலை கட்டுப் பாட்டு குமிழ் இருக்கிறது, இது ஆடைகள் அதிக வெப்பமடையாமல் அல்லது எரிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்கிறது, இது நிலக்கரி இஸ்தரி பெட்டிகளின் பொதுவான பிரச்சினையாகும். நிலக்கரி தீப்பொறிகள் இல்லாததால் மென்மையான துணிகளில் தற்செயலான துளைகள் ஏற்படு வதில்லை.

இதேபோன்ற முயற்சியில் **RC பெங்களூர் பிரிகேட்ஸ், RID 3192**, புதிய ரோட்டரி ஆண்டை ஒரு அர்த்தமுள்ள முயற்சியுடன் துவக்கியது. சாலையோர வண்டிகளுடன் இஸ்திரி வேலை செய்யும் பெண்களுக்கு இரண்டு எரிவாயு இஸ்தரி பெட்டிகளை வழங்கினர். இந்த முயற்சி அவர்களின் அன்றாட பணிகளை எளிதாக்குவதையும், பாரம்பரிய நிலக்கரி இஸ்தரி பெட்டிகளின் மீதான சார்ப்பை குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.■



# மரங்கள் மூலம் புவிக்கு நன்றி

ரஷீதா பகத்



ரோட்டரி அறக்கட்டளைக்கு 100 கோடி ரூபாய் நன்கொடையாக வழங்குவதாக உறுதியளித்து ரோட்டரி உலகையே உலுக்கிய DGN (RID 3192) ரவிசங்கர் டகோஜு, இந்திய ரோட்டரியில் எப்போதும் தனது தனித்துவமான சிந்தனைக்கு பெயர் பெற்றவர். சுற்றுச்சூழலுக்கான தனித்துவ பங்களிப்பு செய்ய விரும்பிய அவர் ஏதாவது பெரியதாக செய்ய நினைத்தார். தன்னை போலவே பூமியை பசுமையாக்கும் ஆர்வத்தை பகிர்ந்து கொள்ளும் ரோட்டரியில் உள்ள தனது நெருங்கிய நண்பரான நீல் ஜோசப்பிடம், டகோஜு தன்யவாத் (Dakoju Dhanyavaad) என்ற திட்டத்தின் மூலம் 1,00,000 மரங்களை நட விரும்புவதாக கூறினார். டகோஜுவால் அமைக்கப் பட்ட ரோட்டரி சுற்றுச்சூழல் அறக் கட்டளையின் இணை அறங்காவலர் நீல் ஜோசப் ஆவார், அதில் டகோஜு, RIDE K P நாகேஷ் மற்றும் PDG சுரேஷ் ஹரி ஆகியோர் சக அறங் காவலர்களாக உள்ளனர். பௌலா மற்றும் ரவிசங்கர் டகோஜு அறக் கட்டளையால் செயல்படுத்தப்படும், இந்தத் திட்டத்தின் நோக்கம் “இயற்கை அன்னை எனக்காக செய்த அனைத்து கருணைகளுக்காகவும் நன்றி தெரிவிப்பது” என்று அவர் கூறுகிறார்.

ஆனால், குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் செலவாகும் அத்தகைய ஒரு மெகா திட்டத்தைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்கு நேரம் செலவாகும், ‘‘ஆனால், வேகமாக நெருங்கி வரும் பருவமழையைத் தவறவிட நான் விரும்பவில்லை. நாங்கள் முடிவு செய்த இடங்கள் கோவா மற்றும் சிந்துதுர்க். நாங்கள் இருவரும் ரோட்டரியில் பெரிதும் மதிக்கும் RC கூடல் முன்னாள் தலைவர் கஜானன் கண்டேல்கோங்கரிடம் ஆலோசனை பெற சென்றோம். சிறிது வார்த்தைகள் மட்டுமே பேசும் அவர், ஒரு சிறந்த அமைப்பாளர், குறைந்த நேரத்தில் சிந்துதுர்க் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி மற்றும் RC கூடல் அமைந்துள்ள மூன்று இடங்களில் முதற்கட்டமாக 11,000 மரங்களை நடும் அற்புதமான திட்டத்தை அவர் திட்டமிட்டார்’’.

ஜூலை 3 அன்று, உள்ளூர் மக்களுக்குப் பயன்படும் கொக்கும், முந்திரி, மா, வேம்பு, பலா மற்றும் தென்னை போன்ற மரங்கள் நடப்பட்ட முதல் நிகழ்வு, மட்கானில் உள்ள ஒரு பள்ளியில் நடைபெற்றது.

**மேலே:** RID 3192 DGN *ரவிசங்கர் டகோஜு மற்றும் நீல் ஜோசப் சிந்துதுர்க்கில் டகோஜு தன்யாவாத் என்ற திட்டத்தின் மூலம் 1 லட்சம் மரக்கன்றுகள் நடும் முயற்சியில்*

**வலது:** RC *ஆக்ரா,* RID 3110*, உறுப்பினர்கள் ஆக்ராவில் பசுமையாக்கல் இயக்கத்தில்.*

சிந்துதுர்க் மாவட்டத்தில் உள்ள பண்டூரில் உள்ள மற்றொரு பள்ளியில் இரண்டாம் நிகழ்வு நடைபெற்றது. இதில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், உள்ளூர் மக்கள், PDG கவுரிஷ் தோண்ட், RC கூடல் தலைவர் சஞ்சய் கேசரே, கண்டேல்கோங்கர் மற்றும் முன்னாள் உதவி கவர்னர் ராஜன் போபேட் ஆகியோர் பங்கேற்றனர்.





“RC கூடல் மிகக் குறுகிய காலத்தில் செய்த ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக இருந்தன, மேலும் உற்சாகமான பள்ளிக் குழந்தைகளின் அரட்டைகள் காற்றை நிரப்ப அந்த இடம் விழாக்கோலம் பூண்டிருந்தது’’ என்று டகோஜு நினைவு கூர்ந்தார்.

PDG தோண்ட் RC கூடலின் முயற்சியையும் கடின உழைப்பையும் பாராட்டினார். டகோஜு மேலும் கூறுகையில், ‘‘இந்த நிகழ்வில், பள்ளிக் குழந்தைகள் முதல் சமூகத்தில் உள்ள முதியவர்கள் வரை அனைத்து வயதினரும் புவி வெப்பமடைதலின் தீய விளைவுகள் பற்றி வெளிப்படுத்திய கவலையை கவனித்ததில் நான் மிகவும் ஈர்க்கப்பட்டேன். இதை நாம் புவியின் போலியோ என்று அழைக்கிறோம். அடையாளச் சின்னமாக, பண்டூரில் உள்ள சிவாஜி ஆங்கிலப் பள்ளி

வளாகத்தில் சில கொக்கும் மரங்கள் நடப்பட்டு, பிற மரக்கன்றுகள் வழங்கப்பட்டன'' என்றார்.

அடுத்து, ரோட்டேரியர்கள் கெரவாடேவில் உள்ள முற்றிலும் கிராமப்புற சூழலுக்கு இடம் பெயர்ந்தனர், ''அது சேறு நிறைந்த சாலைகள் மற்றும் பசுமையைக் கொண்ட உட்புற கிராமப் பகுதி. இந்த பகுதி மேற்கு தொடர்ச்சி மலையின் புகழ்பெற்ற சயாத்ரி மலைத்தொடரின் ஒரு பகுதியாகும், மேலும் இதில் பங்கேற்றவர்கள் ஏழை மற்றும் விளிம்புநிலை விவசாயிகள். எளிமையான, ஆனால் சூடான மற்றும் சுவையான உணவு தயாரிக்கப்பட்டு எங்களுக்கு வழங்கப்பட்டது, அது எங்கள் அனைவருக்கும் நீண்ட காலம் நினைவில் இருக்கும்.''

ஜூலை 19ம் தேதி, இப்பகுதியில் மீண்டும் 5,000 மரங்கள் நடப்பட்டன. ஜூலை 28 அன்று, திட்டத்தின் ஒரு பகுதியாக, கூடுதலாக 25,000 மரங்கள் நடப்படும். இம்முறை, RC கோவா போர்வோரிம் ஏற்பாடு செய்துள்ள கோவா மழை ஓட்டத்துடன் மரம் நடும் விழா நடைபெறவுள்ளது.



*இந்தத் திட்டத்தின் நோக்கம் இயற்கை அன்னை எனக்காக செய்த அனைத்து கருணைகளுக்காகவும் நன்றி தெரிவிப்பது.*

**ரவிசங்கர் டகோஜு**
DGN, RID 3192

டகோஜு, பூமித்தாயை பசுமையாக்கும் இந்த மெகா மரம் நடும் முன்முயற்சி ஒரு பக்க விளைவை ஏற்படுத்தும் என்றும் மேலும் பல ரோட்டரி சங்கங்கள் இந்த திட்டத்தை பெரிய அளவில் மேற்கொள்ளும் என்றும் நம்புவதாக கூறினார். ''சமீபத்தில், RID இயக்குநர் ராஜு சுப்ரமணியனுடன் இணைந்து RID 3170 DG-யாக ஷரத் பாய் பதவியேற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது, RC பெல்காம் தலைவரான சுஹாஸ் சந்தக் (வேகா ஹெல்மெட் உரிமையாளர்) தான் சங்கத் தலைவராக இருக்கும் காலத்திலே ஒரு லட்சம் மரங்களை நடுவதாக உறுதிமொழி எடுத்ததை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஒரு AKS உறுப்பினராகவும் ஆக உள்ளார்.''

**150 மரக்கன்றுகளை நடவு செய்த RC ஆக்ரா, RID 3110,** மற்றொரு முன்முயற்சியில், RC ஆக்ரா தனது வருடாந்திர மழைக்கால நடவு இயக்கத்தை 150 வேம்பு, கொய்யா, ஜாமுன், சம்பா மற்றும் குல்மோஹர் மரங்களை நட்டு துவக்கியது. சமூக சேவை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சங்கத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்திய சங்கத் தலைவர் நம்ரதா பணிக்கர், இந்த நடவுத் திட்டம் பசுமையான ஆக்ரா மற்றும் பசுமையான உலகிற்கான பணியின் குறிப்பிடத்தக்க படியாகும் என்றார்.■

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## பெண்களுக்கான கழிப்பறைத் தொகுதிகள்

அவனியாபுரம் அரசு HS பள்ளியில் ரூ.5.5 லட்சம் மதிப்புள்ள பெண்கள் கழிப்பறைத் தொகுதியைத் தொடங்கி வைத்தது RC மதுரை சங்கமம், RID 3000. பன்னாட்டு நல்கை, நடராஜ் எண்ணெய் ஆலையின் CSR நல்கை மூலம் நிதியளிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை மாநிலக் கல்வி அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி, RIDE M முருகானந்தம் காணொளி மூலம் தொடங்கிவைத்தார்கள்.



**பெண்களுக்கான கழிப்பறை**

*ரோட்டேரியன்கள் மற்றும் மாணவர்கள் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட கழிப்பறை தொகுதி முன்.*

## கண் புரை அறுவைச் சிகிச்சை முகாம்

RC பிசௌலி, RID 3110 நடத்திய பரிசோதனை முகாமில் கண் புரை கண்டறியப்பட்ட 12 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது, நோயாளிகளுக்கும் அவர்களைக் கவனித்துக்கொள்வோருக்கும் இந்தச் சங்கம் மதிய உணவு வழங்கியது.



**கண் புரை அறுவைச் சிகிச்சை**

*கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பிறகு.*

## காது கேளாதோருக்கு கேட்டல் கருவிகள்

காது கேளாதோருக்கான C R ரங்கநாதன் பள்ளி, மற்றும் YMCA பள்ளியில் 35 குழந்தைகளுக்கு நவீனக் கேட்டல் கருவிகளை வழங்கியது RC புணே கொத்ருட், RID 3131. இதற்கான ரூ.25.1 லட்சம் நிதி, L K கெமிக்கல்ஸ் (ரூ.18.64 லட்சம்), இன்ட்ராகிளவுட் டெக்னாலஜீஸ் (ரூ.5.2 லட்சம்), மாவட்ட நல்கை (ரூ.1.25 லட்சம்) மூலம் பெறப்பட்டது.



**கேட்டல் கருவிகள்**

*ரோட்டேரியன்கள் ஒரு குழந்தைக்கு காது கேட்கும் கருவியை வழங்குகிறார்கள்.*

## புற்றுநோய் கண்டறிதல் வேன்

ஒரு பன்னாட்டு நல்கையின்கீழ், ஹூப்ளியில் உள்ள கர்நாடகப் புற்று நோய்ச் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி கல்விக்கழகத்துக்கு புற்றுநோய் கண்டறிதல் வேனைக் கொடையளித்தது RC ஹூப்ளி, RID 3170.■



**புற்றுநோய் கண்டறிதல்**

*புற்றுநோய் பரிசோதனை வேனுக்குள் ஒரு பெண் பரிசோதிக்கப் படுகிறார்.*

RC பூனா டௌன்—டவுனின் முச்சக்கரக் கடைத்திட்டம் மாற்றுத் திறனாளிகளுக்குப் பொருளாதார விடுதலை, தன்மதிப்பை வழங்கி வலுவூட்டுகிறது.

# நடமாடும் கடைகள்

ஜெய்ஸ்ரீ

ஔரங்காபாதில் வசிக்கும் நந்தா ஹிவாரெ-யின் நாட்கள் இப்போதெல்லாம் நம்பிக்கை, நல்வாய்ப்பால் நிரம்பியுள்ளன. இரண்டு குழந்தைகளின் தாயாகிய இந்த மாற்றுத் திறனாளி நாள்தோறும் ரூ.300 முதல் ரூ.400 வரை சம்பாதிக்கிறார். இதற்குக் காரணம், RC பூனா டௌன்-டவுன், RID 3131, வழங்கிய இவருடைய உயிர்நாடியான முச்சக்கரக் கடைதான். மூன்று ஆண்டுகளுக்குமுன்னால் ஒரு விபத்து நந்தாவைக் கடுமையாகப் பாதித்தது. அதன்பிறகு, அவர் ஊன்று கோல்களை நம்பி வாழவேண்டியிருந்தது. இவருடைய கணவர் கட்டுமானப்பணியாளர். அவருடைய சம்பளத்தால்தான் குடும்பம் நடந்து கொண்டிருந்தது.

“என்னால் கால்களைப் பயன்படுத்த இயலாது என்பதால், கையால் இயக்கக்கூடிய மிதிகட்டைகளைக் கொண்ட முச்சக்கர வண்டியை இச்சங்கத்தினர் வழங்கியுள்ளார்கள். நாள் தோறும், வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுச் சுமார் 10 மணியளவில் நான் வேலைக்குக் கிளம்புவேன், அக்கம்பக்கத்து அடுக்ககத் தொகுதிகளின் அருகில் என் வண்டியை நிறுத்துவேன். அங்கு, வளையல்கள், காப்புகள், மற்ற செயற்கை நகைகளைப் பெண்களும் குழந்தைகளும் ஆர்வத்துடன் வாங்குகிறார்கள்” என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறார் இவர்.

இந்தச் சங்கத்தின் முச்சக்கரக் கடைத் திட்டம் சென்ற ஆண்டில் 34 மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையை மாற்றியமைத்துள்ளது. ஒவ்வொரு கடையிலும் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான இடமும், பணப் பெட்டியும், மழைக்கான உறையும் உள்ளன. பெறுவோருடைய குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப நாங்கள் இந்த வண்டிகளை மாற்றியமைக்கிறோம். அவர்களுடைய நிலைக்கு ஏற்பக் கையால் அல்லது காலால் இயக்கக்கூடிய மிதிகட்டைகளை வழங்குகிறோம்” என்று விளக்குகிறார் சங்கத்தின் முன்னாள் செயலாளர் ஷிகா மித்ரா. ஒரு முச்சக்கரக் கடையின் விலை சுமார் ரூ.35,000.

இந்தச் சங்கத்தின் முன்னோடித் திட்டமான நடமாடும் பரிசு, முந்தைய 20 ஆண்டுகளில் நாடுமுழுவதும் 10,000க்கும் மேற்பட்ட மக்களுக்குச் செயற்கைக் கைகளை வழங்கியுள்ளது. அதிலிருந்து ஊக்கம் பெற்றதுதான் இந்தத் திட்டம். “நாங்கள் இனாலி அறக்கட்டளை, எல்லென் மீடோஸ் அறக்கட்டளையின் ஆதரவுடன் ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து பணியாற்றி, தேவையுள்ளோருக்கு LN-4 கைகளை வழங்குகிறோம், அவற்றைப் பயன்படுத்துவதற்குப் பயிற்சியளிக்கிறோம். செயற்கைக் கைகளைக் கொண்டு மக்கள் வண்டி ஓட்டுகிறார்கள், விவசாயிகள் வயலில் பணிபுரிகிறார்கள், குழந்தைகள் பாடங்களை எழுதுகிறார்கள்... இதையெல்லாம் பார்த்து நாங்கள் மிகவும் மகிழ்கிறோம். மாற்றுத் திறனாளிகளுக்குச் சுயதொழில் வாய்ப்புகளை வழங்கி, அவர்களுடைய தன்மதிப்பையும்



*மாற்றுத்திறனாளி இளைஞர் அவரது மூன்று சக்கர சைக்கிள் கடையில் இருந்து தின்பண்டங்கள் மற்றும் தேநீர் விற்கிறார்.*

மதிப்புணர்வையும் மேம்படுத்த உதவவேண்டும் என்று இந்த வெற்றி எங்களை ஊக்குவித்தது'' என்று சிரிக்கிறார் அருணா ரதி, சங்கத் தலைவர் (2023–24).

இந்த முச்சக்கர வண்டிகள் பலவிதமாக அமைகின்றன; இவற்றில் தின்பண்டங்கள், மொபைல் தொலைபேசிக்கான துணைப்பொருட்கள் அல்லது எழுதுபொருட்கள் விற்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின்மூலம் பலன் பெற்ற ராஜீவ், அலுவலகங்கள், கட்டுமானப் பணியிடங்களுக்கு அருகில் தன்னுடைய முச்சக்கர வண்டியை நிறுத்திக் காஃபி, தேநீர், பிஸ்கட்களை விற்கிறார். இடுப்புக் கீழே பக்கவாதம் வந்த ஆஷா ஆக்லவெ தன் முச்சக்கரக் கடையிலிருந்து ஆயத்த ஆடைகளை விற்கிறார், மாதம் ரூ.500லிருந்து 800 வரை சம்பாதிக்கிறார்.

இந்தத் தொழில்முனைவோர் தங்கள் தொழில்களைத் தொடங்கு வதற்கான தொடக்க நிதியையும் இந்தச் சங்கம் வழங்குகிறது. RC சதாரா, RID 3132, ஒன்பது முச்சக்கரக் கடைகள் வழங்கப்பட்டன. அந்த மகாராஷ்டிர மாவட்டத்திலும் அதைச் சுற்றியும் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு இவை உதவும்.




*முன்னாள் தலைவர் யெஸ்டி பட்லிவாலா மற்றும் அவரது மனைவி பூருச்சி ஒரு முச்சக்கரவண்டி கடை தங்கள் மகள் ஷர்மினின் நினைவாக கீதாஞ்சலி சலுங்கேவுக்கு வழங்குகிறார்கள்.*

இந்தத் திட்டம் பலன் பெறு வோருக்கு வழங்குகிற பொருளாதார, உளவியல் மாற்றத்தால், பெரு நிறுவனங்கள் பலவும் இதை ஆதரிக்க முன்வருகின்றன என்கிறார் இவர். ஜூன் மாதத்தில், பிரவீண் மசாலாவாலெ என்ற மசாலாப் பொருள் தயாரிப்பு நிறுவனம் தன்னுடைய நிறுவனரும், வீடு வீடாக மிதிவண்டியில் சென்று இந்தத் தொழிலைத் தொடங்கியவருமான ஹூக்மிசந்த் சொர்டியா நினைவாக 91 முச்சக்கர வண்டிகளை ஆதரித்தது. இந்த முச்சக்கர வண்டிகளில் 15 ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன, மற்றவற்றைப் பெறுவதற்கு ஏற்றவர்கள் அடையாளம் காணப்பட்டு வருகிறார்கள்.

இந்தச் சங்கத்தின் தலைவர் நானு ஐயர் இந்தத் தாக்கமுள்ள திட்டத்தை இந்த ஆண்டும் தொடர ஆர்வம் காட்டுகிறார், இதன்மூலம் இன்னும் பல வாழ்க்கைகளை நடமாடல், தொழில்முனைவின் ஆற்றல் கொண்டு மாற்றியமைக்கவேண்டும் என்று விரும்புகிறார்.■

## நோயாளிகளின் பராமரிப்பை மேம்படுத்தும் புதிய உள்கட்டமைப்பு

ரோட்டரி செய்திக் குழு



கோயம்பத்தூரில் உள்ள ஸ்பைன் அகாடமிக்குப் புதிய தொகுதி, அதற்கு 20 படுக்கைகள், சக்கர நாற்காலிகளை வழங்கியது RC கோயம்பத்தூர் டெக்-சிட்டி, RID 3201. ரூ.30 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டத்துக்குச் சங்க உறுப்பினர்கள், Eye Foundation நிறுவனர்களான Dr சித்ரா, Dr ராமமூர்த்தி ஆகியோர் தாராளமாக உதவினார்கள். பவித்ரா அரவிந்த் தலைமையிலான இந்தச் சங்கத்தின் ஆன்கள் பிரிவு மோட்டார் பொருத்தப்பட்ட படுக்கைகளை வழங்கியது. இதன் திட்டத் தலைவர், அரவிந்த்குமரன்.

இப்போது, முதுகெலும்புக் குறைபாட்டால் படுத்த படுக்கையாகிவிட்ட, உறவினர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் உள்பட 50 பேரைப் பராமரித்துவரும் இந்த அகாடமி மேலும் 25 பேருக்கு உதவுவதற்கு இந்த வசதிகள் கை கொடுக்கும்.■

IPDG T R *விஜயகுமார் (நடுவில்), சங்கத் தலைவர்* (2023–24) *விஜயகுமார் சிவநேசன் மற்றும் செயலாளர் தேவி மாருதி சங்க உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர் களுடன் ஸ்பைன் அகாடமியில்.*

# நாக்பூர் பள்ளிகளில் மனநலம் பற்றிய விழிப்புணர்வு

ரீட்டா அகர்வால்





இளைஞர்களை ஒரு அமைதியான நெருக்கடி பாதித்துக் கொண்டிருக்கிறது - கவலை, மனச்சோர்வு மற்றும் தற்கொலை ஆகியவற்றின் அதிகரிப்பு. இது ஒரு தேசிய யதார்த்தம் மற்றும் 35 ஆண்டுகளாக மனநல நிபுணராக, நான் எச்சரிக்கை அறிகுறிகளைப் பார்த்து வருகிறேன். கோவிட் தொற்றுநோய் போது கவலை மற்றும் மனச்சோர்வு 20 சதவீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக உயர் நிலைப் பள்ளி மாணவர்களிடையே தற்கொலை மரணங்களும் அதிகரித்து வருகின்றன. மன ஆரோக்கியத்தைச் சுற்றியுள்ள களங்கம் காரணமாக, அதைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருந்தது. இளைஞர்கள் அமைதியாக அவதிப்பட்டு கடைசி விருப்பத்தை நாடினர். இந்தியாவில், மக்கள்தொகையில் 50 சதவீதம் பேர் 25 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் மூன்றில் ஒரு பகுதியினர் 18 வயதுக்குட்பட்டவர்கள், இது ஒரு முக்கியமான பிரச்சினை.

சமூக மதிப்பீட்டில் பெரும் பாலான பள்ளிகள் பள்ளி ஆலோசகர்/ உளவியலாளரை பணியமர்த்தவில்லை என்றும், அவ்வாறு செய்ய நினைக்க வில்லை என்றும் கண்டறியப்பட்டது. சமூகத்தில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள் இளைஞர்களிடையே அதிகரித்து வரும் மனச்சோர்வு, கவலை மற்றும் மன அழுத்தத்தை சமாளிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர்.

வெல்னஸ் இன் எ பாக்ஸ் (Wellness in a Box) என்பது மனநல முன் முயற்சிகள் குறித்த ரோட்டரி ஆக்ஷன் குழுவின் (RAGMHI) நன்கு கட்டமைக்கப்பட்ட திட்டமாகும். இது ஹார்வர்ட் மருத்துவப் பள்ளியில் பாஸ்டன் குழந்தைகள் மருத்துவ மனையால் உருவாக்கப்பட்ட ஒரு பாடத்திட்டத்தைப் பயன்படுத்துகிறது, இது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு மனச்சோர்வு, கவலை மற்றும் தற்கொலையை எவ்வாறு தடுப்பது என்பதைக் காட்டுகிறது. இது விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மாணவர்களிடையே சமாளிக்கும் உத்திகள் மற்றும் மனதைரியத்தை உருவாக்க உதவுகிறது மற்றும் உரையாடல்களைத் தொடங்குவதன் மூலம் களங்கத்தை உடைக்கிறது.

நாக்பூரின் ரோட்டரி சங்கம், 2022-ம் ஆண்டில் உலகளாவிய மானியத்தில் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள RC நேபிள்ஸுடன் கூட்டு சேர்ந்து இந்தத் திட்டத்தைத் தொடங்கியது, இது தொற்றுநோய் பூட்டுதலுக்குப் பிறகு பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்ட போது செயல்படுத்தப்பட்டது.

ரோட்டரி கிளப் ஆஃப் நாக்பூரின் (RID 3030) ரோட்டேரியர்கள் குழு இரண்டு வருட திட்டத்திற்கு தங்கள் முழு ஆதரவையும் சேவையையும் வழங்கினர், சங்க உறுப்பினர்களான நீரஜா ஷுகுல், ராகினி சாஹூ மற்றும் ஆன்ஸ் மம்தா கஹாய், ஷெபாலி ஷா மற்றும் மது மிரிக் ஆகியோருடன் நமிதா ஷர்மா இணைந்து நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இந்தத் திட்டம் சமூகப் பணிக்கான கல்லூரியின் உதவியுடன் பள்ளி ஆலோசனையில் ஒரு வருட பகுதி நேர டிப்ளமோவை உருவாக்கியது. இதுவரை, 20 பள்ளி ஆசிரியர்கள் டிப்ளமோ பெற்றுள்ளனர். பள்ளி ஆலோசனையில் ஆசிரியர்களின் திறன்களை வளர்ப்பதன் மூலம், மானியத்தால் வழங்கப்படும் உளவி யலாளரிடம் இருந்து ஆலோசனை சேவைகளை ஆசிரியர்களுக்கு மாற்றுவோம் என்று நம்புகிறோம்.

RI தலைவர் கார்டன் மெக்கினலி ஏப்ரல் 2023-ல் நாக்பூருக்கு விஜயம் செய்தார் மற்றும் இத்திட்டத்தால் மிகவும் ஈர்க்கப்பட்டார்.

இரண்டாவது படி, துன்பத்தில் உள்ளவர்களை அடையாளம் கண்டு உதவுவதற்கு பள்ளி மாணவர்களிடையே சக தலைவர் களை உருவாக்குவது. அவர்கள் உதவி தேவைப்படும் மாணவர்களை ஆலோசனை உளவியலாளரிடம் பரிந்துரைப்பதன் மூலம் அவர்களுக்கு உதவுவார்கள்.

இதுவரை, 2,300 மாணவர்கள் மற்றும் 2,000 பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்றுள்ளனர் மற்றும் பலர் ஆலோசனை மற்றும் சிகிச்சையால் உதவப்பட்டுள்ளனர்.

யசோதரா பாஹு உப்தேஷியே சன்ஸ்தா என்ற தன்னார்வ தொண்டு



மனநலம் குறித்த அமர்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள்.

நிறுவனம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முன் மற்றும் பிந்தைய ஆய்வு மூலம் முடிவுகளை அளவிடுவதில் எங்களுக்கு உதவியது. மனச் சோர்வு பற்றிய அறிவு, ஆலோசகரின் உதவியை நாடுவதில் நம்பிக்கை ஆகியவற்றின் அளவு அதிகரிப்பதைக் கண்டோம், மற்றும் மனச்சோர்வை நோக்கிய எதிர்மறை அணுகுமுறையின் அளவு குறைவதையும் கண்டோம்.

இதன் தாக்கம் மனதுக்கு இதமாக இருந்தது. பெற்றோரும் மாணவர்களும் தங்கள் கண்ணீரைத் துடைத்து வெளிப்படையாக அழுதனர், அவர்கள் வாழ்வில் முதல்முறையாக தங்கள் ரகசியங் களைப் பகிர்ந்து கொண்டனர். பாடம் கற்பிப்பது போதாது, குழந்தைகளின் மனநலம் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை ஆசிரியர்கள் உணர்ந்தனர். அவர்களுக்கு இது ஒரு தாழ்மையான அனுபவம். மதிப்பெண்களை விட மனநலம் முக்கியம் என்பதை மாணவர்கள் உணர்கின்றனர்!



RAG for Mental Health Initiatives *நிறுவனர் இயக்குநர் ரீட்டா அகர்வால், PRIP கார்டன் மெக்கினல்லி மற்றும் PDG ஆஷா வேணுகோபால் உடன் நாக்பூரில்.*

இதன் தாக்கம் முழு நகரத்திலும் காணப்படுகிறது, பல பள்ளிகள் இந்த திட்டத்திற்காக எங்களை அணுகுகின்றன, மேலும் அதிகமான ஆசிரியர்கள் டிப்ளமோ சான்றிதழுக்காக தங்களை பதிவுசெய்து தாங்களே பணம் செலுத்தி பயில்கிறார்கள். சான்றிதழ் பெற்ற ஆசிரியர்கள் 400 பள்ளி முதல்வர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் மூத்த ஆசிரியர்களுடன் பள்ளிகளில் கவுன்சிலிங்கின் முக்கியத்துவம், மாணவர்களின் மனநலப் பிரச்னைகள், ஆசிரியர் களின் பங்கு குறித்து முழு நாள் கருத்தரங்குகளை நடத்தினர். பல ரோட்டரி சங்கங்கள் மற்றும் மனநல முன்முயற்சிகள் மீதான ரோட்டரி நடவடிக்கை குழுவின் மாவட்ட சாப்டர்கள் வெல்னஸ் இன் எ பாக்ஸ் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியுள்ளன.

உள்ளூர் ஊடகங்களில் எங்களுக்கு நல்ல கவரேஜ் கிடைத்தது, மேலும் மனச்சோர்வைத் தடுப்பதற்கான நான்கு மணி நேர பாடத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு சான்றளிக்கப்பட்ட ஆசிரியர்-ஆலோசகர்களால் தொடர்ந்து கற்பிக்கப்பட்டால் மகிழ்ச்சியாக இருக்கும். இந்த திட்டத்தை அனைத்து பள்ளிகளிலும் மாநில கல்வித்துறை மூலம் செயல்படுத்து வதே எங்கள் கனவு: இது நாம் கனவு காணக்கூடிய சிறந்த நீண்ட கால தாக்கமாக இருக்கும்.



மனநல முன்முயற்சிகள் மீதான ரோட்டரி ஆக்ஷன் குழு, “வெல்னஸ் இன் எ பாக்ஸ்” கருவித்தொகுப்பை ஆன்லைனில் இலவசமாகக் கிடைக்கச் செய்துள்ளது. இது உங்கள் உள்ளூர் பள்ளிகளில் இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான அனைத்தையும் உங்களுக்கு வழங்குகிறது. திட்டத்தைப் பற்றி மேலும் அறிய, மனநல முன்முயற்சி கள் குறித்த ரோட்டரி ஆக்ஷன் குரூப்பையும் நீங்கள் அணுகலாம். (*www.ragonmentalhealth.org*)



*ஆசிரியர்களுக்கான மனநலம் குறித்த அமர்வு.*

விழிப்புணர்வைப் பரப்பவும், உங்கள் நெட்வொர்க்குடன் வெல்னஸ் இன் எ பாக்ஸ் திட்டத்தை பகிர்ந்து கொள்ளவும், உங்கள் உள்ளூர் ரோட்டரி/ ரோட்டராக்ட் சங்கங்களைத் தொடர்புகொண்டு அதை உங்கள் சமூகத்திற்குக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒன்றாக, மன ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கும் உலகத்தை நாம் உருவாக்க முடியும்.

சிங்கப்பூரில் நடந்த RI மாநாட்டில் திட்ட இயக்குநர் ரீட்டா அகர்வால் ரோட்டரி பீப்பிள் இன் ஆக்ஷன் விருதைப் பெற்றபோது இந்தத் திட்டம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றது.

எழுத்தாளர் RC நாக்பூர் உறுப்பினர் மற்றும் RAGMHI நிறுவனர் இயக்குநர்.

# இந்தூர் தெரு உணவின் ஆனந்தம்

உரை: டீம் அப்பர் க்ரஸ்ட்
புகைப்படங்கள்: பர்சானா காண்ட்ராக்டர்



பானையில் பீட்சா

*பெயர் குறிப்பிடுவதைத் தாண்டி, தெருவின் இருபுறமும் 56-க்கும் மேற்பட்ட உணவுக்கடைகள் நேர்த்தியான வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. உணவின் வரிசையும் மனதைக் கவருகிறது மற்றும் மக்கள் ஒருபோதும் அங்கே சோர்வடைவதே இல்லை.*

உணவுத் தெருக்களைப் பற்றி நீங்கள் நினைக்கும் போது, நீங்கள் பரபரப்பான மற்றும் நெரிசலான தெருக்களை தான் நினைப்பீர்கள், அங்கே சர்வர்கள் தங்கள் ஸ்டால்களுக்கு உங்களை அழைப்பார்கள், ஆவி பறக்கும் வானல்கள் மற்றும் உங்களை உள்ளே ஈர்க்கும் வாசனைகளும் அங்கே இருக்கும். அவை மிகவும் சுத்தமில்லாத அல்லது நிதானமில்லாத இடம் என்று நினைப்பீர்கள். இந்தூரில் உள்ள உயர்மட்ட நியூ பலாசியா பகுதியில் உள்ள இந்த உணவுத் தெரு இக்கருத்துக்களில் பெரும்பாலானவற்றை அகற்றி, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தரங்களுடன், ஒவ்வொரு உணவுப் பிரியர்களுக்கும் ஏற்றவாறு, அனைத்தும் சைவ உணவாக, மலிவு விலையிலும் கிடைக்குமாறு ஒரு நன்கு திட்டமிடப்பட்ட உணவுத் திட்டத்தை வைத்திருக்கிறீர்கள். சப்பான் துகான் ஒரு சான்றளிக்கப்பட்ட சுத்தமான தெரு உணவு மையமாகும், இது 2022 இல் நடைபெற்ற ஸ்மார்ட் நகரங்கள் மாநாட்டில் சுற்றுச்சூழல் கட்டமைப்பு பிரிவில் இந்தூருக்கு விருதை பெற்று தந்தது.

இது 1970-களில் 56 கடைகளுடன் தொடங்கியது, கையேந்தி வண்டிகளுக்கு சிறிதளவு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இங்கே காய்கறிகள் மற்றும் பிறவற்றையும்



விற்பனை செய்ய அனுமதித்தது. சில காலத்திற்குப் பிறகு அது பிரபலமாகி, 80-களிலும் 90-களிலும், அந்த தெரு தனது புனைப்பெயரான, “சப்பான் துகான்” என அழைக்கப்பட்டது. அதன் பொருள் 56 கடைகள் என்பதாகும்.

ஆனால் இதில் உணவு எங்கிருந்து வருகிறது என்று நீங்கள் கேட்கலாம். 2020 வாக்கில், இந்தூர் ஸ்மார்ட் சிட்டி டெவலப்மென்ட் லிமிடெட் (ISCDL) இப்பகுதியை திறந்தவெளி ஸ்மார்ட் உணவுத் தெருவாக மறுவடிவமைத்தது. உணவுக் கடைகள் இடையில் நடக்க, உட்கார்ந்து சாப்பிட அல்லது இன்றைய இளைஞர்கள் விரும்புவது போல் செல்ஃபி எடுக்கும் வகையில் உள்ளது மற்றும் இங்கு வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை. காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இங்கே உணவுகள் வழங்கப்படுகின்றன.

நாங்கள் சப்பான் துகானுக்கு இரண்டு முறை பயணம் செய்தோம் - காலை, கூட்டம் இல்லாதபோது மற்றும் மாலை, அங்கே உணவிற்காக ஏங்கும் மக்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தபோது (ஆனால் வார இறுதியின் மக்கள் கூட்டத்தை விட இது குறைவே. அப்போது உட்கார கூட இடம் கிடைக்காது). காலை நேரத்தில் நாங்கள் சென்றபோது, சப்பான் துகானின் காட்சி மிகவும் இனிமையாக இருந்தது. நாங்கள் சாய் சுட்டா பார்க்கு சென்றபோது ஒரு இளைஞர்கள் குழு கிட்டார் வாசித்து, பாடி, ஆடி கொண்டிருந்தனர்.

இந்த நேர்த்தியான தேனீர் கடை நாட்டின் நான்கு திசையிலும் பரவியுள்ளது, போர்ட் பிளேயர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலும் கூட ஒரு கிளை உள்ளது. இது சப்பான் துகானின் மேம்பாட்டைப் போலவே ஒரு வெற்றிகரமான கதை. கைகள் கழுவும் நிலையங்கள், பரவலாக குப்பை தொட்டிகள் இருக்கும் உணவு தெருவை மற்று எங்காவது நீங்கள் கண்டிருக்கிறீர்களா? இந்தோரைப் பிரபலமாக்கிய அனைத்து உணவுப்பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் கண்டிருக்கிறீர்களா?

ரேடியோ 2 PI R சப்பான் என அழைக்கப்படும் உள்ளூர் நேரலை வானொலி நிலையமானது, பார்வை யாளர்கள் தங்களுக்கு விருப்பமான பாடலைக் கேட்பதற்கும், ஒரு பாடலை ஒருவருக்கு அர்ப்பணிப்பதற்கும், பொது அறிவிப்புகள் மூலம் சப்பான் துகான் பற்றிய அறிவிப்புகளைப் பெறுவதற்கும் பிரத்தியேகமாக அங்கே அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் நீங்கள் சப்பானில் சாப்பிடு வதற்காக இருக்கும் உணவுகள்! என்ன ஒரு வரிசை, ஹாட் டாக் (Hot dog) முதல் கச்சோரி வரை, தோசை, வடை, ரப்டி ஜிலேபி, குல்பி, பர்ஃபி, ஹல்வா, பீட்சா, சாண்ட்விச், கரும்புச் சாறு, கோலா, காய்ந்த பெர்ரி, பான், சாட் புகழ்பெற்ற இந்தோரி போஹா என பல வகை உணவுகள் பரந்து விரிந்து கிடக்கின்றன; மற்றும் நீங்கள் எதிர்பார்க்காத வகையில் ஷிகன்ஜி!

எண்ணற்ற ஸ்டால்களில் சுற்றித் திரிவதற்கு உங்களுக்கு



*குல்ஃபி மற்றும் அவல் உப்புமா.*



மாம்பழக் கின்னம்.



சிறிது நேரம் ஆகும், ஆனால் நீங்கள் சுவைக்கும் ஒவ்வொரு உணவிற்கும் செலவிடும் அந்த நேரம் தகுதியானது, சரஃபா பஜார் மற்றும் மேக்தூத் கார்டன்களுடன் ஒப்பிடுகையில் செல்ல எளிதான இடம் இதுவாகும், மேலும் உணவு விரும்பிகளால் அவ்விடங்கள் நிரம்புவதுமில்லை. மேலும் பெரும்பாலான ஸ்டால்களில் அவற்றின் சிறிய இடைவெளி களுக்குள் அமர இருக்கைகளும் இல்லை.

எங்களைப் பொறுத்தவரை, அதன் புகழ் நாட்டெங்கும் பரவியுள்ள போஹாவிடமிருந்து நமது பயணத்தை தொடங்க வேண்டியது அவசியம். விஜய் சாட் ஹவுஸ் இந்தப் போஹாவிற்கும் இன்னும் பலவற்றிற்கும் பிரபலமானது. இதை எப்படி சாப்பிடுவது என்றால்... போஹா ஒரு ஸ்பூன் எடுத்து, ஒரு பிசிகை எலுமிச்சை சேர்த்து, பின்னர் ஒரு துண்டு முறுகலான ஜிலேபியை கடியுங்கள், சுவைகளை உங்கள் நாவில் பறவ விடுங்கள். இங்கே போஹாவில் சிறப்பு ஜீரவான் மசாலா சேர்க்கப்படுகிறது, மேலும் நாங்கள் உங்களுக்கு சொல்ல வேண்டியது, இந்தோரில் போஹா மிருதுவாகவும் சரியாகவும் தயாரிக்கப்படுகிறது, சில இடங்களில் மாதுளையும் மற்றும் பெரும்பாலான இடங்களில் சேவ்வும் சேர்க்கப்படுகிறது. குப்புறா பட்டீஸ் இந்தோரில் இன்னொரு தனித்துவமான, ருசியான உணவு, சபூதானா வடை உடன் விஜய்யில் மற்றொரு சிறப்பு உணவு இதுவாகும்.

மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை எல்லையோர மாநிலங்களாக இருப்பதால், அவைகளுக்கு இடையே நிறைய ஒற்றுமைகள் உள்ளன, அவை இந்தூரின் உணவு இடங்கள் முழுவதும் சிதறிக் கிடப்பதைக் காணலாம், ஆனால் அவை அவற்றின் சொந்த மற்றும் ஒப்பற்ற பாணியில் செய்யப்படுகிறது. புகழ்வாய்ந்த, விருது பெற்ற ஜானி ஹாட் டாக்கில் உள்ள ஹாட் டாக்கை காணும்போது, நாம் அதை மனதில் வடா பாவ் உடன் ஒப்பிட்டு கொள்வோம், ஆனால் பொருத்தம் அதனுடன் முடிவடையும். 2019-ம் ஆண்டு ஹாங்காங்கில் நடைபெற்ற உபெர் ஈட்ஸ் உச்சிமாநாட்டில் ஆசிய பசிபிக் பகுதியில் அதிகம் ஆர்டர் செய்யப்பட்ட தெரு உணவுப் பொருளைப் பரிமாறியதற்காக ஜானி ஹாட் டாக் தனக்கென பெரும் புகழைப் பெற்றுள்ளது. அதன் உரிமையாளரின் பெயர் விஜய் சிங் ரத்தோர், சப்பானில் தாதூ என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். அந்த புகழ்பெற்ற ஹாட் டாக், தடிமனான, மென்மையான, பஞ்சுபோன்ற ரொட்டியின் உள்ளே உருளைக்கிழங்கு டிக்கி வைக்கப்பட்ட அற்புதமான சைவ உணவு. மெனுவில் உள்ள மற்ற இரண்டு ஐட்டங்கள் ஒரு மட்டன் ஹாட் டாக் மற்றும்



மலாய் மற்றும் மாம்பழ குல்ஃபி.



ட்ரை ஃப்ரூட் ரோல்



பாதாம் ரோல்


ஜிலேபி மற்றும் இந்தூர் போஹா (அவல் உப்புமா).


கொப்பரை கச்சேரி


மதுரம் இனிப்பக உரிமையாளர் ஷ்யாம் ஷர்மா.



பென்ஜோ என்று அழைக்கப் படும் முட்டை சாண்ட்விச் ஆகும் - சப்பானில் உள்ள ஒரே அசைவ உணவுகள். 45 ஆண்டு பழமையான ஸ்தாபனம் இன்னும் அங்கே பிரபலமாக உள்ளது. அங்கே அடுப்புக்குப் பின்னால் தாதூ சிரித்துக் கொண்டு அமர்ந்திருப்பார்.

சப்பானில் எங்கள் மனதை கவர்ந்த மூன்றாவது கடை, 100 ரூபாய்க்கு ஷாட் கிளாஸில் உங்களுக்கு ஒரு ஸ்பெஷல் உணவை வழங்கும் ஒரு இனிப்பு மற்றும் நம்கீன் கடை. மதுரம் ஸ்வீட்ஸ் உரிமையாளர் ஷியாம் ஷர்மா, தனது புகழ்பெற்ற ஷிகன்ஜி எங்களுக்கு உண்ண அளித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ரப்டியைப் போலவே, ஷிகன்ஜியும் ஒரு பானமாகும், இது கடுமையான வெப்பத்தில் உடல் அமைப்பைக் குளிர்விக்கும் மற்றும் அடிப்படையில் பால், உலர் பழங்கள், குங்குமப்பூ மற்றும் ஜாதிக்காய் ஆகியவற்றால் செய்யப்பட்ட இனிப்பு ஆகும். நாங்கள் கண்டுபிடித்த ரசமலாய், கரும்பைக் கொண்டு தயாரிக்கப் பட்டது மற்றும் ஜிலேபிகள் பல வகையில் உள்ளது! “தினமும் ஒன்று அல்லது இரண்டு துண்டுகளைச் சாப்பிடுங்கள்” என்று ஷ்யாம் ஷர்மா நீண்ட ஆரோக்கியமான வாழ்க்கைக்காக நமக்கு அறிவுரை கூறுகிறார்!

மதுரம்மில் உள்ள இனிப்பு வகைகளின் வகைப்பாடு மிகப் பெரியது, அவற்றில் பாதாம் கேரமல், ட்ரைஃப்புருட் ரோல், பாதாம் அல்வா, சோஹன் ஹல்வா... மேலும் நம்கீன்கள் மற்றும் போஹா, தோசை மற்றும் சாட் போன்ற சிற்றுண்டிகளும் அடங்கும். இங்கு மிகவும் பிரபலமானது, பிரம்மாண்டமான பாகுபலி சாண்ட்விச்! இது 35 பேர் கொண்ட குழுவிற்காக உருவாக்கப்பட்டது மற்றும் ராஜமௌலி காவியத்தில் உள்ள அரண்மனை போல தோற்றமளிக்கும் வகையில், மூன்று அடுக்குகளுடன் உருவாக்கப்பட்டது, அதன் மேல் காய்கறிகள், சோளம், மேயோ, சீஸ் என அனைத்தும் தூவப்பட்டுள்ளது.

நீங்கள் தென்னிந்திய உணவை அருந்தும் மனநிலையில் இருக்கும்போது, பலவிதமான தோசைகளை வழங்கும் 50 வருட பழமையான கஃபே உடுப்பி போன்ற விருப்பங்களும் உள்ளன.

பானின் ரசிகரா, குறிப்பாக தின்பண்டங்கள் மற்றும் நம்கீன்கள் சுவைக்குப் பிறகு தேவைபடுகிறதா? கல்கத்தா மீத்தாவிலிருந்து ராயல் மாகாய் மற்றும் அசாதாரண ஸ்மோக் பான் மற்றும் ஃபயர் பான் வரையிலான தேர்வுகள் இங்கே உள்ளன. புதிதாகப் பிழிந்த கரும்பு சாறு ருசியாக இருக்கும் மற்றும் அதன் ஆரோக்கியமான அளவில் உங்களை நிரப்பும். குல்ஃபி மிருதுவாகவும், கிரீமியாகவும் இருக்கும், அதன் அசலான மலாய் சுவை சிறந்த வகை, அதை இந்த உணவுத் தெருவின் மேல் மட்டத்தில் உள்ள மஹுவில் நாங்கள் அள்ளிச் சுவைத்தோம். அவர்கள் பாவ் பாஜிக்காகவும் நன்கு அறியப்பட்டவர்கள், தாராளமான வெண்ணெய்யுடன், சப்பானில் உங்களை உற்சாகப் படுத்துவார்கள்.

*டீம் அப்பர் க்ரஸ்ட் அனுமதியுடன் மறுஉருவாக்கம் செய்யப்பட்டது. www.uppercrustindia.com-ஐப் பார்வையிடவும்.*

# கோவாவின் பல்லுயிர் பெருக்க வரைபடம்

V முத்துகுமரன்

ஒரு காலத்தில் பசுமையான சோலைகள், கண்களுக்கு விருந்தளிக்கும் நீர் வீழ்ச்சிகள், நீலநிற பவளக் கடற் கரைகள் என காட்சியளித்த கோவா, இன்று கட்டுப்பாடற்ற சுற்றுலாவால், சுற்றுச்சூழலை பெருமளவில் பாதித்துள்ளது. எனவே, “பொது மக்களுக்கும் பார்வையாளர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பல்வேறு தாவரங்கள் மற்றும் உயிரினங்களை அழிவிலிருந்து காப்பாற்றவும் தேவை இருப்பதை உணர்ந்து தனித்துவமான திட்டத்தைச் செயல்படுத்த நினைத்தோம்” என்கிறார் பஞ்சிம் ரோட்ராக்ட் சங்கத்தின் (RID 3170) முன்னாள் தலைவர் ப்ரெட் செக்வெரா. கோவாவில் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், சுற்றுலாவை மேம் படுத்தி பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் ரோட்ராக்டர் ரோஹிடேஷ் சுடர் மனதில் உதித்ததுதான் “சுற்றுலாவை மீளுருவாக்கும்” (Regenerative Tourism) திட்டம். “கோவாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கடற்கரைப் பகுதிகளில் மதுபாட்டில்கள், சிகரெட் துண்டுகள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டெட்ரா பாக்கெட்டுகள் ஆகியவற்றை வீசி விட்டுச் செல்வதை நாம் பார்க்க முடிகிறது. இதனால் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிக்கப்படுக்கிறது. கடற்கரையைப் பாதுகாக்கும் முயற்சி கள் நடந்து கொண்டிருக்கும் அதே வேளையில், சுற்றலாப் பயணிகளின் பெருக்கத்தால் கோவாவின் உட்புற கிராமங்களில் ஏற்படும் பாதிப்பை நாம் அதிகம் கண்டுகொள்ளவில்லை. அதாவது காற்று மற்றும் மண்ணை பாதுகாக்க நாம் அதிகம் ஏதும் செய்யவில்லை” என்கிறார் அவர்.



கோவா சுற்றுலாத்துறை இயக்குநர் சுனீல் அஞ்சிபாகா மற்றும் அதன் துணைப் பொது மேலாளர் தீபக் நர்வேகர் ஆகியோரை ரோட்ராக்டர்கள் அடங்கிய குழுவினர் சந்தித்து, பனாஜியிலிருந்து 50 கி.மீ. கிழக்கே, மேற்கு தொடர்ச்சிமலைப் பகுதியில் அமைந்திருக்கும் தம்டி சுர்லா என்னும் இயற்கை எழில் கொஞ்சும் குக்கிராமத்தை மீட்டெடுக்க ஒரு திட்டத்தை முன்வைத்தனர். பல பழங்குடியின குக்கிராமங்கள் அமைந்துள்ள முகடுகளில் உள்ள அடர்ந்த காடுகளில் உள்ள தாவரங்களையும் ஆவணப் படுத்துவதே இதன் நோக்கமாகும். 13 ரோட்ராக்டர்கள், 6 புகைப்படக் கலைஞர்கள் மற்றும் வரைபட நிபுணர் என 20 பேர் கொண்ட மலையேறும் குழுவினர் கடினமான நீண்ட பயணத்தை மேற்கொண்டனர். “சுற்றுச்சூழலின் பரந்த பல்லுயிர் பெருக்கத்தை அப்போதுதான் அனுபவித்து உணர முடியும்” என்று நினைவுகூர்ந்தார் பிரெட் செகுரா. நாங்கள் செங்குத்தான மலைகளில் மலையேற்றம் செய்து, நீரோடைகளைக் கடந்து சென்றோம். மூன்று பழங்குடியின சமூகத்தினர் பெரும்பாலும் தங்கள் வாழ்க்கைக்கு இந்த காடுகளையே நம்பியிருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடர்ந்த காடுகளுக்கு நடுவே, மண்டோவி ஆற்றின் கரையில்,



RAC *பன்ஜிம் முன்னாள் தலைவர் ப்ரெட் செக்வேரா, ரோட்டராக்ட் உறுப்பினர்களுடன், மேற்குத் தொடர்ச்சி மலையில்.*

கண்டேபார் கிராமத்தில் உள்ள குகைக் கோயிலுடன் எங்களது களப் பணியை ஒருநாளில் முடித்துக் கொண்டோம். நாங்கள் பனாஜிக்குத் திரும்பியவுடன் உலக சுற்றுச் சூழல் தினமான ஜூன் மாதம் 5-ம் தேதி முதல் இன்ஸ்டாகிராம் மூலம் எங்களது சமூக வலைதளப் பிரசாரத்தை தொடங்கினோம். இதன் மூலம் 30,000-த்துக்கும் மேலான மக்களைச் சென்றடைந்தோம். பல்லுயிர் பாதுகாப்பு தொடர்பான எங்கள் களப் பணியை அவர்களிடம் விவரித்தோம். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான எங்கள் பணிகளை விளக்கி UNEP-க்கு கடிதம் எழுதினோம். இதற்காக ஐ.நா. அமைப்பு எங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கியது. தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த 100-க்கும் மேலான ரோட்ராக்டர்கள், RSAMDIO உடன் இணைந்து சங்கம் நடத்திய சமூக மதிப்பீடு மற்றும் திட்டமிடல் குறித்த பயிற்சி அமர்வில் கலந்து கொண்டனர். "ESRAG இயக்குநர்கள் மீனாட்சி வெங்கடராமன், கிறிஸ்டோபர் புட்டாக் மற்றும் துருக்கியைச் சேர்ந்த அதன் செயலாளர் டெனிஸ் வுரால் ஆகியோர் விடியோ கான்பரன்ஸ் மூலமான அரைநாள் ஜூம் கூட்டத்தில் பங்கேற்பாளர்களுடன் உரையாடினர். சமூக திட்டத்தை எப்படி அடையாளம் காண்பது? இலக்குகளை எப்படி நிர்ணயிப்பது? அவற்றை அடைவது எப்படி? என்று அவர்கள் எங்களுக்கு கற்பித்தார்கள்" என்றார் ப்ரெட் செக்வெரா.

**புதிய இன்டராக்ட் சங்கம்**

வெல்ஹாவில் உள்ள ஃபேரிலாண்டா உயர்நிலைப் பள்ளியில் சாதாரண குழந்தைகள் மற்றும் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகள் கலவையுடன் இன்டராக்ட் சங்கம் பட்டயப்படுத்தப்பட்டது. இது "இன்ஃபினிடி" சங்கம் (முடிவில்லாதது) என அழைக்கப்பட்டது. கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், தொழிலதிபர்கள் என அந்த சமூகத்தைச் சேர்ந்த 62 உறுப்பினர்களுடன் கோவாவில் உள்ள பழமையான மற்றும் மதிப்புமிக்க ரோட்ராக்ட் சங்கங்களில் பஞ்சிம் ரோட்ராக்ட் சங்கமும் ஒன்றாகும்.

ரோட்ராக்ட் சங்கத்தினர், "பர்ப்பிள் ஃபெஸ்ட்" அமைப்பைச் சேர்ந்த ஏற்பாட்டாளர்களுடன் இணைந்து வருடத்தில் ஆறு நாட்கள் கோவாவில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்காக நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றனர். இந்த ஆண்டு பார்வையற்றவர்களுக்கான கார் பேரணிக்கு நாங்கள் உதவினோம். அப்போது பார்வையற்ற பங்கேற்பாளர், ஓட்டுனருக்கு பிரெய்ல் முறையில் வழிகாட்டி உதவினார்.

சங்கம் விரைவில் ஒரு புதிய சாட்டிலைட் ரோட்டரி சங்கத்தை பட்டயப்படுத்த உள்ளது. "அங்கு எங்கள் மூத்த ரோட்ராக்டர்களும் மற்றவர்களும் கூட்டுறவுடன் சமூக சேவையில் தங்கள் பயணத்தைத் தொடர்வார்கள்" என்றார் அவர். ■



இடது: *காட்டுப் பயணத்தின் போது அரிய தாவரங்களைப் ஆராய்ச்சி செய்யும் ரோட்டராக்டர்கள்.*

வலது: *ரோட்டராக்டர்கள் காண்டேபர் குகைக் கோவிலில்.*

Rotary PEOPLE OF ACTION

# பெடல் பவர்

**கிரண் ஜெஹரா**

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை, மும்பைக்கு அருகிலுள்ள சோகே கிராமத்தில் உள்ள ஜில்லா பரிஷத் பள்ளியைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் – வேதாந்த் மற்றும் மயங்க் தேசாலே, மற்றும் சின்மய் ரத்னாகர் – காலியான விளையாட்டு மைதானம் மற்றும் அமைதியான வகுப்பறைகளை கடந்து சைக்கிள் பாகங்கள் நிரப்பப்பட்ட ஒரு அறைக்கு சென்றனர். அங்கே 60 புதிய சைக்கிள்களை இணைக்க சுலேமான் மற்றும் அனிஸ் என்ற இரண்டு தொழிலாளர்களுடன் சேர்ந்து கொண்டனர். இயந்திரவியலில் ஆர்வம் கொண்ட மூவரும் விரைவாக வேலையைக் கற்றுக்கொண்டனர். “நாங்கள் இதைச் செய்தோம் என்று எங்களால் நம்ப முடியவில்லை! இந்த சைக்கிள்கள் எங்கள் நண்பர்களுக்காக தயாராக இருக்கின்றன, என்கிறார் வேதாந்த்.

ஏப்ரல் 2024-ல், RC தானே ஹில்ஸ், RID 3141-ன் உறுப்பினர்கள், மாணவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்ள இந்தப் பள்ளிக்குச் சென்றனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்வதால், தொடர்ந்து வருவது கடினமாகிறது என்பதை அவர்கள் அறிந்தனர். “தங்களுக்கு எது அதிகம் தேவை என்று கேட்டபோது, மாணவர்கள் ஒருமனதாக சைக்கிள்களைக் கோரினர்” என்று சங்கத் தலைவர்

*ஒரு மாணவன் RC தானே ஹில்ஸ் பரிசளித்த சைக்கிளுடன்.*





*மாணவர்கள் வேதாந்த், மயங்க் தசாலே, சின்மய் ரத்னாகர் ஆகியோர் சைக்கிள்களை அசெம்பிள் செய்கிறார்கள்.*

கோவிந்த் கெத்தன் நினைவு கூர்ந்தார். சங்கம் இந்த கிராமத்தை தத்தெடுத்து, கழிப்பறைகளை கட்டி, மருத்துவ முகாம்களை நடத்தி, சமீபத்தில் அங்குள்ள தொடக்கப்பள்ளி மற்றும் அங்கன்வாடியை புதுப்பித்துள்ளது.

ஆரம்பத்தில், சங்கம் பழைய சைக்கிள்களை பழுதுபார்ப்பதைக் கருத்தில் கொண்டது, ஆனால் விரைவில் அதில் உள்ள சவால்களை உணர்ந்தது. “அதற்கு பதிலாக, நாங்கள் நிதி திரட்டி புதியவற்றை வாங்க முடிவு செய்தோம். உடான் திட்டத்தின் கீழ், 2.5 லட்சம் ரூபாய் வசூலித்து, சைக்கிள்களின் பாகங்கள் லூதியானாவில் இருந்து வாங்கினோம், ஆனால் அவை விநியோகிக்கப்படுவதற்கு முன்பு இணைக்கப்பட வேண்டியிருந்தது” என்கிறார் கேதன்.

சைக்கிள்களை இணைக்கும் பணி சுலேமானுக்கும் அனிஸுக்கும் கொடுக்கப்பட்டது. ‘‘மூன்று மாணவர்களும் ஆர்வத்துடன் தொழிலாளர்களுடன் சேர்ந்து, சைக்கிள்களை இணைக்க உதவினார்கள். அவர்களின் ஈடுபாடு செயல்முறையை விரைவுபடுத்தியது மட்டுமல்லாமல், அவர்கள் மிகவும் விரும்பியதைச் செய்வதில் அவர்களுக்கு அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தது’’ என்கிறார் கேதன். மாத இறுதியில், 57 மாணவர்கள் தங்கள் புதிய சைக்கிள்களைப் பெற்றனர்.

### கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான போராட்டம்

ப்ராஜெக்ட் எம்பவர்- பிகாஸ் ஷி மேட்டர்ஸ், சங்க செயலர் டாக்டர் அனகா கர்கானிஸ் மற்றும் சங்கத் தலைவர் கேதன் ஆகியோரால் கருத்துருவாக்கம் செய்யப்பட்ட திட்டம், 9–14 வயதுடைய பெண்களுக்கு HPV தடுப்பூசி செலுத்துவதன் மூலம் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 15 வயதிற்குள்ளான 90 சதவீத சிறுமிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என்ற WHO-ன் இலக்குடன் இணக்கமாக இருந்தது. “இந்தத் திட்டம் இளம் பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான அறிவு மற்றும் கருவிகளை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது” என்கிறார் அனகா.

ஆதித்ய பிர்லா குழுமத்திடம் இருந்து ரூ.1.7 கோடி பெறுவதற்கு PRID அசோக்மகாஜன் உதவினார். HPV தடுப்பூசியை வாங்கவும், விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தவும், தடுப்பூசி முகாம்களை நடத்தவும், மருத்துவ பரிசோதனை செய்யவும் இந்த நிதி பயன்படுத்தப்பட்டது.

5,800 சிறுமிகளுக்கு பெற்றோர் சம்மதத்துடன் தடுப்பூசி போடப்பட்டது. பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, அடுத்து தடுப்பூசி செலுத்தப்பட வேண்டிய தேதிகள் பதிவு செய்யப்பட்டன. ■




*சங்க செயலாளர் டாக்டர் அனகா கர்கானிஸ், PRID அசோக் மகாஜன் மற்றும் சங்கத் தலைவர் கோவிந்த் கேத்தான் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி முகாமில்.*

# சங்கச் செய்திகள்


RID 3020


RID 2981


RID 3000


RID 3012


RID 3011

**RC நாகப்பட்டினம் — RID 2981**

தொழில் சார்ந்த மையம் ஒன்று புதுப்பிக்கப்பட்டது (ரூ.6 லட்சம்), PDG N கோவிந்தராஜ், அப்போதைய DGE S பாஸ்கரன் முன்னிலையில் தொடங்கப்பட்டது.

**RC திருச்சி டயமன்ட் சிட்டி குவீன்ஸ் — RID 3000**

திருச்சி தேசியக் கல்லூரியில் DGN R சுப்ரமணி சொற்பொழிவுடன் 365 நாள் மரத்திருவிழாத் திட்டம் நடைபெற்றது. ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்கள், மாணவர்கள் மரக் கன்றுகளை நட்டனர்.

**RC தில்லி சஃப்தார்ஜங் — RID 3011**

தேசியத் தலைநகரப் பகுதித் தெரு வணிகர்களைக் கோடை வெய்யிலில் இருந்து காக்க, குடைகள் கொடையளிக்கப்பட்டன.

**RC தில்லி மயூர் விகார் — RID 3012**

பட்டயக் கணக்காளர் நாளின் 75-வது ஆண்டைக் குறிக்கும் வகையில் வட இந்தியப் பகுதி ICAI அவையில் நடந்த ரத்த தான முகாமில் 55-க்கும் மேற்பட்ட அலகு ரத்தம் திரட்டப்பட்டது.

**RC விசாகப்பட்டினம் — RID 3020**

சங்கத் தலைவர் வினய் காந்தியின் நிறுவலின் போது, அரசுப்பள்ளிகளின் தகுதியுள்ள மாணவர்களுக்கு K S குப்தா நினைவு அறக்கட்டளை ஆதரவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

# சங்கச் செய்திகள்
















### RC ஜெய்ப்பூர் குருகுல் — RID 3056

கோடையில் தெரு விலங்குகள், செல்ல விலங்குகளுக்கு நீர் வழங்க, சங்கனெர் பகுதிக் குடும்பங்களுக்கு நீர்க் கிண்ணங்கள், குறு சேமிப்புத் தொட்டிகள் கொடையளிக்கப்பட்டன.

### RC சூரத் டாபி — RID 3060

மீனாபென் உபாத்யாய் ஆதரவில் 10 இயந்திரங்களுடனான தையல் மையம் லாஜ்போர் முஸ்லீம் நல அறக்கட்டளை, UK ஆதரவுடன் தொடங்கிவைக்கப்பட்டது.

### RC பட்டியாலா மிட் டவுன் — RID 3090

ரோட்டரி பவனில் பயிற்சியை முடித்த 17 பெண்களுக்கு, ராஜீவ் கோயல் ஆதரவில் தையல் இயந்திரங்கள் (ரூ.55,000) வழங்கப்பட்டன.

### RC மொராடாபாத் பிரைட் — RID 3100

DG தீபா கன்னாவைத் தலைமை விருந்தினராகக் கொண்டு, தாஸ்வா காட்டில் நடைபெற்ற மருத்துவ முகாமில் நோயாளிகள் பரிசோதிக்கப் பட்டார்கள். பெண்களுக்குச் சானிட்டரி பேட்கள் வழங்கப்பட்டன.

### RC குஷிநகர் — RID 3120

சினெர்ஜி சிறப்பு மருத்துவமனை மற்றும் புற்றுநோய்ப் பராமரிப்பு மருத்துவமனையுடன் இணைந்து காசியா நிரான்கரி இடைநிலைக் கல்லூரியில் நடைபெற்ற நல முகாமில் சுமார் 600 நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள்.




# எழுத்தாளர்கள் அரசியலற்றவர்களாக இருக்க முடியுமா?

சந்தியா ராவ்

உலகெங்கிலும் தேர்தல்களின் சீசனாக இருக்கிறது - சுவாரசியமான முடிவுகளுடன் - எடுத்துக்காட்டாக, இந்தியா, யுகே, பிரான்ஸ் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் - அமெரிக்காவில் தேர்தல் சீசன் வரவிருக்கிறது. பிரபா ஸ்ரீதேவன் மொழிபெயர்த்த தமிழாசிரியர் இமயத்தின் புத்தகத்தை படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது இதற்கு ஏற்றவாறு தற்செயலாக இருந்தது. பிரபா ஸ்ரீதேவன் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியாக இருந்தவர். இமயம் சமூக-அரசியல் சூழலால் ஈர்க்கப்பட்ட கூர்மையான எழுத்துக்கு பெயர் பெற்றவர். உண்மையில், இலக்கிய நூல்கள் அவற்றின் அரசியல் யதார்த்தத் திலிருந்து தப்பிக்க முடியாது என அவர் கூறுகிறார், மேலும் இந்த முன்னுரை, ஒரு நாவல் மற்றும் இரண்டு சிறுகதைகளின் தொகுப்பான “வாழ்க வாழ்க இல் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வாழ்க, வாழ்க என்ற தலைப்பே ஒரு அரசியல் சூழ்நிலையை சுட்டிக் காட்டுகிறது, அதை பற்றியது தான் அந்த சிறு நாவல். தன் கட்சித்தலைவர் உரையாற்றும் அரசியல் பேரணிக்கு கூட்டத்தை சேர்க்கும் பொறுப்பு வெங்கடேச பெருமாள் என்ற கட்சி ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ளது, இதற்கான சுவரொட்டிகள் எங்கும் ஒட்டப்பட்டுள்ளன. பெருமாளிடம் ஒருவர், உங்கள் தலைவரை “காஞ்சி காமாக்ஷி, மதுரை மீனாட்சி, சமயபுரம் மாரியம்மன், வேளாங்கண்ணி மாதா, தமிழ்த் தாய் ஆகியவர்களாக சித்தரித்து கட்-அவுட்கள், போஸ்டர்கள் ஒட்டுகிறீர்கள். இது மிகை அல்லவா?’ என்று கேட் கிறார். நாவலில் இடம்பெறும் இந்த “மிகையான” அரசியலே, இந்த விஷயத்தில், திராவிட அரசியல், அதன் குறிப்புகளையோ அல்லது அதன் நோக்கத்தையோ மறைக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. இது, வாசகரை ஏறக்குறைய நிகழ் நேரத்தில் அழைத்துச் செல்லும் ஒரு விவரிப்புடன், கதைக்கு ஒரு தனித்து வமான தமிழ் சுவையை அளிக்கிறது, “உங்கள் தலைவி, தன் கட்சியில் உள்ள அனைவரையும் நாயை விட மோசமாக நடத்துகிறாள். அந்தக் கட்சியில் எப்படி இருக்க முடிகிறது?” என்று ஒருவர் கேட்கிறார். தன்னை வேண்டுமென்றே தூண்டிவிடுகிறார்கள் என்பது பெருமாளுக்குத் தெரியும், அதனால், “அப்படி நடத் தினாலும், எம்.எல்.ஏ., எம்.பி., மந்திரி பதவிகளை கொடுக்கிறார்” என்று பதிலளிக்கிறார்.




ஒரு தலைவன் எவ்வளவு பிரபலமாக இருந்தாலும், அரசியல் பேரணிகளில், குறிப்பாக தேர்தல்களின் போது, பெரும்பாலான மக்கள், லஞ்சம் மற்றும் ஊழல் மூலம், பலவந்தமாக பேரணி நடைபெறும் இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பது பகிரங்கமான ரகசியம். அதாவது, ஒரு சில ரூபாய்க்காக, அதனுடன் மதிய உணவு பொட்டலம் மற்றும் ஒரு பாட்டில் தண்ணீரும் சேர்த்து கொள்ளுங்கள். “வாழ்க வாழ்க” ஒரு அரசியல் பேரணியின் கதையை, வெப்பத்திலும், மழையிலும், தலைவரின் வருகைக்காகக் காத்திருக்கும் பொறுமையான தொண்டர்களின் பார்வையில் காட்டுகிறார், அந்த தலைவர்கள் பெரும்பாலும் அவர்களின் தலைவர்கள் கூட அல்ல. காட்சிகளை விறுவிறுப்பாக விவரிக்கிறார் இமயம். உதாரணமாக, அங்குள்ள ஒவ்வொரு பெண்ணும், விதிவிலக்கு இல்லாமல், தொப்பி அல்லது புடவையால் தன்னை விசிறிக் கொண்டிருந்தனர். கூட்டத்தில் இருந்ததால் அவர்கள் அனைவரும் வெப்பத்தை அதிகமாக உணர்ந்தனர், ஆனால் அவர்கள் கூட்டத்திலிருந்து எங்கும் செல்லவோ அல்லது நிழலுக்காக ஒதுங்கவோ முடியவில்லை. கூட்டத்திற்கு இடமளிக்க, 400–500 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அனைத்து மரங்களும் வெட்டப்பட்டன.



கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மரமோ செடியோ கொடியோ இல்லை. கட்சிக் கொடிகள், பூங்கொத்துகள், கட்-அவுட்கள் மற்றும் டிஜிட்டல் பேனர்கள் மட்டுமே பார்க்க முடிந்தது.'

சூரியன் அவர்களை சுட்டெரிக்கிறது, ஒரு கதையை நகர்வதில்லை என்றே தோன்றச் செய்து, ஆனால் அது இடைவிடாது முன்னோக்கி அழைத்துச் செல்வது, இமயத்தின் கதை சொல்லல் திறனைப் புகழ்ந்துரைக்கிறது.

இத்தொகுப்பில் உள்ள இரண்டு சிறுகதைகளும் நாவலில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை. "திருநீறு சாமி" வட இந்தியாவைச் சேர்ந்த ஒரு பெண்ணையும் அவர் திருமணம் செய்துகொண்ட தென்னிந்தியாவை சேர்ந்த ஒருவரையும் மோதவிடுகிறது, இது பார்ப்பதற்கு வழக்கமானதாக தோன்றும். ஆனால் அப்படியில்லை. மீண்டும், எழுத்தாளரின் வாழ்க்கை மற்றும் உறவை உன்னிப்பாகக் கவனிக்கும் திறன் கதையை அப்பட்டமாக இருப்பதிலிருந்து விலக்கி, அதை எதிரொலிக்கும் வகையில் மாற்றுகிறது. இது உள்ளூர்-உலகளாவிய யதார்த்தத்தை தனிப்பட்ட மட்டத்தில் எடுத்து க்காட்டுகிறது, அதே நேரத்தில் உலகளாவிய உண்மைகளையும் முன்வைக்கிறது. கதை பாணியும் நாவலில் இருந்து நுட்பமாக வேறுபடுகிறது, இதில் சொல்லுதல் மிகவும் மென்மையாகவும், கிட்டத்தட்ட தடையற்றதாகவும் இருக்கிறது. தம்பதிகள் எதைப் பற்றி மோதிக்கொள்கிறார்கள்? இவர்களது இரண்டு சிறு குழந்தைகளின் மொட்டையடிக்கும் விழாவை எங்கே செய்வது என்பதற்காக. தமிழ்நாட்டில் உள்ள ஒரு துறவியான திருநீறு சாமிக்கு அர்ப்பணிக்கப்பட்ட தனது குடும்பத்தின் வழிபாட்டுத் தலத்தில் அதைச் செய்ய அண்ணாமலை விரும்புகிறார். இதற்கு மனைவி வர்ஷா கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்.


எழுத்தாளர் இமயம்

கதையின் ஒரு கட்டத்தில், வர்ஷாவின் சகோதரர் அலோக் அண்ணாமலை சொல்வதைக் கேட்க உட்கார்ந்து, படிப்படியாக அவரை நம்புகிறார். "அண்ணாமலை நம்மிடம் பொய் சொல்ல மாட்டார் என்று நான் நம்புகிறேன்" என்கிறார் அலோக். அதற்கு வர்ஷா, "அவர் பொய் சொல்லமாட்டார், ஆனால் நம்மிடம் கதை சொல்வார்." பொய் அல்ல கதைகள்! அந்த வாக்கியம் வயற்றில் ஒரு குத்து போல் இறங்குகிறது. நாம் அனைவரும் கதைகளைப் பற்றியவர்கள், நம் வாழ்க்கையே கதைகள் தான்.

மற்ற கதை முற்றிலும் வேறு பட்டது. இது ஒரு புராணக் கதை, "சாம்பன், கிருஷ்ணனின் மகன் ---ஒரு சொல்லப்படாத கதை". இமயத்தின் புத்தகத்தை படிக்கும் முன் இந்தக் கதையை நான் அறிந்திருக்கவில்லை, அதன் கண்ணோட்டத்தை பற்றி கருத்து சொல்ல என்னால் முடியாது. இமயத்தின் பதிப்பு, ஜாம்பவதி மற்றும் கிருஷ்ணரின் மகனான சாம்பனைப் பற்றி பேசுகிறது, தன்னிடம் அவமரியாதையாக நடந்து கொண்டதற்காக துர்வாச முனிவரால் சபிக்கப்படுகிறான் சாம்பன். ஒரு இளவரசனின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை இழக்கிறான் மற்றும் அரண்மனையை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப் படுகிறான். இறுதியில் தொழு நோயால் பாதிக்கப்படுகிறான். சூரியனை வழிபடுவதன் மூலம் குணமடைந்து, மற்றவர்களை குணப்படுத்த உதவுகிறான். தனது சாபத்தை எவ்வாறு எதிர்கொள்கிறான் என்பதை இமயம் விவரிக்கிறார். எழுத்தாளர்கள் ஒருபோதும் அரசியலற்றவர்களாக இருக்க முடியாது என்ற இமயத்தின் நம்பிக்கைக்கு ஏற்ப, சமூக-அரசியல் செய்திகளால் கதை நிரம்பியுள்ளது.

மேலும் இந்தியச் சூழலில், அரசியல் முதலில் வந்தால், மதம் பின்தங்கியிருக்க முடியுமா? சிறுகதைகள், அதன் சொந்த வழியில் சடங்கு, நம்பிக்கை மற்றும் நம் மனதில் இருக்கும் மதத்திற்கும் அறிவியலுக்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துகின்றன. இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா? அல்லது உள்ளார்ந்து உணரப்பட்டதா? அதை வாசகர் தான் முடிவு செய்ய வேண்டும்.

"வாழ்க வாழ்க"வின் மொழிப் பெயர்ப்பைப் பற்றிய ஒரு வார்த்தை கூறுவது இங்கே பொருத்தமானதாக இருக்கும்: சிறுகதைகள் நன்றாக இருக்கும் அதே வேளையில், சிறு நாவல் சில இடங்களில் நேரடியான மொழிப்பெயர்ப்பாகவும், சில நேரங்களில் கட்டாயப்படுத்தப் பட்டதாகவும் தெரிகிறது. ஆனால் மொத்தத்தில், பாசாங்குகள் இல்லாமல் தமிழ் உலகை சித்தரிக் கிறது. அதுவே ஒரு சாதனை தான். "ஹிந்தி" உலகக் கண்ணோட்டத்துடன் ஈடுபடுவதற்கான மேடை தற்போது அமைக்கப்பட்டுள்ளது.



கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ரோட்டரி ஆளுநர்





**தீபா கன்னா**

கல்வி

RC மொராதாபாத் பிரைட், RID 3100

## ரோட்டரி பன்முகத்தன்மையில் கவனம்

தீபா கன்னாவின் ரோட்டரி பயணம், மொராதாபாதில் தேசிய இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து நாட்களில் (NIDகள்) உதவும் ஒரு ரோட்டரியரின் மனைவியாக தொடங்கியது. தங்கள் குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து கொடுக்கவேண்டும் என்று தாய்மார்களுக்குப் புரியவைக்கிற பணியில் இவர் தன் கணவருடன் இணைந்துகொண்டார்.

தன் கணவர் அனில் கன்னாவால் ஊக்கம் பெற்ற தீபா ரோட்டரியில் இணைந்தார். DG-ஆக இவர் அறக்கட்டளைக்கு $1.5 மில்லியன் வழங்க இலக்கு அமைத்துள்ளார், “கொடையளிக்காத உறுப்பினர்களை ஒவ்வொரு கூட்டத்துக்கும் $1-ஆவது வழங்கும்படி ஊக்குவிக்க” ஒவ்வொரு சங்கத்திலும் கதிரொளிப் பெட்டியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

ரோட்டரி ஆண்டின் நிறைவில் உறுப்பினர்கள் விலகிச் செல்லும் சிக்கலைக் கையாள்வதற்கென, கூட்டங்களை மேலும் ஊடாடும்வகையில் அமைக்கும்படியும், உறுப்பினர்களுடைய ஆர்வங்களைப் புரிந்து கொள்ளும்படியும் சங்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தீபா ரோட்டரியின் பன்முகத்தன்மை, சமநிலை மற்றும் உள்ளடக்கல் (DEI) கொள்கையுடன் இணங்குவதில் கவனம் செலுத்துகிறார், சங்க உறுப்பினர்களிடையில் பன்முகத்தன்மையைக் கொண்டுவருவது, மேலும் பெண் உறுப்பினர்களைச் சேர்ப்பது, LGBTQIA பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதில் அக்கறை காட்டுகிறார்.

**அகில் மிஷ்ரா**

கல்வி

RC ஜபல்பூர் சவுத், RID 3261

## உறுப்பினர்களை தக்கவைக்கத் திட்டம்

அகில் மிஷ்ராவின் ரோட்டரி பயணம் 2016ல் தொடங்கியது. கோவிட் முடக்கத்தின் போது, “நான் ரோட்டரியின் உண்மையான ஆற்றலைப் பார்த்தேன். நாங்கள் வெறுமனே உணவு, பிற தேவையான பொருட்களைமட்டும் கொடையளிக்கவில்லை. அதைத் தாண்டி, மக்களின் துன்பத்தைக் குறைத்தோம்” என்கிறார் இவர்.

இவர் நிறுவப்பட்ட நாளன்று, பார்வைக் குறைபாடுடையோர் பள்ளி ஒன்றுக்கு ரூ.21 லட்சம் மதிப்புள்ள பேருந்தைக் கொடையளித்தது இவருடைய மாவட்டம். குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சைகளை நடத்தும் திட்டம் ஒன்றும் தொடங்கப்படவுள்ளது.

மிஷ்ரா உறுப்பினர் ஊடாடல், அவர்களைத் தக்கவைத்தலில் கவனம் செலுத்துகிறார். புதிய உறுப்பினர்களை மூத்த ரோட்டரியன்களுடன் இணைத்து, அவர்கள் ரோட்டரியை இன்னும் நன்கு புரிந்துகொள்ள உதவும் வழிகாட்டித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்து கிறார் இவர். தன் மாவட்டத்தில் ரோட்டரியிலிருந்து விலகியவர்களை மீண்டும் தொடர்புகொள்ளவும் இவர் திட்டமிட்டுள்ளார். “அவர்கள் ஏன் விலகினார்கள் என்று அறிந்துகொள்ளவும், அவர்களை மீண்டும் ரோட்டரிக்கு வரவேற்கவும் நான் விரும்புகிறேன்.”

# களுடன் சந்திப்பு

கிரண் ஜெஹரா





**சுக்மிந்தர் சிங்**
கார் துணைக்கருவிகள் விநியோகஸ்தர்
RC அமெனிடி பர்தாமன், RID 3240

## பொதுத் தோற்றத்தில் கவனம்

இவர் 1998ல் ஒரு நிபந்தனையுடன் ரோட்டரியில் சேர்ந்தார்: என்னை எப்போதும் மேடை ஏறிப் பேசச் சொல்லக்கூடாது. "ஆனால், மேடைப் பேச்சில் எனக்கு இருந்த அச்சம் விரைவில் விலகிவிட்டது. ரோட்டரிக்கு நன்றி!."

இந்த ஆண்டு 250 புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளார் சுக்மிந்தர். "குறிப்பாக, இளைஞர்கள், ரோட்டராக்டர்கள், இன்டராக்டர்கள், பெண்களை உறுப்பினர் களாக்குவதில் நாங்கள் கவனம் செலுத்துவோம். எங்கள் மாவட்டத்தில் பெண் ரோட்டரியன்களுடைய பங்களிப்பும் அவர்களுடைய புதுமையான யோசனைகளும் மிகச் சிறப்பாகக் கை கொடுத்துள்ளன." உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கு இந்த மாவட்டம் நோக்குநிலைத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது, சேவைத் திட்டங்களை உறுப்பினர்களின் திறன்களுடன் பொருத்துகிறது, ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துவதற்கென மாவட்டத் திட்டங்களைச் சமூக ஊடகங்களில் முன்னிறுத்துகிறது. இப்போது, சங்கங்கள் ரோட்டரியைச் செயல்திறனுடன் முன்னிறுத்துவதற்கான மூன்றாண்டு வியூகத் திட்டம் ஒன்றைக் கண்டிப்பாக உருவாக்கவேண்டும்.

இவருடைய TRF வழங்கும் இலக்கு, $700,000. IPDG நிலேஷ் அகர்வாலின் முன்னெடுப்புகளை அடித்தளமாகக் கொண்டு செயல்படும் சுக்மிந்தர் சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய CSR திட்டங்களை நிறைவேற்றுதல், மருத்துவமனைகளுக்கு இயந்திரங்களை வழங்குதல், ஒரு சுடுகாடு அமைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தவுள்ளார்.

**N S சரவணன்**
மென்பொருள் துறை
RC சென்னை மித்ரா, RID 3234

## புற்றுநோய் பரிசோதனை முயற்சிகளில் கவனம்

"தகவலறிந்த ஆட்சேர்ப்பை", அதாவது, சாத்தியமுள்ள உறுப்பினர்கள் ரோட்டரியில் இணைவதற்குமுன்பாக, அவர்களை ரோட்டரியைப்பற்றித் தெரிந்துகொள்ளும்படி, குறைந்தது மூன்று சங்கக் கூட்டங்களில் கலந்துகொள்ளும்படி, தங்கள் துணைவர்களை இதில் ஈடுபடுத்தும்படி, சங்கத் திட்டங்களில் பங்கேற்கும்படி அறிவுறுத்துதலை இவர் வலியுறுத்துகிறார்.

சங்கத் தலைவர்கள் புதிய உறுப்பினர்களுக்கு ரோட்டரியின் பன்னாட்டுத் தாக்கத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும், தோழமைக் குழுக்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார் இவர். இந்த மாவட்டத்தின் தலைவர்களில் 30% பெண்கள் என்பதால், அவர்களுடைய நலன் மற்றும் அவர்களுக்கு ஆற்றல் அளிப்பதில் இவர் கவனம் செலுத்துகிறார். இதற்கென, பெண் ரோட்டரியன்கள், ஆன்கள், ஆன்னெட்கள், ரோட்டராக்டர்களுக்கான மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை முயற்சிகள் தொடங்கப் பட்டுள்ளன. திருநபர்களுக்கான ரோட்டரி சமூகப் படை ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.

ரோட்டரியினரை நாள்தோறும் ரூ 30 கொடை யளிக்கும்படி ஊக்குவிக்கிறார், "இதன் மூலம், ஆண்டின் முடிவில் அவர்கள் ஒவ்வொருவரும் TRF-க்குக் குறைந்தது $100 கொடையளிக்கலாம்." என்கிறார்.



*ரோட்டரி மெடிக்கல் மிஷன் குழுவினர், திட்டத் தலைவர் ரஞ்சித் பாட்டியா, குழுத் தலைவர் அருண் மோங்கியா மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராமன் அனேஜாவுடன்.*

# மொசாம்பிக்கில் இந்திய ரோட்டரியின் மருத்துவ சேவை

V முத்துகுமரன்



*பார்கின்சன் நோய் சிகிச்சைக்குப் பிறகு பெர்னாண்டா.*

ஆப்பிரிக்காவில், ரோட்டரியின் மருத்துவக் குழு சேவைகளில் அற்புதங்கள் நிகழ்கின்றன. “கடந்த 10 ஆண்டுகளாக நடுக்குவாதத்தால் பாதிக்கப்பட்டு, நாற்காலியை விட்டு எழுந்திருக்கவோ அல்லது ஆதரவின்றி நடக்கவோ முடியாத நிலையில் இருந்த 59 வயதான பெர்னாண்டா, முழுமையாக குணமடைந்தது அற்புதமான நிகழ்வாகும். பார்கின்சன் நோயின் காரணமாக அந்த பெண்மணி கடந்த ஐந்து வருடங்களில் எல்லாவற்றுக்கும் மற்றவர்களையே சார்ந்திருக்க வேண்டியிருந்தது” என்று ஆப்பிரிக்காவின், மொசாம்பிக் நாட்டிற்கான மருத்துவக்குழு திட்டத்தின் தலைவர் PDG ரஞ்சித் பாட்டியா கூறினார்.

பெர்னாண்டா மொசம்பிக்கில் உள்ள சிமோயோ மாகாண அரசு மருத்துவமனையின் நரம்பியல் பிரிவின் புறநோயாளிகள் பிரிவுக்கு அழைத்து வரப்பட்டார். அங்குதான் 26 உறுப்பினர்கள் கொண்ட ரோட்டரி மருத்துவத் தொழில் பயிற்சிக்குழு 2024 ஏப்ரல் மாதம் 11 நாட்களுக்கு மேலாக முகாமிட்டிருந்தது. நெருக்கடியான அறுவைச் சிகிச்சைகளின்போது உள்ளூர் மருத்துவர்களுக்கு பயிற்சி அளித்து வந்தது.

18 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 8 ரோட்டேரியின் தன்னார்வலர்கள் கொண்ட ரோட்டரி குழு, ஹரியாணாவிலிருந்து 1,000 கிலோ அறுவைச்சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருந்து மாத்திரைகளுடன் ஏப்ரல் 14-ம் தேதி மொசாம்பிக் புறப்பட்டுச் சென்று ஏப். 28-ம் தேதி திரும்பியது. “நாங்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்ததுடன் மட்டுமல்லாமல், சில சிக்கலான அறுவைச்சிகிச்சைகளில் அங்குள்ள மருத்துவர்களுக்கு பயிற்சி

அளித்தோம்'' என்று குழுவின் தலைவர் IPDG அருண் மோங்கியா (RID 3080) கூறினார்.

பானிபட் ரோட்டரி சங்கம் (RID 3080) தலைமையில் மருத்துவக் குழுவுக்கு 90,000 டாலர் சர்வதேச மானிய உதவி கிடைத்தது. சிமாயோ பிளானல்டோ ரோட்டரி சங்கம் (RID 9210) ஆதரவு அளித்தது. மேலும் RID 3080 இந்தியா, பிளோரிடா, அமெரிக்கா RID 3552, தென்கொரியா 3650 மற்றும் மொசாம்பிக் - 9210 மாவட்ட நிதியிலிருந்து உதவி வழங்கினர். ரோட்டேரியன் மருத்துவர்கள் 3,700 புறநோயாளிகளை பரிசோதித்தனர். மேலும் கண், பொது, பிளாஸ்டிக் மற்றும் எலும்பியல், மகப்பேரியல், காது மூக்கு தொண்டை மற்றும் பல்மருத்துவம் தொடர்பாக 827 அறுவைச்சிகிச்சைகள் செய்தனர்.

இதுவரை RID 3080 சார்பில் 44 மருத்துவக் குழுக்கள் 44 பணிகளை மேற் கொண்டுள்ளன. இவற்றில் 27 மருத்துவ முகாம்கள் 16 ஆப்பிரிக்க நாடுகளிலும் 17 இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் நடத்தப்பட்டுள்ளன. RVTTM திட்டத்துக்கான கருத்தாக்கத்தின் மூலகாரணம் PRIP ராஜேந்திர சாபூதான். அவர் தான் 1998-ல் முதல் மருத்துவக் குழுவின் செயல்பாட்டை கொடியசைத்து தொடங்கி வைத்தார் என்று விளக்கினார் மோங்கியா. வரும் ஆகஸ்ட் மாதம் எத்தியோப்பியா செல்லும் மருத்துவக் குழுவுக்கு DG ராஜ்பால் சிங் தலைமை வகிக்கிறார். RID-க்கள் 3141, 3131 (மகாராஷ்டிரம்), 3056, 3060 (குஜராத்) மற்றும் 3070 (பஞ்சாப்) ஆகியவற்றைச் சேர்ந்த ரோட்டேரியன் டாக்டர்கள் இந்த மருத்துவக் குழுவில் ஒரு பகுதியாக இருந்தனர். மொசாம்பிக் நாட்டின் இந்திய ஹைகமிஷனர் ராபர்ட் ஷெட்கின்டோங், தலைநகர் மபுடாவிலிருந்து பறந்து வந்து ரோட்டரி குழுவினருடன் கலந்து ஆலோசனை நடத்தினார்.■

# HIV பாசிட்டிவ் குழந்தைகளுக்குப் பேக்கிங் பயிற்சி

ரோட்டரி செய்திக்குழு




*அருணிமா மருத்துவமனையில் குழந்தைகளுடன் சங்க உறுப்பினர்கள்.*

HIV பாதிப்பு கொண்ட குழந்தை களுடைய கண்ணியத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் அருணிமா ஹாஸ்பைஸில் அவர்களுக்கென்று ஒரு பேக்கிங் (அடுதல் கலை) பயிலகத்தை நடத்தியது RC கல்கத்தா பிரசி டென்சி, RID 3291. இங்கு அவர்கள் பல சுவைகளில் குக்கீஸ் தயாரிப்பது, பேக்கரிப் பொருட்களை விற்பதில் பயிற்சி பெற்றார்கள். இது அவர்களுக்குத் தொடர்ந்த வருவாயைப் பெற்றுத்தரும்.

இந்தச் சங்கம் இந்த ஹாஸ்பைஸுக்கு இரண்டு ஓவன்கள், ஒரு மிக்சர், பயிலகத்துக்குத் தேவையான மற்ற அடிப்படைப் பேக்கிங் கருவிகளை வழங்கியது. விரைவில், “குழந்தைகள் பேக்கிங் திறன்களை நன்கு கற்றுக்கொண்டார்கள், தாங்களே குக்கீக்களைத் தயாரித்தார்கள். தேவாலய நேரத்தில் ஒரு காட்சி மேசையில் இவை விற்கப்பட்டன. அனைத்துக் குக்கீக்களும் விற்றுத் தீர்ந்துவிட்டன'' என்கிறார் சங்கத் தலைவர் சங்கீதா ஜெயின்.

குழந்தைகளுடைய முகங்களில் தெரிந்த மகிழ்ச்சி யையும் பெருமையையும், தாங்கள் புதிதாகக் கற்றுக்கொண்ட திறன்களின்மூலம் அவர்கள் பணம் சம்பாதிப்பதையும் பார்த்தபிறகு, “இந்த ஹாஸ்பைஸில் இன்னும் பல பயிலகங்களை நடத்த வேண்டும், அதன்மூலம், இங்கு உள்ளவர்களுடைய வாழ்க்கையில் சிரிப்பையும் கண்ணியத்தையும் கொண்டுவருவதற்குத் தொடர்ந்து உழைக்கவேண்டும் என்று நாங்கள் ஊக்கம் பெற்றோம்'' என்றார் அவர்.■

# உடல், ஆன்மா மற்றும் பூமிக்கான தோட்டம்

ப்ரீதி மேஹரா

*உங்கள் வீட்டுத் தோட்டம் ஆறுதலுக்கும் மகிழ்ச்சிக்கும் ஆதாரமாக இருக்கும்.*

ஒரு தோட்டத்தை பராமரிப்பது எப்படி என்று யாராவது சுருக்கமாகச் சொன்னால், அது விக்டோரியன் கவிஞர் ஆல்பிரட் ஆஸ்டின் கூறியதாக இருக்கும். "தோட்டக்கலையின் மகிமை: மண்ணில் கைகள், சூரிய ஒளியில் தலை, இயற்கையுடனான இதயம். ஒரு தோட்டத்தை வளர்ப்பது என்பது உடலுக்கு மட்டுமல்ல, ஆன்மாவுக்கும் உணவளிப்பதாகும்" என்று அவர் கூறுகிறார்.

எனவே, நீங்கள் வீட்டை கட்டுவதற்கு அல்லது தோட்டத்தை வளர்க்க முயற்சித்தால் சுற்றுச் சூழலுக்கு ஏற்றவாறு வைத்திருக்க விரும்புவது இயற்கை. தோட்டம் உள்ள பகுதியில் சுத்தமான காற்று இருக்கும். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் நிழல் தரும். அனைத்து வகையான பறவைகளையும் ஈர்க்கும். பட்டாம் பூச்சிகள், பூச்சிகள் மகரந்தச் சேர்க்கை செய்யும். இதனால் மண் வளம்பெறும்.

இயற்கையின் நுட்பமான சமநிலையை பராமரிக்கக்கூடிய நிலையான தோட்டத்தில் வைக்க சிறந்த தாவரங்களை எவை என்று நான் ஆராய்ச்சி செய்தேன்.

முதலில் நான் எளிதில் பராமரிப்பதற்கான தாவரங்கள் என்ன என்று பார்த்தேன். 15 அடி முதல் 20 அடி வரை உயரமாக வளரும், நீண்ட இறகுகள் கொண்ட, வெப்ப மண்டலங்களுக்கு ஏற்ற காட்டுப் பனை அல்லது பாக்கு மரம் நான் தேர்ந்தெடுத்தேன். இதற்கு தொடர்ந்து தண்ணீர் ஊற்றிவர வேண்டும் என்றாலும் இவை வெயிலிலும், நிழல்களிலும் இதை வளர்க்க முடியும். உயரமாகவும், பெரிய இலைகளைக் கொண்டவையாகவும் வளரும் மற்றொரு தாவரம் நீலக்கற்றாழை. இதற்கு பெரிதாக பராமரிப்பு தேவைப்படாது. மேலும் மிக குறைந்த அளவிலேயே தண்ணீர் செலவாகும். நிலத்திலும் சிறிய தொட்டியிலும் இதை வளர்க்க முடியும்.

போகன்வில்லா செடிகள் எந்த ஒரு வேலிப்பகுதியிலும் அடர்ந்து வளர்ந்து எளிதில் பரவக்கூடியது. இதை வளர்க்க குறைந்த அளவே நீர் செலவாகும். மேலும் இதை அவ்வப்போது சீராக வெட்டிவிட வேண்டும். அவ்வளவுதான். இவற்றுடன் சிலந்தி செடியையும் சேர்த்து வளர்க்கலாம். இது ஒரு மூலிகைச் செடியாகும். நச்சுக்காற்றை உள்வாங்கி, சுத்தமான காற்றை வெளிவிடும் தன்மை கொண்டது. அனைத்து வகை மண்ணுக்கும் ஏற்றது. சூரியஒளியைத் தாங்கும் செடியாகும். இவற்றுடன் நீண்ட மஞ்சள் மற்றும் பச்சைநிற இலைகளைக் கொண்ட பாம்புச் செடிகளையும் வளர்க்கலாம். இதற்கு குறைந்த பராமரிப்பே தேவைப்படும். உங்கள் வீட்டில் எல்லைப் பகுதியை அலங்கரிக்கும் வகையில் இதை வளர்க்கலாம்.

இப்போது குறைந்த பராமரிப்புள்ள, கவனத்தை ஈர்க்கும் தாவரங்கள் எவை என்று பார்த்தால் சதைப்பற்றுள்ள ஜேட் மற்றும் சதைப்பற்றுள்ள சோற்றுக்கற்றாழை செடிகள்தான் நினைவுக்கு வரும். வீட்டில் ஒரு பகுதியில் மூலிகைச் செடிகளையும், மண்ணிலிருந்து பறித்து சமைக்கும் காய்கறிச் செடிகளையும் வளர்க்கலாம். தோட்டக்கலை நிபுணர்கள் இதுபோன்ற பல தாவரங்களை பரிந்துரைக்கின்றனர். ஆனால், அவற்றில் துளசி, கற்றாழை, புதினா, ஓமம் மற்றும் கீரைச் செடிகளை வளர்க்கலாம் என்பதை நான் அறிந்துகொண்டேன். இவை எல்லா வகையான சமையலுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.



மிக அழகான பூக்கள் இல்லாமல் நாம் ஒரு தோட்டத்தை எப்படி வைத்திருக்க முடியும். குளிர் பருவநிலையில் ரோஜாக்கள் பூத்துக்குலுங்கும். ஆனால், அவை செழித்து வளர நல்ல சூரிய ஒளி தேவைப்படுகிறது. பீஸ் லில்லி காடுகளில் வளரும் ஒரு பச்சைத் தாவரம். அழகான வெள்ளைப் பூக்களையும் நீண்ட இலைகளையும் கொண்டது. குறைந்த பராமரிப்பே தேவைப்படும். அனைத்து ஒளிநிலைகளிலும் செழித்து வளரும்.

நீங்கள் அனைவரையும் கவரும் வகையிலான பூக்களை வளர்க்க ஆசைப்பட்டால், ஸ்ட்ரெலிட்சியா (தென்னாப்பிரிக்காவை பூர்விகமாகக் கொண்ட ஒரு தாவரம்) செடியை வளர்க்கலாம். இதன் பூக்கள் பறவையின் தலையை ஒத்திருக்கும். எனவே இதை சொர்க்கப் பறவை என்றும் கூறுவார்கள். இதற்கு வழக்கமாக தண்ணீர் தேவைப்படும். மேலும் பல்வேறு ஒளிநிலைகளைத் தாங்கக்கூடியது.

அதிக வாசனை தரும் சில பூக்களை நடுவதற்கு மறந்து விடாதீர்கள். குறிப்பாக மல்லிகை. இதற்கு அதிக தண்ணீர் தேவைப் பட்டாலும் அதை தொட்டியில் வளர்த்தால் கடினமாக வேரூன்றி வளரும். செம்பருத்தி மற்றொரு நல்ல தேர்வாகும். இதற்கும் தண்ணீர் அதிகம் தேவை.

இப்போது உங்கள் தோட்டம் தயாராக உள்ளது. ஆனால், தோட்டத்தின் சுற்றளவு என்ன? அவற்றைச் சுற்றி மரங்கள் இருக்க வேண்டாமா? இது நீங்கள் வசிக்கும் பகுதியைச் சார்ந்தது. எனினும் நீங்கள் தேர்வு செய்ய பலவகை மரங்கள் உள்ளன. உயரமான, நிழல்தரும் மருத்துவ குணம் நிறைந்த வேப்ப மரத்துடன் தொடங்குவோம். இதை ஆல்ரவுண்டர் என்றும் அழைப்பார்கள். ஆரஞ்சு-மஞ்சள் நிறப்பூக்களுடன் கூடிய பசுமையான அசோகா மரத்தையும் இதற்கு இணையாக கூறலாம். இவை பார்ப்பதற்கே அழகாக இருக்கும்.

குல்மஹர் மரத்தை நட்டால் அது உங்கள் வீட்டுக்கு நிழல் தருவதுடன், வண்ணமயமான பூக்களுடன் அழகுற காட்சியளிக்கும். பாரிஜாதம் என்னும் மரம் இல்லாமல் வீடோ அல்லது காலனியோ அமையாது. குளிர்காலத்தில் தரையில் விழும் பூக்களும், அதன் நறுமணமும் நம்மை சொர்க்கத்துக்கே அழைத்துச் செல்லும்.

பலரும் தங்கள் வீட்டின் முன்புறத்தில் அல்லது முற்றத்தில் பழமரங்களை வைத்திருக்க விரும்புகிறார்கள். அதுவும் ஒரு நல்ல யோசனைதான். பெரும்பாலானவர்களுக்கு மாமரம் நடுவது பிடிக்கும். ஏனெனில் அதில் நூற்றுக்கணக்கான ரகங்கள் உள்ளன. நாம் இருக்கும் பகுதியில் செழித்து வளரும் ரகத்தை நாம் தேர்வுசெய்து கொள்ளலாம். நாவல் பழமரமும் ஒரு அருமையான தேர்வாகும். ஏனெனில் அது உயரமாக வளர்கிறது, நிழல் தருகிறது. மேலும் நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. கொய்யா மரமும் வெப்பமான கோடை மாதங்களில்கூட அற்புதமாக வளரும். ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது.



தண்ணீரைச் சேமிக்கவும், மண்ணை ஈரப்பதாக வைத்திருக்கவும் தெளிப்பான்கள் அல்லது நீர்ப்பாசன வாளிகளுக்குப் பதிலாக சொட்டுநீர் பாசன முறையை பின்பற்றுவது விவேகமானதாக இருக்கும். இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை தவிர்க்கவும். அதற்கு பதிலாக வேம்பு, புளித்தண்ணீர் அல்லது பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் தாவரங்களை பயன்படுத்துவது நல்லது. நீங்கள் இயற்கை வேளாண்மை தொழில்நுட்பங்களைப் படித்திருந்தால், சமையலறைக் கழிவுகள் மற்றும் மண்புழு உரத்தை பயன்படுத்தினால், உங்கள் வீட்டில் சுற்றுச்சூழலுடன்கூடிய பசுமையை பராமரிப்பதில் சாதனை படைத்துவிட்டீர்கள் எனலாம்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# சுகாதார வசதிகளைப் பெற்ற மேற்கு வங்க கிராமங்கள்

ஜெய்ஸ்ரீ




*PDG கணேஷ் பட் மற்றும் அவரது மனைவி வித்யா ஒரு கிராமத்தில் பயனாளிகளுடன்.*

RC கல்கத்தா சௌரிங்கீ, RID 3291, அதன் சர்வதேச கூட்டாளியான RC நியூயார்க் மெட்ரோ சிட்டி, USA மற்றும் TRF ஆகியவற்றின் உலகளாவிய மானியத் திட்டத்தினால் மேற்கு வங்கம் முழுவதும் உள்ள கிராமங்களில் 500க்கும் மேற்பட்ட வீடுகளில் கழிப்பறைகள் பொருத்தப் பட்டுள்ளன. “கிராமங்களில் திறந்தவெளியில் மலம் கழித்தல் அதிகமாக இருந்தது, இதனால் பெண்களும் சிறுமிகளும் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர், அவர்கள் உடல்நல அபாயங்கள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைக்கு ஆளாக நேரிடுகிறது, மேலும் அவர்களின் கண்ணியம் மற்றும் சுயமரியாதையை பாதிக்கிறது’’ என்கிறார் சங்கத்தின் அறக்கட்டளை குழு தலைவர் விக்ரம் டான்டியா. இந்த கிராமங்களில் தனிநபர் வீடுகளில் கழிப்பறை அமைக்க சங்கம் முடிவு செய்தது.

பல குக்கிராமங்கள் கொல்கத்தாவில் இருந்து 100–200 கிமீ தொலைவில், சுந்தர்பன்ஸ், குல்தாலி, மக்ரஹத், பிஷ்ணுபூர், ராஜ்பூர் மற்றும் ஹவுராவில் அமைந்துள்ளன.

‘TRF விதிமுறைகளின்படி தேவைகள் மதிப்பீட்டை நாங்கள் செய்த போது, கழிப்பறைகளின் அவசர தேவை இருப்பதை நாங்கள் உணர்ந்தோம். பெண்களும் சிறுமிகளும் திறந்தவெளி குளத்தில் குளித்துக் கொண்டிருந்தனர். எனவே அந்த கிராமங்களில் எங்கள் திட்டத்தில் சமுதாய குளியல் வசதிகள் மற்றும் போர் குழாய்களை சேர்த்துள்ளோம்’’ என்று அவர் கூறுகிறார். குளியல் நிலையங்கள், ஒவ்வொன்றும் இரண்டு குளியலறைகளை கொண்டிருக்கும், இது பெண்களின் கண்ணியத்தைப் பாதுகாக்கும், மேலும் போர் குழாய்களில் இருந்து தண்ணீர் பெறப்படும். மொத்த திட்டச் செலவு $212,000 ஆகும், இது இரண்டு கட்டங்களில் அறக்கட்டளையால் வழங்கப்பட்டது. இது 500 கழிப்பறைகள், 19 சமுதாய குளியல் நிலையங்கள் மற்றும் 28 போர் குழாய்களை நிறுவ உதவியது. 2019-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, கோவிட் சமயத்தில் பல்வேறு சவால்களைச் சமாளித்து, ஜூலை 2024-ல் இத்திட்டம் முடிக்கப்பட்டது, இதனால் 17 கிராமங்களில் சுமார் 20,000 பேர் பயனடைகின்றனர்.

RID 3170-ன் PDG கணேஷ் பட், TRF-ன் தொழில்நுட்ப உறுப்பினராக திட்டப் பகுதிகளுக்குச் சென்றபோது, குளியல் நிலையங்கள் மற்றும் குழாய்கள் போன்ற பொது வசதிகளைப் பராமரிப்பதற்காக ஒவ்வொரு கிராமமும் ஒரு பராமரிப்பு நிதியை உருவாக்க பரிந்துரைத்தார். கிராமம் ஒன்றில் நடந்த கூட்டத்தில், ஒவ்வொரு நாளும் 1 ரூபாய் பங்களிக்க முடியுமா என்று பெண்களிடம் கேட்க, “அவர்கள் உடனடியாக ஒப்புக்கொண்டனர்.’’ இவ்வாறு பிறந்தது தான் ஹர் கர் ஹர் தின் ஏக் ரூபாய் திட்டம், அங்கு ஒவ்வொரு குடும்பமும் தினசரி 1 ரூபாய் பங்களித்து ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 25,000 ரூபாய்

பராமரிப்பு நிதியை திரட்டுகிறது. சராசரியாக ஒவ்வொரு கிராமத்திலும் சுமார் 80 குடியிருப்புகள் உள்ளன. “இந்த நிதியானது திட்டத்தை தன்னிறைவு பெறச் செய்கிறது, இது சிறிய பழுதுபார்ப்புகளை கவனித்துக் கொள்ளவும், பொதுவான வசதிகளை தொடர்ந்து பராமரிக்கவும் உதவுகிறது’’ என்கிறார் பட். பராமரிப்பு நிதியை டெபாசிட் செய்ய கிராமங்களில் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டன.

கையால் சுத்தம் செய்வதை தடுக்க, ஒரு சிவில் இன்ஜினியரான பட், வீடுகளில் உள்ள கழிவறைகளில் இருந்து வரும் மனிதக் கழிவுகளை தேக்கி வைக்க இரட்டை குழிகளை நிறுவ பரிந்துரைத்தார். ஒரு குழி நிரம்பும்போது கழிவு நீரை மற்றொரு குழிக்கு மாற்ற இரண்டு குழிகளுக்கு இடையே PVC வால்வுகள் பொருத்தப்பட்டன. கிராம மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கழிவறைகளை சுத்தமாக வைத்திருக்க கற்றுக் கொடுக்கப்பட்டது. WASH-ல் நிபுணரான கிரீன் EDP ப்ரொமோஷன் அண்ட் சர்வீஸஸ் நிறுவனத்திடம் பயிற்சி மற்றும் திட்டங்களின் மேற்பார்வையை RC கல்கத்தா சௌரெங்கீ அவுட்சோர்ஸ் செய்திருந்தனர். ரோட்டரி சமூகப் படை (RCC) மற்றும் ரோட்டகிட்ஸ் (Rotakids), கிராம குழந்தைகளுக்கான ரோட்டரி சங்கம் ஆகியவை கிராமங்களில் நிறுவப்பட்டு, உறுப்பினர்களுக்கு வசதிகளை மேற்பார்வையிடும் பணி ஒதுக்கப்பட்டது. ரோட்டரி சமூகப் படை உறுப்பினர்களுக்கு வங்கிக் கணக்குகளை இயக்கவும், பம்புகளை பழுதுபார்க்கவும், குழாய்களை சரிசெய்யவும் மற்றும் பிற பராமரிப்பு வேலைகளை செய்யவும் கற்றுக்கொடுக்கப்பட்டது என்கிறார் டான்டியா. திட்ட காலத்தில் கிராம மக்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு அமர்வுகளை சங்கம் ஏற்பாடு செய்தது. ■

# கோவாவில்
# ரோட்டரி செவிலியர் கல்விக் கழகம்

ரோட்டரி செய்திக் குழு



IPDG *நசீர் போர்சத்வாலா கோவாவில் நர்சிங் நிறுவனத்தைத் திறந்து வைத்தார்.*


மான்ட்ஃபோர்ட் அகாடமி, V J ஃபெசிலிடி பன்ஜிம் உடன் இணைந்து, கொர்லிம், கோவா-வில் உள்ள மான்ட்ஃபோர்ட் அகாடமியில் செவிலியர் கல்விக் கழகத்தைத் தொடங்கியுள்ளது RC பனாஜி, RID 3170. இதன் தொடக்க விழாவில் RID 3170 IPDG நாசிர் போர்சட்வாலா, உள்ளூர் MLA உள்ளிட்டோர் பங்கேற்றார்கள்.

இந்த முன்னெடுப்பு கிராமப்புற, நலிந்த பின்னணியிலிருந்து வரும் இளைஞர்களுக்குச் செவிலியர் துறையில் தொழில் சார்ந்த பயிற்சி அளித்து, அவர்களுக்கு நம்பிக்கையான பணி வாய்ப்புகளை வழங்கவுள்ளது. தகுதியுள்ள மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

நவீன ஆய்வகம், வகுப்பறைகளில் வழங்கப்படும் இந்த ஓராண்டுப் படிப்பில் கோட்பாட்டைப் பயிற்றுவித்தல், ஆய்வகப் பயிற்சி, மருத்துவமனையில் மருத்துவப் பயிற்சி, மாணவர்களை மருத்துவ மனைகள், மருந்தகங்கள், நெடுநாள் பராமரிப்பு வளாகங்கள் போன்ற மருத்துவப் பராமரிப்பு அமைப்புகளில் வேலைக்கு ஆயத்தப்படுத்துதல் போன்றவை இடம்பெறுகின்றன. இந்தப் பயிற்சி மனித வள மேம்பாட்டு அறக்கட்டளை (HRDF), கோவா அரசாங்கத்தின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு இயக்குநரின் சான்றளிப்பைப் பெற்றுள்ளதால், இது நலத் துறை முழுவதும் ஏற்கப்படும், மாணவர்களுக்குப் பல பணி வாய்ப்புகள் கிடைக்கும். ■

# ஆரோக்கியமாகவும் நெகிழ்வாகவும் இருங்கள்

பரத் — ஷலன் சவூர்



சரியான ஏற்பாடுகளுடன் பாதுகாப்பு தொடங்குகிறது. முடிந்தவரை இளமையாக வாழ வேண்டும் என்பதே கொள்கையாக இருக்க வேண்டும். நம் உடலில், நமது வயதுக்கும் நமது குரோமோசோம்களுக்கும் இடையே 20 வருட வித்தியாசம் இருக்கலாம். உதாரணமாக, 40 வயதான ஒருவர் தனக்குள்ளேயே 60 அல்லது 20-ஆக இருக்கலாம். பரம்பரை மரபணுக்கள் மற்றும் ஆதாயமான வாழ்க்கை முறை ஆகியவை முக்கியமான வித்தியாசத்தை உருவாக்குகின்றன.

ஏரோபிக்ஸ், ஸ்ட்ரேச் மற்றும் ரெஸிஸ்டன்ட்ஸ் (வலிமை-பயிற்சி) ஒரு உயிரியல் இருதரப்பு முக்கோணத்தை உருவாக்குகிறது. உங்களால் முடிந்தவரை இந்த இருதரப்பு முக்கோணத்தை பராமரிக்கவும். நாம் முதுமையை நெருங்கும்போது இருதரப்பு முக்கோணம் சுருங்கிவிடும். ஆனால் இருதரப்பு முக்கோணத்தை தொடர்ந்து சமநிலைப்படுத்துவதன் மூலம், நமது வாழ்க்கை பயணத்தின் இந்த கட்டத்தை மிகவும் வசதியாகவும் மற்றும் வலியற்றதாகவும் மாற்ற முடியும்.

### சூரியநமஸ்காரங்கள் வேண்டாம்

நீங்கள் இதற்கு முன் உடற்பயிற்சி செய்ததே இல்லை என்றால், எங்கள் வழிமுறைகளைப் பின்பற்றும் கை அசைவு பயிற்சிகளுடன் தொடங்கலாம். மேலும் உங்கள் தசைகளை வளர்க்கவும் வலுப்படுத்தவும் உங்கள் உடல் எடையைப் பயன்படுத்துங்கள். புஷ்-அப்கள் மற்றும் புல்-அப்கள் தொடங்குவதற்கு ஒரு சிறந்த வழியாகும். எச்சரிக்கை: சூரியநமஸ்காரங்களை செய்ய வேண்டாம். அது தங்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே தொடங்கி இப்போது வரை பயிற்சியைத் தொடர்பவர்களுக்கு தான் நன்றாக வேலை செய்யும். சூரியநமஸ்காரம் முதுகுத்தண்டை நீட்டும், அதன்மேல் அழுத்தம் கொடுக்கும், அதனால் கடுமையான காயங்கள் ஏற்படலாம். செங்குத்து புஷ்-அப்கள் சிறந்தது. ஒரு கதவு-சட்டத்திற்கு எதிராக செங்குத்தாக நிற்கவும் - கால்களை விலக்கி நின்று, உங்கள் தோள்களை கதவு-சட்டத்திற்கு எதிராக சீரமைக்கவும். உங்கள் கைகளை நீட்டவும். அதை தோள்பட்டை மட்டத்தில் வைக்கவும். இப்போது, நீங்கள் காலியான கதவு இடத்திற்குள் தள்ளும்போது மூச்சை உள்ளிழுக்கவும். செங்குத்து நிலைக்குத் திரும்பும்போது மூச்சை வெளிவிடவும். செங்குத்தாகவோ அல்லது கிடைமட்டமாகவோ, தினமும் ஐந்து புஷ்-அப்களை செய்யுங்கள். அவை ஒரு முழுமையான உடற்பகுதி (மேல் உடல்) உடற்பயிற்சி மற்றும் நீங்கள் டம்பல்லுடன் உடற்பயிற்சி செய்யத் தொடங்கிய பிறகும் அவற்றைத் தொடரலாம்.

### உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள, தினமும் செய்யக்கூடிய சில எளிய பயிற்சிகள் இங்கே:

நிமிர்ந்து நின்று உங்கள் தலையை இடமிருந்து வலமாக சுழற்றுங்கள். 10 முறை செய்யவும். அதேபோல் வலமிருந்து இடமாக சுழற்றவும். உங்கள் இடது தோள்பட்டைக்கு ஏற்ப உங்கள் தலையை இடது புறமாக நகர்த்தவும். பின்னர் வலது தோள்பட்டைக்கு ஏற்ப தலையைத் திருப்பவும். இரண்டையும் 10 முறை செய்யவும். பலன்: கழுத்தின் முதுகுத்தண்டிற்கும் தலைக்கும் இருக்கும் இணைப்பை வலுப்படுத்தும். செயலில் இருக்கும்போது நீங்கள் சொடக்கு சப்தங்களை கேட்கலாம்.

உங்கள் தலையை உயர்த்தி, கூரையைப் பாருங்கள். உங்கள் வாயை 10 முறை அகலமாக திறக்கவும், பின்னர் மூடவும். பலன்: வாய் மற்றும் கழுத்தை வலிமையாக்கும் மற்றும் நெகிழ்வாக வைத்திருக்கும். இரட்டைத் தவடையைத் தடுக்க ஒரே சிறந்த வழி.

### வயிறு புடைக்காமல் தடுக்க உங்கள் வயிற்றை உள்ளிழுத்துக் கொள்ளுங்கள். சிட்-அப்ஸ்:

1) தரையில் படுத்து, முழங்கால்களை வளைத்துக் கொள்ளுங்கள், பாதங்கள் மற்றும் முழங்கால்கள் 12 அங்குல இடைவெளியில் தரையில் இணையாக இருக்க வேண்டும். உங்கள் தலைக்கு பின்னால் கைகளை வைக்கவும், முழங்கைகளை பக்கங்களிலும் வைக்கவும். உங்கள் தலை மற்றும் மேல் முதுகை உங்களால் முடிந்தவரை உயர்த்தவும். உங்கள்





வயிற்று தசைகள் மூலம் உங்கள் உடலை உயர்த்தவும்.

2) தரையைத் தொடாமல் உங்கள் மேல் உடலைக் இறக்கவும். 20 முறை செய்யவும்.

3) தரையில் இருக்கும்போது, தரையிலிருந்து 10 டிகிரி நிலையில் இரு கால்களையும் உயர்த்தவும். 30 விநாடிகள் அப்படியே வைத்திருங்கள். ஒரு நிமிடம் வைத்திருப்பத்தை குறிக்கோளாக கொண்டு பயிற்சி செய்யுங்கள். ஒரு முறை செய்யவும்.

4) இப்போது இரண்டு கால்களையும் 45 டிகிரியில் உயர்த்தவும். 30 வினாடிகளில் இருந்து ஒரு நிமிட நிறுத்தத்தை நோக்கி பயிற்சி செய்யுங்கள். ஒரு முறை செய்யவும். பலன்கள்: சிட்-அப்ஸ் (அல்லது க்ரஞ்சஸ்) மேல் வயிற்றின் தசைகளை பலப்படுத்துகிறது. நேரம் வைத்து செய்யும் பயிற்சி கீழ் வயிற்றை பலப்படுத்துகிறது.

**கீழ் முதுகெலும்பு மற்றும் முதுகு தசைகளை வலுப்படுத்த ஒரு உடற்பயிற்சி:**

தரையில் படுத்து, உங்கள் வலது காலை 60–75 டிகிரிக்கு உயர்த்தவும். உங்கள் கீழ் முதுகு நீட்சியை உணர வேண்டும். கீழே இறக்கவும். இப்போது, இடது காலை உயர்த்தவும். கீழே இறக்கவும். ஒவ்வொரு கால்களையும் 30 வினாடிகள் முதல் ஒரு நிமிடம் வரை மேலே வைத்திருங்கள். பலன்: கீழ் முதுகு வலியைத் தடுக்க உதவுகிறது. சிறிய முதுகுவலியுடன் கூட செய்யலாம் - நிவாரணத்திற்காக.

**எடை பயிற்சிக்கு முன்னதாக நன்றாக சீரமையுங்கள்**

முயற்சி/உடற்பயிற்சி மூலம் சுவாசம் சீரமைக்கப்படுகிறது. இயற்கையோடு பயணம் செய்யுங்கள். உடற்பயிற்சியின் முன்னும் பின்னும் மூச்சை உள்ளிழுக்கவும். முடித்த பிறகு மூச்சை வெளியே விடவும். இந்த தொடக்கத்திலிருந்து முடிவடையும் சுழற்சி ஒரு முறையாக ஆக கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு உடற்பயிற்சிக்கும் இலக்கு: 20 முறை. நீங்கள் பயன்படுத்தக்கூடிய எடைகளின் அளவு உங்கள் உடற்பயிற்சி நிலை, வயது மற்றும் பாலினத்துடன் தொடர்புடையது. பொதுவாக, ஆண்களுக்கு இரண்டு 10-பவுண்டு டம்பல் மற்றும் பெண்களுக்கு 5-பவுண்டு டம்பல்.

தோள்பட்டை அகலத்தில் கால்களை வைத்து நிற்கவும். நீங்கள் வேகத்தால் அல்லாமல் தசை வலிமையில் நகர்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்த ஒவ்வொரு முறைக்கு பிறகு சிறிது நேரம் நிலைநிறுத்தவும்,

1. மார்பு மற்றும் தோள்கள்: a) உங்கள் பக்கவாட்டில் டம்ப்பெல்களை வைக்கவும், உள்ளங்கைகள் பக்கவாட்டை நோக்கி இருக்க வேண்டும். b) பின்னர் கைகளை முன்னால் நீட்டி அவற்றை தோள்பட்டை உயரத்திற்கு உயர்த்தவும். c) தரைக்கு இணையாக தோள்பட்டை மட்டத்தில் கைகளை வெளிப்புறமாக நீட்டவும். d) செயல்நிலைக்கு மீண்டும் திரும்பவும். மெதுவாக தொடக்க நிலைக்கு திரும்பவும். 20 முறை செய்யவும்.
2. உங்கள் தலைக்கு மேல் செங்குத்தாக டம்பல்ஸை பக்க வாட்டாக உயர்த்தவும். மெதுவாக, தொடக்க நிலைக்கு திரும்புங்கள். அடுத்த முறைக்கு முன் சிறிது நேரம் இடைநிறுத்தவும். 20 முறை செய்யவும்.
3. தொடையை நோக்கிய டம்பலின் தொடக்க நிலையிலிருந்து, இடது டம்பெல்லை தலைக்கு மேலே உயர்த்தவும். மெதுவாகத் தொடக்க நிலைக்கு திரும்பவும். 20 முறை செய்யவும். இப்போது வலது கையால் 20 முறை செய்யவும்.
   **பலன்:** மார்பு, தோள்பட்டை, மேல் முதுகில் உள்ள தசைகள் மேம்படுத்தப்பட்டு, தோரணை மற்றும் உடல் மொழி மெருகேறும்.
4. இலகுவான எடைகளைப் பயன்படுத்துங்கள். மார்பு நிலைக்கு முன்னோக்கி கைகளை நீட்டி, டம்பல்ஸை சிறிய வட்டங்களில் இடதுபுறமாக 50 முறை சுழற்றவும். பின்னர், வலதுபுறம் 50 முறை சுழற்றவும். வேகப் பையை குத்துவது போன்ற குத்துச்சண்டை பயிற்சியிலிருந்து இந்தப் பயிற்சி உருவாகிறது.
   பலன்: கைகள் மற்றும் குறிப்பாக மணிக்கட்டுகளை வலுவாக்கும்.

இந்த குறைந்த எடையுடன் கூடிய எடை பயிற்சி உங்கள் தசைகளை பெரிதாக்காது. ஆனால் தசையை வலுப்படுத்தி அதன் தோரணையை மேம்படுத்தும்.

**விருப்ப சேர்க்கை:** இசை உங்கள் உடற்பயிற்சி திட்டத்திற்கு தாளத்தை சேர்க்கிறது. உடற்பயிற்சி மூலம் உங்கள் வாழ்க்கையை பராமரிக்கவும். அதுவும் உங்களுக்கான ஒரு “மரபு” தான்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.



# ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர்கள் 2024–25

*ரோட்டரி அறக்கட்டளையின் அறங்காவலர்கள், அறக்கட்டளையின் வணிகத்தை நிர்வகிக்கின்றனர். இது சேவை நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கும் ரோட்டரியின் தொண்டு நிறுவனமாகும். RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், அறங்காவலர்களை நியமிக்கிறார். இவர்கள் RI வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு பதவி வகிப்பார்கள். ஜூலை 1-ம் தேதி நான்கு புதிய அறங்காவலர்கள் பதவியேற்றுள்ளனர்.*




### மார்க் டேனியல் மலோனி

தலைவர் 2024–25
அறங்காவலர் 2021–25
RC டெகாடுர், அலபாமா

மார்க் மலோனி பிளாக்பர்ன் LLC சட்ட நிறுவனத்தின் முதல்வர். மலோனி மற்றும் ஷூப்பர்ட். இருவரும் வரிவிதிப்பு எஸ்டேட் திட்டமிடல் மற்றும் வேளாண் சட்டத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

மலோனி, 2019–20-ல் RI தலைவராக பணியாற்றியவர். கோவிட் தொற்றுக்காலத்தில் முதல் முறையாக நடைபெற்ற மெய்நிகர் மாநாட்டு கூட்டத்துக்கு தலைமைவகித்தவர். 1980 முதல் ரோட்டேரியனாக இருந்து வருகிறார். RI இயக்குநராகவும், TRF அறங்காவலர் மற்றும் துணைத் தலைவராகவும் இருந்தவர். மேலும் 2003–04-ல் RI தலைவராக இருந்த ஜோனாதன் மஜியாக்பேவின் உதவியாளராகவும் பணியாற்றியவர்.


மலோனியின் மனைவி கேய், அவரது சட்ட நிறுவனத்தில் வழக்குரைஞர் மற்றும் டே பிரேக் டெகாடுர் ரோட்டரி சங்க உறுப்பினர் மற்றும் முன்னாள் தலைவர். இருவரும் பால் ஹாரிஸ் கூட்டாளிகள், அறக்கட்டளையின் ஆதரவாளர்கள். பெருநன்கொடையாளர்கள், பெக்வெஸ்ட் (Bequest) சங்க உறுப்பினர்கள்.



### ஹோல்கர் நாக்

TRF தலைவர் 2024–25
அறங்காவலர் 2022–26
RC ஹெர்சோக்டம் லாயன்பர்க்-மோல்ன்
ஜெர்மனி

ஹோல்கர்நாக், நாக் கேஜி என்னும் ரியல் எஸ்டேட் நிறுவனம் மற்றும் 1868-ல் நிறுவப்பட்ட நாக் பேக்கரி என்டர்பிரைசஸ் என்னும் குடும்ப நிறுவனத்தின் உரிமையாளராக இருந்தவர். 1993-ம் ஆண்டு முதல் ரோட்டரி உறுப்பினர். RI தலைவர், பொருளாளர், இயக்குநர், மதிப்பீட்டாளர், பல்வேறு குழுக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர், CoL பிரதிநிதி, உதவித்தொகை மற்றும் பரிசுப் பொருள்களுக்கான ஆலோசகர், கற்றல் வசதியாளர் என பல பதவிகளில் இருந்தவர். நாக் மற்றும் அவரது மனைவி சுசேன் இருவரும் சேர்ந்து 40-க்கும் மேற்பட்ட ரோட்டரி இளைஞர் பரிமாற்ற நிகழ்வுகளை நடத்தியுள்ளனர். TRF-ன் பெரு நன்கொடையாளர்கள். பால் ஹாரிஸ் சங்கம் மற்றும் பெக்வெஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்கள்.



### லாரி லன்ஸ்ஃபோர்டு

துணைத் தலைவர் 2024–25
அறங்காவலர் 2021–25
RC கன்சாஸ் சிட்டி-பிளாஸா
மிஸ்ஸௌரி

லாரி லன்ஸ்ஃபோர்டு பெர்ன்ஸ்டின்-ரெய்ன் அட்வடைசிங் நிறுவனத்தின் நிர்வாக துணைத் தலைவர் மற்றும் தலைமை நிதி அதிகாரி. ரோட்டரி மீது அவருக்கு இருந்த ஆர்வம் காரணமாக கல்லூரி நாட்களிலேயே, அதாவது 1982-ல் அவர் ஆஸ்திரேலியாவுக்கான ரோட்டரி அறக்கட்டளை யின் தூதுவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1991-ல் லன்ஸ்ஃபோர்டு ரோட்டரியில் சேர்ந்தார். அவர் 2022–23-ம் ஆண்டில் அறங்காவலர்களின் துணைத் தலைவராகவும் இருந்தார். RI-க்காக ரோட்டரியை மேம்படுத்தும் குழுவில் நான்கு ஆண்டுகள் சேவையாற்றினார்.

லன்ஸ்ஃபோர்டு மற்றும் அவரது மனைவி ஜில் இருவரும் பெரு நன்கொடையாளர்கள். பயனாளர்கள் மற்றும் பெக்வெஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்கள். அவர், தனது மாவட்டத்தின் பால் ஹாரிஸ் சொசைட்டி மற்றும் போலியோ பிளஸ் சொசைட்டியின் பட்டய உறுப்பினராக உள்ளார். சிறந்த சேவைக்கான TRF-ன் பாராட்டுச் சான்றிதழையும், தன்னலமில்லாத சேவைக்கான விருதையும் பெற்றவர்.



### ஆன்-பிரிட் அஸிபோல்

அறங்காவலர் 2024–28
RC ஃபலூன் கொப்பர்வாகன்
ஸ்வீடன்

ஆன்-பிரிட் அஸ்போல், டலார்னா மாகாண கவுன்சிலராக பலமுறை பதவி வகித்தவர். ஸ்வீடன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து ஓய்வுபெற்றவர். 1993-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். அவரது சங்கத்தின் முதல் பெண் உறுப்பினர். அஸிபோல் பெரு நன்கொடையாளர். பால் ஹாரிஸ் கூட்டாளி, பால் ஹாரிஸ் சங்க உறுப்பினர். சிறந்த சேவைக்கான பாராட்டுச் சான்றிதழ் பெற்றவர்.



### மார்தா பீக் ஹெல்மன்

அறங்காவலர் 2022–26
RC பூத்பே ஹார்பர், மைன்

மார்டி (மார்தா) ஹெல்மன், தனது வாழ்க்கையை பெரும்பாலும் வணிக

நிர்வாகிகளுக்கான எழுத்தாளராகவும், மெக்ராவ்-ஹில் மற்றும் அமெரிக்க நிர்வாக சங்க பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். பின்னர் ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் அறக்கட்டளைத் தலைவராகவும் பணியாற்றினார். இந்த அறக்கட்டளை வளரும் நாடுகளில் பள்ளிகளை கட்டுவதற்கு உதவியது, இளைஞர்களுக்கு உதவித் தொகைகளை வழங்கியுள்ளது.

புயல் உள்ளிட்ட பேரழிவினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்கியுள்ளது. இஸ்தான்புல்லில் உள்ள பாஹ்சேஷர் பல்கலைக்கழகத்தில் புதிய ரோட்டரி மையம் அமைப்பதற்கு வால்டர் அறக்கட்டளை TRF அறக்கட்டளையுடன் இணைந்து செயல்பட்டுள்ளது.

ஹெல்மெனும் அவரது மறைந்த துணைவியார் பிராங் இருவரும் 2003-ம் ஆண்டில் பூத்பே ஹார்பர் ரோட்டரி சங்கத்தில் இணைந்தனர். பிராங், ரோட்டரி அமைதிப் பரிசுக்கான முன்முயற்சி குழுவின் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

மேலும் புதிய அமைதி மையத்தை தேர்வு செய்யும் குழுவிலும் அவர் பணியாற்றியுள்ளார். ஹெல்மென் ஒரு AKS உறுப்பினர். பால் ஹாரிஸ் சங்கம் மற்றும் போலியோ பிளஸ் சங்கத்தின் உறுப்பினர். அவரும் பிராங்கும் TRF-ன் பாரம்பரிய சங்கத்தின் பட்டய உறுப்பினர்களாவர்.



## சிங்-ஹூய் பிராங் ஹார்ங்

அறங்காவலர் 2024–28
RC பஞ்சியோ வெஸ்ட், தைவான்

பிராங் ஹார்ங், 1988-ம் ஆண்டில் தாம் நிறுவிய டிராஜோன் பல்மருத்துவ நிறுவனத்தின் தலைவராக உள்ளார். 1993ம் ஆண்டு, தன் சார்ந்த ரோட்டரி சங்கத்தின் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். ஹார்ங் மற்றும் சுவாங் இருவரும் AKS உறுப்பினர்கள். பிராங் தன்னலமில்லா சேவைக்கான விருது மற்றும் சிறந்த சேவைக்கான TRF-ன் பாராட்டுச் சான்றிதழ் பெற்றவர்.



## சுன்-வூக் ஹியுன்

அறங்காவலர் 2023–27
RC சியோல்-ஹன்கூ, கொரியா

சுன்-வூக் ஹுயுன், சியோலை அடிப்படையாக்க் கொண்டு செயல்பட்டு வரும் ஆசியாவில் மிகப்பெரியதான கிம் அண்ட் சாங் சட்ட நிறுவனத்தின் மூத்த பங்குதாரர்.

1991-ம் ஆண்டு தன் ரோட்டரி சங்கத்தில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். RI பயிற்சித் தலைவர் RIPR மற்றும் HOC உறுப்பினர் மற்றும் 2016-ல் சியோலில் RI-ன் சட்ட ஆலோசகர் என பல பதவிகளை வகித்துள்ளார். கொரியாவில் ரோட்டரி அறக்கட்டளையின் இயக்குநராகவும் அவர் இருந்து வருகிறார். அவர் ஒரு AKS உறுப்பினர்.




## ஜென்னிஃபர் ஜோன்ஸ்

அறங்காவலர் 2023–27
RC விண்ட்ஸர்-ரோஸ்லாண்ட்
ஒன்டாரியோ

ஜென்னிஃபர் ஜோன்ஸ், ஒன்டாரியோவில் அமைந்துள்ள ஒரு ஊடக நிறுவனத்தின் நிறுவனர். ஜோன்ஸ் 2022–23-ல் RI தலைவராக இருந்தார். ரோட்டரியின் வரலாற்றில் தலைவராக பதவி வகித்த முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றவர். இவர் ரோட்டரியின் தன்னலமற்ற சேவைக்கான விருது மற்றும் TRF-ன் சிறந்த சேவைக்கான பாராட்டு பத்திரமும் பெற்றவர்.

ஜோன்ஸ், குடும்ப மருத்துவரான நிக் கிரயாசிச் என்பவரை மணந்தார். அவர்கள் இருவரும் AKS உறுப்பினர், பால் ஹாரிஸ் சங்கம் மற்றும் பெக்வெஸ்ட் சங்க உறுப்பினர் என்கிற முறையில் TRF-ஐ ஆதரித்து வருகின்றனர்.



## கோர்டன் மெக்கினலி

அறங்காவலர் 2024–28
RC குயின்ஸ்ஃபெர்ரி சவுத்
ஸ்காட்லாந்து

கோர்டன் மெக்கினலி, 1984-ம் ஆண்டில் தமது 26 வது வயதில் ரோட்டரியில் சேர்ந்தார். 2023–24-ல் RI தலைவராக இருந்தார். கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் RI-ன் தலைவர் மற்றும் துணைத் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார். அவரும் அவரது மனைவி ஹெதர் இருவரும் பார்டர்லாண்ட்ஸ் (பாஸ்போர்ட் குழு) உறுப்பினர்களாவர். இருவரும் பால் ஹாரிஸ் கூட்டாளிகள். பெரு நன்கொடையாளர்கள். TRF-பயனாளர்கள் மற்றும் பெக்வெஸ்ட் சங்க உறுப்பினர்கள்.



## அகிரா மிகி

அறங்காவலர் 2021–25
RC ஹிமேஜி, ஜப்பான்

அகிரா மிகி ஒரு பல்மருத்துவர். கடந்த 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம், 20-ம் நூற்றாண்டின் முக்கிய பேரழிவான ஹான்ஷின்-அவாஜி பூகம்பத்துக்குப் பிறகு மக்களின் துயர் துடைப்பு பணிகளில் தம்மை அவர் ஈடுபடுத்திக் கொண்டார். மிகி, 1981-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். ஜப்பான் இளைஞர் பரிமாற்ற குழுவின் இயக்குநராகவும் அவர் இருந்து வருகிறார்.

TRF-ன் சிறப்புமிக்க சேவைக்கான பாராட்டுச் சான்றிதழ் பெற்றவர். அவரும் அவரது மனைவி சிஹாருவும் AKS உறுப்பினர்கள். TRF-பயனாளர்கள் மற்றும் பெரு நன்கொடையாளர்கள்.



### இஜியோமா பேர்ள் ஒகோரோ

அறங்காவலர் 2024–28
RC போர்ட் ஹார்கோர்ட், நைஜீரியா

இஜியோமா பேர்ள் ஒகோரோ, 1999-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். RI கற்றல் வசதியாளர், பிராந்திய ரோட்டரி ஒருங்கிணைப்புக் குழுவின் உதவியாளர், உதவித்தொகை மற்றும் பெரும் பரிசுகளுக்கான ஆலோசகர் மற்றும் End Polio Now குழுவின் பிராந்திய துணைத் தலைவர் என பல பதவிகளை வகித்தவர். ரோட்டரியின் சிறப்பு மிக்க சேவைக்கான விருது மற்றும் போலியோ இல்லாத உலகத்துக்கான பிராந்திய சேவை விருது பெற்றவர்.

ஒகோரோ மற்றும் அவரது கணவர் கிங்ஸ்லி இருவரும் பெரு நன்கொடையாளர்கள். பெக்வெஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பயனாளர்கள். அவர்களும் அவர்களின் இரு குழந்தைகளும் பால் ஹாரிஸ் கூட்டாளிகள்.




### பரத் பாண்ட்யா

அறங்காவலர் 2022–26
RC போரிவிலி, இந்தியா

பரத் பாண்ட்யா லேப்ராஸ் கோபிக் அறுவைச்சிகிச்சை நிபுணர். அவரும் அவரது மனைவியும் மகப்பேறு மருத்துவருமான மாதவி இருவரும் மும்பையில் மருத்துவமனையை நிர்வகித்து நடத்தி வருகின்றனர். பரத் பாண்ட்யா, 1989-ல் தன் ரோட்டரி சங்கத்தில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தவர்.


RI இயக்குநர், பொருளாளர், பிராந்திய ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர், கற்றல் வசதியாளர் என பல பதவிகளை வகித்தவர். அவர் ரோட்டரியின் உறுப்பினர் சேர்க்கை, திட்டமிடல், தலைமைப் பண்பு வளர்த்தல் மற்றும் மாநாட்டு மேம்பாட்டுக்குழு மற்றும் இந்தியாவின் போலியோ பிளஸ் குழுவிலும் சேவையாற்றி இருக்கிறார். 2023–24-ம் ஆண்டு TRF துணைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். தமது மாவட்டத்தின் பால் ஹாரிஸ் சொசைட்டியின் பட்டய உறுப்பினர். தன்னலமற்ற சேவைக்கான விருது மற்றும் சிறந்த சேவைக்கான TRF-ன் பாராட்டுச் சான்றிதழ் பெற்றவர். அவரும் மனைவி மாதவியும் ரோட்டரி அறக்கட்டளையின் பெரு நன்கொடையாளர்கள்.



### கிரெக் E போட்

அறங்காவலர் 2022–26
RC எவர்கிரீன், கொலராடோ

கிரெக் போட், ஓய்வுபெற்ற சான்றிதழ் பெற்ற பொது கணக்காளர் மற்றும் நிதி மேலாண்மை நிபுணர். 1982-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். அவர் RI துணைத் தலைவராகவும், இயக்குநராகவும் பணியாற்றினார். தன்னலமற்ற சேவைக்கான விருது, TRF-ன் சிறப்புமிக்க சேவைக்கான பாராட்டுப் பத்திரம் பெற்றவர். அவரும் அவருடைய மனைவி பாம் இருவரும் பெரு நன்கொடையாளர்கள். AKS உறுப்பினர்கள். பால் ஹாரிஸ் மற்றும் பெக்வெஸ்ட் சங்கங்களின் உறுப்பினர்கள்.



### கார்லோஸ் சாண்டோவால்

அறங்காவலர் 2023—27
RC சான் நிகோலாஸ் டீ லோஸ் கார்ஸா மெக்ஸிகோ

கார்லோஸ் சாண்டோவால், எரிசக்தி துறையில் முன்னணியில் உள்ள, மெக்ஸிகோவில் உள்ள எக்ஸான் மொபில் நிறுவனத்தின் முக்கிய விநியோகஸ்தராகவும் உள்ள ஆர்சான் கார்ப்பொரேஷன் நிறுவனத்தின் தலைவர். 1975-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். மறைந்த தமது மகன் கார்லோஸின் நினைவாக மெக்ஸிகோ, டொமினிகன் குடியரசு மற்றும் கொலம்பியாவில் உள்ள மகளிர் தொழில்முனைவோரை நோக்கமாகக் கொண்ட, சமூக, பொருளாதார திட்டங்களை ஆதரிக்கும் TRF-க்கு அவர் நேரடி பரிசுத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்.

சிறப்பான சேவைக்காக TRF-இன் பாராட்டுச் சான்றிதழ் பெற்றவர். அவரும் அவரது மனைவி மார்தா இருவரும் AKS-ன் பிளாட்டினம் அறங்காவலர் வட்ட உறுப்பினர்களாக அறக்கட்டளையை ஆதரிக்கின்றனர். அவரது மறைந்த பெற்றோர் யூஃப்ராசியோ மற்றும் அவுரேலியா இருவரும் AKS உறுப்பினர்களாக இருந்தவர்கள். அவர், மறைந்த தமது மகனை AKS வட்டத்தின் கௌரவ உறுப்பினராக நியமித்துள்ளார்.



### டென்னிஸ் J ஷோர்

அறங்காவலர் 2023–27
RC ஹாவ்தோர்ன், ஆஸ்திரேலியா

1980-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்த டென்னிஸ் ஷோர், எண்டௌவ்மென்ட், முக்கிய பரிசுகள் குழு ஆலோசகராகவும், ஆஸ்திரேலியாவில் ரோட்டரி அறக் கட்டளையின் துணைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். RIPR பதவியை பல முறையும், மாவட்ட CoL பிரிதிநிதி பதவியை இரண்டுமுறையும் வகித்துள்ளார்.

ஷோர் மற்றும் அவரது மனைவி லிண்டா இருவரும் பெரு நன்கொடையாளர்கள் மற்றும் பெக்வெஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்கள். பால் ஹாரிஸ் மற்றும் போலியோ பிளஸ் சொசைட்டியின் உறுப்பினர்கள். ரோட்டரி அறக்கட்டளை சிறந்த சேவைக்கான ராய்ஸ் அபே விருதையும், சிறந்த சேவைக்கான விருது மற்றும் பாராட்டுச் சான்றிதழ் பெற்றவர்.

### ஜான் ஹுயூகோ

பொதுச் செயலாளர், RC கியீவ், உக்ரைன்
(இவரைப் பற்றிய தகவல்கள் ரோட்டரி நியூஸ் ஜுலை 2024 இதழில் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குனர்கள் குழு பக்கத்தில் வெளிவந்துள்ளது.)

# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி

TRF-கவனப் பகுதி: RY 2024–25க்குத் தெற்கு ஆசியாவிலிருந்து மிகப் பெரிய பரிசு முன்னெடுப்புக் குழு உறுப்பினர்கள். ரோட்டரி நியூஸ் ஜூலை இதழில் RISAO தவறுதலாக ஒரு முழுமையற்ற பட்டியலை வழங்கியிருந்தது.

| Name | Area of Focus | E-mail ID |
|---|---|---|
| PDG Deepak Gupta | Environment | *deepak_gupta41@hotmail.com* |
| PDG Suresh Hari | Community Economic Development | *3190dgoffice2018@gmail.com* |
| PDG Parag Sheth | Health | *info@ambicasalt.com* |
| PDG Maullin Patel | Water, Sanitation and Hygiene | *maullin63@yahoo.com* |

**RI உரிமம் பெற்ற வணிகர்கள்**

RI-ன் தோற்றத்தையும் அதன் இரக்கமுள்ள முயற்சிகளையும் வலுவாக்குவதற்கு நாம் பல விதங்களில் உதவலாம். அவற்றுள் முதன்மையான ஒரு வழி, ஒப்புதல் அளிக்கப்படாத, உரிமமின்றி உருவாக்கப்படும் ரோட்டரி பொருட்களின் உற்பத்தி, விற்பனையைக் கட்டுப்படுத்துவது. ரோட்டரியின் அடையாளங்கள், சின்னங்களுடனான பொருட்களை உருவாக்கி விற்பதற்கென உலகெங்கும் 130க்கும் மேற்பட்ட வணிகர்களுக்கு உரிமம் அளித்துள்ளது ரோட்டரி. இந்த வணிகர்களுடைய அனைத்து விற்பனையிலிருந்தும் ஒரு பகுதி ரோட்டரிக்குச் செலுத்தப்படுகிறது, இது சங்கங்கள், மாவட்டங்களுக்கு வழங்கப்படும் செயல்பாட்டுச் சேவைகளுக்கு உதவுகிறது.

நம் உரிமம் பெற்ற வணிகர்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் ரோட்டரியை ஆதரிக்கிறீர்கள், தரமான, பிராண்டைக் கொண்ட பொருட்கள் உங்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்து கொள்கிறீர்கள். உரிமமின்றி உருவாக்கப்படும் பொருட்கள் ரோட்டரியின் பிராண்ட் அல்லது தோற்றத்தைப் பாதிக்கலாம். நம் விற்பனையாளர்களின் பட்டியலை நீங்கள் இணையத்தில் காணலாம். உரிமம் பெறாத வணிகர்களைப்பற்றி RI உரிமப் பிரிவுக்குப் புகார் செய்யலாம்.

**Details of licensed vendors from India are given below:**

| Licensed Vendors | Address | E-mail ID | Website |
|---|---|---|---|
| Better Services | Office #350, A To Z Industrial Estate, Ganpatrao, Kadam Marg, Lower Parel (W), Mumbai | *better@betterservices.org* | *www.better.in* |
| Mohan Plastics Limited | 63, Roshanara Plaza Complex, Roshanara Road, New Delhi | *mohanplastic@yahoo.com/ info@mohanindustries.org* | *www.mohanin-dustries.org* |
| Tej Brothers | 4806/24, Bharat Ram Road, Darya Ganj, New Delhi | *tejbrothers@gmail.com* | *www.tejbrothers.com* |
| Sacheti & Company | Shiwaji Nagar, Opposite Jain Temple, Kishangarh, Rajasthan | *sacheti_co@usa.net* | *www.sacheti.org* |
| Naveen Enterprises | No 11, Naveen Mansion, 11th Main Road, Aurobindo Marg, 5th Block, Jayanagar, Bangalore | *naveen@naveenenter-prises.net* | N/A |
| BK AD Gifts | 130 C, Kottur Road, Palayamkottai, Tirunelveli, Tamil Nadu | *netparkkannan@gmail.com* | N/A |

மேலும் தகவல்களுக்குத் தொடர்பு கொள்க: rilicensingservices@rotary.org அல்லது 847–866–4463, அல்லது, ராஜேஷ் ஆனந்த், மேலாளர், சட்டம் பணி புரிதல், *rajesh.anand@rotary.org.*

# சங்கச் செய்திகள்
















### RC பன்வெல் சென்ட்ரல் — RID 3131

PDG கிரீஷ் குணெ தலைமை யிலான மூன்று காஷ்மீர் அறுவைச் சிகிச்சை முகாம்களில் பங்கேற்ற ரோட்டரியன் மருத்துவர்களை அப்போதைய DG மஞ்சு ஃபாட்கே பாராட்டினார்.

### RC சீர்டி சாய்பாபா — RID 3132

தில்லி ஓம் சாய் சாதனா சன்ஸ்தான் ஆதரவில், சீர்டி ஸ்ரீ சாய்பாபா மிகைச் சிறப்பு மருத்துவமனைக்கு இரண்டு பல் அறுவைச் சிகிச்சை நாற்காலிகள் கொடையளிக்கப்பட்டன.

### RC பாம்பே கன்டிவ்லி — RID 3141

என் சங்கம் பசுமைச் சங்கம் திட்டத்தின்கீழ், மானவ் சேவா விருத்தாசிரமம் என்ற முதியோர் இல்லத்தில் 55 பழ மரங்கள் நடப்பட்டன.

### RC கோகாபெட் எகம் — RID 3150

4-மாதத் தையல் பயிற்சி வழங்கி 20 பெண்களுக்கு ஆற்றல் அளிக்கிற, ஓர் ஆண்டில் 1,000 பெண்களுக்குக் கராத்தே கற்றுத்தருகிற எகம் மைதிலி திட்டத்தை DG சரத் சௌத்ரி தொடங்கி வைத்தார்.

### RC விஜயநகர் ஹெரிடேஜ் — RID 3160

ஹொஸ்பெட்டில் அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பள்ளிப் பைகள் வழங்கப்பட்டன.

# சங்கச் செய்திகள்


RID 3261


RID 3182


RID 3231


RID 3250


RID 3234

**RC தீர்த்தஹள்ளி — RID 3182**

சங்கத் தலைவர் பரத் கொட்லு, பிறர் முன்னிலையில், புதுப்பிக்கப்பட்ட ரோட்டரி பவன், அதன் சிறார் பள்ளியைத் தொடங்கிவைத்தார் IPDG B C கீதா.

**RC வேலூர் ஏஞ்சல்ஸ் — RID 3231**

காட்பாடி பாரதி நகர் பொது நூலகத்தின் படித்தல் மையத்திற்கு நாள்தோறும் நூற்றுக்கணக் கானோர் வருவதால், ரூ.9,000 மதிப்புள்ள நூல்கள் அதற்குக் கொடையளிக்கப்பட்டன.

**RC சென்னை முகப்பேர் — RID 3234**

நகர அவையின் நோளம்பூர் பிரிவில் 60 பாதுகாப்புப் பணியாளர்களுக்குக் கைத் துண்டு, சோப், படுக்கை விரிப்பைக் கொண்ட பாதுகாப்புப் பொதிகள் வழங்கப்பட்டன.

**RC பாட்னா கன்கர்பாக் — RID 3250**

பியாவூ திட்டம் நாள்தோறும் 1,000க்கும் மேற்பட்டோரைக் கோடை வெய்யிலிருந்து பாதுகாப்பதற்கெனத் தூய, குளிர்ந்த குடிநீர், கொண்டைக் கடலை,வெல்லம் வழங்கியது.

**RC ராய்ப்பூர் — RID 3261**

ஈக்விடாஸ் அறக்கட்டளை, டிஜிபெர்ஃபார்ம் HT மீடியாவுடன் இணைந்து நடத்தப்பட்ட ரத்த தான முகாமில் சுமார் 40 பெண்கள் ரத்தத்தைக் கொடையளித்தார்கள். சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றும் நடத்தப்பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

*The* **ROTARY ACTION PLAN**

# INCREASE OUR IMPACT

## A CONVERSATION WITH TUSU TUSUBIRA

"A good project is a catalyst for sustainable change."




Advt

Learn what your club can do at
**rotary.org/actionplan**

**MEET FRANCIS "TUSU" TUSUBIRA.** A founding partner of an information and communications technology consulting firm, Tusubira is a member of the Rotary Club of Kampala-North, Uganda, and served on Rotary's Strategic Planning Committee when our Action Plan was developed. He's also a member of The Rotary Foundation Cadre of Technical Advisers.

### Q. The Action Plan asks us to increase our impact. How should we think about doing that?

**TUSU:** Here's an analogy: When your children are in school, it's easy to get excited about a great grade or test result — the success of that immediate moment. But as parents, we know we also need to take the long view. What kind of people are our children becoming? What will they do for the world after we're gone?

Real impact is something that resonates well beyond the work we do on a project. It's sustainable long after we have left the scene.

This definition of impact requires us to think about service in a different way. It is not what we give to communities that creates sustainability. It's whether the project enables communities to take ownership and drive the transformation on their own after we are gone. A good project is a catalyst for sustainable change.

### Q. Why is it important to measure our impact?

**TUSU:** So we can be smarter about what we need to start doing, what we need to continue doing, and what we need to stop doing. It's essential to the future of our organization. Major funding agencies demand evidence of impact. Young people — the future of Rotary — have grown up asking institutions and organizations for greater accountability and transparency.

### Q. What changes are you already seeing in Rotary?

**TUSU:** I'm heartened that Rotary is identifying consistent ways to assess and measure results. This way, we'll all be on the same page when it comes to planning projects and identifying impact.

I'm also seeing a greater appetite for risk. Less proscriptive funding will promote smart risk-taking and will encourage people to learn from — rather than fear — setbacks.

There's greater support for clubs to focus their efforts on a few key areas, rather than trying to do too many projects. Instead of starting by asking "What are the deficits here?" clubs are learning how to build on a community's strengths and seeking out what I call the "pressure points" — areas where targeted, concentrated work can set in motion a cascade of change.

I'm also excited by the new Programs of Scale initiative. These projects have the longer time frame necessary to make a sustainable difference. Most important, Programs of Scale incentivize clubs to work together and recognize them for doing that. If you want to provide clean water sources, why would you want 50 clubs doing 50 different projects? We united against polio. Let's unite to solve other challenges facing our world.

### Q. What makes you feel optimistic?


**TUSU:** Our work eradicating polio proves we are an organization capable of genuine and lasting impact. And I'm excited about the rising generation of Rotarians and Rotaractors who are bringing their commitment to sustainable solutions. We can do this.

Besides that, my name, Tusubira, literally means "we hope"!



# வியக்கவைக்கும் தற்செயல்கள்

LBW



TCA ஸ்ரீனிவாசராகவன்

தற்செயல் நிகழ்வுகள் எப்போதும் என்னை வியக்க செய்யும். இந்த மாதிரி நிகழ்வுகள் நடப்பதற்கான நிகழ்தகவு பூஜ்ஜியத்திற்கு அருகில் இருக்கும். கணிதத்தில், கிரேக்க எழுத்துக்களின் ஐந்தாவது எழுத்து, e, இதைக் குறிக்கிறது. இதற்கு மிக அற்பமானது என்று பொருள். கடந்த 30 ஆண்டுகளில் இவை எனக்கு மூன்று முறை நடந்துள்ளன, அவற்றில் இரண்டு கடந்த மாதம் ஒரே விமானத்தில் நடந்தன. 1993 இல் நடந்த பழைய நிகழ்வு ஒன்றிலிருந்து ஆரம்பிக்கிறேன்.

நானும் என் மனைவியும் ஹெல்சின்கிக்கு சென்று கொண்டிருந்தோம். 9 மற்றும் 6 வயதுடைய எங்கள் இரு மகன்களும் எங்களுடன் இருந்தனர். அவர்கள் எப்படி என்னுடன் வந்தார்கள் என்பது நீண்ட கதை. ஆனால் அது தற்செயல் நிகழ்வு அல்ல. நாங்கள் பிராங்க்பர்ட்டில் இருந்து இணைப்பு விமானம் மூலம் செல்ல வேண்டியிருந்தது. இரண்டு மணி நேரம் செலவிட இருந்தது, சோஃபாக்களில் அமர்ந்து எப்படி நேரத்தைக் கொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தோம், அப்போது ஒரு பெரிய வெள்ளைக்காரர் பக்கத்து சோபாவில் வந்து அமர்ந்தார். சிறிது நேரம் கழித்து, அவர் என் மகன்களுடன் அரட்டை யடிக்கத் தொடங்கினார், அவருடைய உச்சரிப்பிலிருந்தே அவர் அமெரிக்கர் என்று என்னால் அறிய முடிந்தது. சிறிது நேரம் கழித்து என் மனைவி பக்கம் திரும்பி அவரிடம் பேச ஆரம்பித்தார். அவர் எங்கிருந்து வருகிறார் என்று என் மனைவி கேட்க, அவர் அமெரிக்கா என்றார். அமெரிக்காவில் எங்கே என்று கேட்க, அவர் துல்சா, ஓக்லஹோமா என்றார்.

இது என் மனைவியின் ஆர்வத்தை பெரிதும் தூண்டியது, மேலும் தனது சகோதரரும் அங்கு வசிப்பதாக அந்த நபரிடம் கூறினார். துல்சாவில் சரியாக எங்கே என்று அவர் கேட்க, என் மனைவி டைரியை எடுத்து முகவரியைப் படித்தார். அந்த மனிதன் என் மனைவியின் சகோதரனின் பெயரைக் கேட்க, அவர் அவரிடம் சொன்னார். அப்போதுதான் அவர் தனது இருக்கை யிலிருந்து ஏறக்குறைய குதித்து பேச ஆரம்பித்தார். நாங்கள் முற்றிலும் குழப்பமடைந்தோம். அவர் என் மனைவியின் அண்ணனின் பக்கத்து வீட்டுக்காரர் என்றார். அவரைச் சந்தித்ததற்கான சாத்தியக்கூறுகளைப் பற்றி நாங்கள் ஆச்சரியப்படுவதை இன்றுவரை நிறுத்தவில்லை. சற்று யோசித்துப் பாருங்கள். வாய்ப்புகள் என்ன? அதுதான் தற்செயல்.

இரண்டாவது தற்செயல்கள் முதல் நிகழ்வின் தேதிக்கு கிட்டத்தட்ட 31 ஆண்டுகள் பிறகு நடந்தது. இப்போது எங்கள் மூத்த மகன் சுவிட்சர்லாந்தில் வசித்து வந்தான், நாங்கள் எங்கள் பேரனின் பிறந்த நாளுக்கு அவர்களை பார்க்கச் சென்றோம். விமானத்தில் நான் இரண்டு பிரபலமான திரைப்படங்களைப் பார்த்தேன் – தி லாஸ்ட் ரைபிள்மேன் மற்றும் தி கிரேட் எஸ்கேப். இங்கு என்ன நடந்தது தெரியுமா? அவை கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருந்தது. கதாநாயகர்கள் மட்டும் வித்தியாசமாக இருந்தனர், ஆனால் இருவரும் சூப்பர் ஸ்டார்கள். இருப்பினும், கதைகள் அச்சு அசலாக ஒரே மாதிரி இருந்தன. அவை இரண்டும் எவ்வாறு பொருந்தின என்பது அசாதாரணமானது. நீங்கள் விமானத்தில் செல்லும்போது, அதில் இரண்டு சூப்பர் ஸ்டாருடன் ஒரே மாதிரியான படங்களைப் பார்க்க வாய்ப்புகள் என்ன? உங்களால் அதைக் கணக்கிட முடிந்தால், தயவுசெய்து எனக்குத் தெரியப்படுத்தவும்.

இன்னும் பல மற்றும் மிகப்பெரிய தற்செயல்கள் உள்ளன. நான் கூகிள் மூலம் தேடி, டஜன் கணக்கான வற்றை கண்டேன். எனக்கு மிகவும் பிடித்த தற்செயல் வயலட் ஜெசாப் என்ற பெண்ணைப் பற்றியது. அவர் மூன்று கப்பல்களில் பணியாளராக இருந்தார், அவர் கப்பலில் இருந்தபோதே முன்று கப்பலும் மூழ்கியது, அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு முறையும் அவர் உயிர் பிழைத்தார். அது மட்டுமல்ல: மூன்று கப்பல்களும் ஒரே நிறுவனத்திற்கு சொந்தமானவை. அவற்றில் ஒன்று டைட்டானிக்!

மற்றொரு வினோதமான தற்செயல் நிகழ்வு முதல் ஐந்து அமெரிக்க ஜனாதிபதிகளில் மூன்று பேர் ஜூலையில் இறந்தனர், அவர்களில் இருவர் அமெரிக்க சுதந்திர தினமான ஜூலை 4 அன்று இறந்தனர். வரலாற்றில் விவரிக்க முடியாத பல தற்செயல்கள் உள்ளன. இறுதியில், இது அனைத்தும் வாய்ப்புகளால் தான் அமைகிறது. நீங்களும் உங்கள் வருங்கால மனைவியும் ஒரே படுக்கையில் பிறந்தவர்கள் என்று சொன்னால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? சாத்தியமே இல்லை அல்லவா? இல்லை. இதுவும் ஒருமுறை நடந்திருக்கிறது.

ஆனால் இந்த வினோதமான தற்செயல் போட்டியில் வெற்றி பெற்றவர் இரண்டு அணுகுண்டுகளில் இருந்து உயிர் பிழைத்தவர் தான். ஒரு அசாதாரண வாய்ப்பால், குண்டு வீழ்ந்தபோது அவர் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி இரண்டிலும் இருந்தார். ஜப்பானிய அரசாங்கம் இதை அங்கீகரித்துள்ளது என்று கூகுளில் ஒரு பதிவு கூறுகிறது. அவர் 93 வயது வரை வாழ்ந்தார் மற்றும் 2010-ல் இறந்தார். தெளிவாக, சந்த் கபீரின் கவிதை சொல்வது போல், கடவுளின் பாதுகாப்பு உள்ளவனை யாராலும் கொல்ல முடியாது. மூழ்கிய மூன்று கப்பல்களில் இருந்து தப்பித்த பெண்மணியைப் போல! ■



Rotary
District 3212

THE MAGIC OF ROTARY



# Project Punch is now a National Project

## Project Punch- Spoken English Programme For Student Teachers



A 3-Day Spoken English Programme

85 PLUS Programmes in 29 months

As on 1 July, 2024
No. of Occurrences
**87**
No. of Beneficiaries
**9586**

**200% Increase in placements**
at V.O.C College of Education, Tuticorin and Arasan Ganesan College of Preceptors, Sivakasi, Tamil Nadu (2023 - 2024)

**98% of positive transformation**
(in students) as reported by Loyola College of Education, Chennai, Tamil Nadu (2024 - 2025)

PROJECT PUNCH



## What is Project Punch?

Project Punch is a 3-day Spoken English Training Programme by Rotary Club of Virudhunagar for student teachers (B.Ed. students) to improve their Communicative English and Public Speaking skills.

Project Punch is now a National Project. We serve beyond RID 3212 and Tamil Nadu. Recently, our team of Trainers travelled to Maharashtra and delivered 2 programmes of Project Punch to the students and the teachers of Eklaya adivasi bhatakya vimukta jati-jamati va magasvargiya sevabhavi sanstha, Manchi Hill (Maharashtra).

Do you wish to conduct **Project Punch?** Contact:
Project Chairman
Rtn. A.Shyamraj
97502 07464



IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Aug 24/ Rotary-2

ADVT.

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

FORMERLY ICG

**ADMISSIONS OPEN 2024-25** www.iisuniv.ac.in

SCHOLARSHIPS FOR Meritorious and National Level Sports Achievers

Scan me for more Information

Toll Free No. **1800 180 7750**

## UG / PG / Ph.D. & Professional Programmes

3-Level Certificate/Diploma/ Advanced Diploma
Value Added COSD Programmes
alongwith Degree Programmes



### Undergraduate Programmes
- B.A. ▪ B.Sc. ▪ B.Com.
- B.A. / B.Sc. / B.Com. Hons.

### Specialized Programmes
- B.Com. Hons. (Proficiency in CA/CS)
  Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS
- B.Com. Hons. (Applied Accounting and Finance) Accredited by ACCA UK

### UG-Professional Programmes
- B.A. (J.M.C.) ▪ B.F.A. ▪ B.C.A.
- B.Sc. Hons. (Data Analytics & AI)
- B.Sc. Hons. (Home Science)
- B.Sc. Hons. (Multimedia & Animation)
- B.Sc. (Fashion Design)
- B.Sc. (Jewellery Design & Technology)
- B.B.A.
- B.B.A. (Aviation & Tourism Management)
- B.Voc. - UGC Approved

### Integrated Programmes
- B.A. B.Ed. ▪ B.Sc. B.Ed.* - NCTE Approved
- B.Sc. - M.Sc. (Nano Science & Technology)

### Post Graduate Programmes
- M.A. ▪ M.Sc. ▪ M.Com. ▪ M.F.A. ▪ M.S.W. ▪ M.Sc. Home Sc.
- M.B.A.* (Semester Based) ▪ M.A/M.Sc Yogic Sciences
- DBT supported M.Sc. Biotechnology program

Professional Diploma in Clinical Psychology (RCI approved)

### Co-Educational Programmes
@ IISU Block, IIIM Campus, Mahaveer Marg, Mansarovar
- B.C.A. ▪ B.B.A. ▪ B.Lib.I.Sc.
- M.A. (Digital Media & Communication) ▪ M.C.A.*
- M.B.A.* (Dual Specialization, Trimester based)

*MBA/MCA AICTE Approved

### Short Term Courses
- Cyber Security and Cyber Law (Online)
- Certificate Course in Textile Design

### Research Programmes
- Ph. D. : Admission through Research Entrance Test**

**Exemption for NET-qualified applicants

### Preparatory classes along with UG / PG Programmes
- Civil Services ▪ NET ▪ US CMA

### College of Physiotherapy & Allied Health Sciences
(Co-Educational) @ IIS, Sitapura Campus
- B.P.T. ▪ M.P.T. ▪ Ph.D.

### DISTINGUISHING FEATURES
- Hostel with Modern Amenities
- Training and Placement Support
- Well Placed Alumnae
- Student Diversity (from India & Abroad)
- International Students Office
- Centrally Located
- Wifi Enabled Campus

FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT: ARTS & SOCIAL SCIENCES 93588 19994 SCIENCE 93588 19995 COMMERCE & MANAGEMENT 93588 19996 PHYSIOTHERAPY 89493 22320

Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302 020 Rajasthan (India) +91 141 2400160 / 161, 2397906 / 907 admissions@iisuniv.ac.in

ADVT.